


# தாய் தந்தை


**எழுத்தாளர்:** மூன்று மதத்திற்கும் ஒருவரே குரு,
ஆன்மீக சாம்ராஜ்ஜிய சக்கரவர்த்தி, நூறு கிரந்தங்கள் எழுதியவர்,
இந்து ஞான தர்ம பிரதாதா, குறிப்பிடத்தக்க எழுத்தாளர்,
த்ரைத்த சித்தாந்த ஆதிகர்த்தா

## ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆச்சார்ய பிரபோதானந்த யோகீஸ்வரர்


**தமிழாக்கம்**
எஸ். பிரகாஷ்


**பதிப்பாளர்**
**இந்து ஞான மேடை**
(Estd. in 1978 – Regd. No.: 168/2004)

த்ரைத்த வருடம் - 47 முதல் அச்சிடுதல்: ஆகஸ்ட் - 2021

பிரதிகள்: 1000 விலை: /-

**எஸ். பிரகாஷ்,**
குப்பம், ஆந்திர பிரதேஷ்.
(கைபேசி: +91-9441915291)

**ப. ர. சந்திரமோகன்,**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9840381879)

**கே.செந்தில்குமரன்**
சென்னை, தமிழ் நாடு.
(கைபேசி: +91-9841355578)

# தாய் தந்தை



தாய் தந்தை என்ற வார்த்தை தெரியாதவர்கள் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கின்றேன். ஆனால் தாய் தந்தை என்றால் யார் என்று தெரிந்தவர்கள் எத்தனை பேர்? என்று கேள்வி கேட்டால், என் பார்வையில் பதில் சிறிது கடினமாக இருக்கும். இது என்ன கேள்வி? தாய் தந்தை தெரியாதவர்கள் யாராவது இருப்பார்களா! என்று பல பேர் சொல்லலாம். இங்கு நமக்கு தெரியாத விஷயம் எவ்வளவோ இருக்கின்றது என்று சொல்கின்றோம். இதுவரை மனிதர்களுக்கு எவ்வளவு தெரிந்ததோ, தெரியாதது எத்தனை இருக்கின்றதோ விவரித்துக் கொண்டால், மனிதனுக்கு தெரிந்ததை விட தெரியாதது எத்தனையோ இருக்கின்றது என்று சொல்லலாம். நமக்கு இதுவரை தெரிந்ததை பற்றி சொல்லிக் கொள்ளலாம். ஒரு மனிதன் பிறந்தான் என்றால் அவனுக்கு தாய் தந்தை கண்டிப்பாக இருக்க வேண்டும். விஞ்ஞானம் பிரகாரம் ஒரு பெண் கர்ப்பபையில் இருக்கின்ற அண்டம் எனப்படும் ராஜோ செல்களினால், ஆண் விந்துடன் இணைந்தால் ஸ்ரீக்கு கர்ப்பம் ஏற்பட்டு, அந்த கர்ப்பத்தில் சிசு 9 மாதங்கள் வளர்ந்து, பத்தாவது மாதத்தில் பிரசவிக்கும் என்று விஞ்ஞானிகள், பௌதிக சாஸ்திர வெக்தர்கள் சொல்கின்றார்கள். அப்படி பிறக்கப்பட்ட சிசுவுக்கு அவரை பெற்றெடுத்த ஸ்ரீ தாய் என்னும், அந்த ஸ்ரீ கர்ப்பத்திற்கு விந்து செலுத்திய புருஷனை தந்தை என்று சொல்லப்படுகின்றது. இது உலகத்திற்கு தெரிந்த சத்தியம். சமூகத்தில் ஒரு ஸ்ரீ மனைவியாக இருக்கும்போது, கணவனாக புருஷன் இருக்கின்றான் ஸ்ரீ புருஷர்கள் மனைவி கணவனாக இருந்து, அவருக்கு ஏற்பட்ட சந்தானத்திற்கு தாய் தந்தையாக செயல்படுகின்றார்கள்.

சமூகத்தில் எந்த மனிதனுக்கும் உன்னுடைய தாய் தந்தை யார்? என்று கேள்வி கேட்டால் அவர் பதட்டப்படாமல் தன்னுடைய தாய் தந்தை பெயர் சொல்வார்கள். எந்த அப்ளிகேஷன் பார்மில் கூட பேரண்ட்ஸ் இருக்கின்ற இடத்தில் ஒரு ஸ்ரீ பெயரை தாய் ஸ்தானத்தில், ஒரு புருஷன் பெயரை தந்தை ஸ்தானத்தில் எழுதுவார்கள். தாய் தந்தை சஜிவமாக இருந்தால், அல்லது இறந்து போய் பல காலங்கள் ஆனாலும், மனிதன் தன் தாய் தந்தை பெயரைத்தான் சொல்வார்கள். மேலும் தாய் தந்தை விஷயத்தில் சிறிதளவு கூட தவறு செய்ய மாட்டார்கள். மனிதன்

இறந்து போகும் வரை தன்னுடைய தாய் பெயரையும், தந்தை பெயரை மறந்து போக மாட்டார். உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் நெருங்கிய சம்பந்தப்பட்டவர்கள் தாய் தந்தை தான். ஒரு மனிதன் கஷ்டத்தில் சிக்கிக்கொண்டபோதும், ஆபத்துக்கு குறியாகும் போதும், இறந்தபோதும் அவரைப் பற்றி எல்லோரையும் விட அதிகமாக கவலைப்படுகின்றவர்கள் தாய் தந்தை தான் என்று சொல்லலாம். இவன் என்னுடைய மகன் என்று தாய் தந்தைக்கு இருக்கின்ற அன்பு, இவர்கள் என்னுடைய தாய் தந்தை என்று குமாரனுக்கு கூட இருக்கும். இது எப்போதும் உலகத்தில் இருக்கின்ற நடைமுறை தான். இந்த நடைமுறை எந்த ஞானம் இல்லாத மனிதனுக்கும் இருக்கும். எல்லா விஷயத்தில் புத்தி குறைவானவனாக இருந்தாலும் தாய் தந்தையை அடையாளிப்பான், அவர்களை மறந்து போக மாட்டான். இந்த விதமாக உலகத்தில் தாய் தந்தைக்கும் அவர்களுடைய சந்தானத்திற்கும் அனுபந்தம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த பந்தத்தை யாரும் முறியடிக்க முடியாது.

வெளியே சமூகத்தில் இன்னும் சில பேர்கள் தாய் தந்தைகளை அதிக பூஜ்ஜிய எண்ணத்துடன் பார்க்கின்றார்கள். தாய் தந்தையை தெய்வமாக எண்ணிக் கொண்டு பூஜை செய்கின்றவர்களும் கூட இருக்கின்றார்கள். அவர்களுடைய கணக்கு பிரகாரம் பூஜை செய்கின்றவர்களில் முதலாவது தாய், இரண்டாவது தந்தை, மூன்றாவது குரு, நான்காவது கடவுள் என்று சொல்வார்கள். அப்படிப்பட்டவர்கள் எண்ணத்தில் தந்தை விட தாய் பூஜைக்கூறியவர் என்னும், தாய் தந்தை பிறகு குரு என்னும், குரு பிறகு கடவுள் என்று சொல்வார்கள். பார்த்தீர்களா இவர்களுடைய கணக்கில் கடவுளே இறுதியானவர் ஆகிவிட்டார். மற்ற சில பேர்கள் மாத்ரு தேவோபவஹ, பித்ருதேவோபவஹ, ஆச்சாரிய தேவோபவஹ என்று சொல்லி இறுதிக்கு கடவுளை முழுமையாக விட்டு விட்டார்கள். இந்த மூவரையும் பூஜை செய்தால் போதும் என்று சொல்கின்றார்கள். சிலர்கள் தாய் தந்தையை மீறிய தெய்வம் இல்லை என்று காலையில் எழுந்தவுடன் தாய் தந்தை பாதங்களை நமஸ்கிரிக்கின்றவர்களும் கூட சிலர் இருக்கின்றார்கள். இந்த விதமாக தாய் தந்தை என்பவர்கள் சமூகத்தில் தனித்துவமான ஸ்தானத்தில் இருந்தாலும், சிலர் பார்வையில் மட்டும் தெய்வத்திற்கு சமமாக இருக்கின்றார்கள்.

தாய் தந்தை மீது புனிதமான எண்ணத்துடன் இருக்கின்றவர்கள் சிலர்களில் அந்த புனிதம் இல்லாமல் போகின்றது. தாய் தந்தை தன் குழந்தைகளிடம் அளவுக்கு மீறி நடந்து கொள்வார்கள். அதே விதமாக தாய் தந்தை நல்லவராக இருந்தாலும் அவர்களுடைய குழந்தைகள் தாய் தந்தைகளிடம் மிக மோசமாக நடந்து கொள்வார்கள். குழந்தைகள் நல்லவர்களாக இருந்தாலும் தாய் தந்தை குழந்தைகளிடம் அளவுக்கு மீறி நடந்து கொள்பவர்கள் மிக குறைவாக இருப்பார்கள். மேலும் தாய் தந்தை நல்லவர்களாக இருந்தாலும் குழந்தைகள் அவரிடம் மோசமாக நடந்து கொள்பவர்கள் பலபேர் இருக்கின்றார்கள் என்று சொல்லலாம். தாய் தந்தை குழந்தைகளை எவ்வளவோ அன்புடன் வளர்த்துவது பிரக்ருதியின் விருப்பம் என்று சொல்லலாம். அவர்களுக்கு இருக்கின்ற தன் குழந்தைகளை நன்றாக வளர்த்து, கல்வி மற்றும் புத்திகளை சொல்லிக் கொடுத்து சமூகத்தில் கௌரவமாக வாழ வேண்டும் என்று ஒவ்வொரு தாய் தந்தைகள் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதன் போலவே சிரமப்பட்டு தான் சாப்பிடாமல் இருந்தாலும் தன் குழந்தைகள் சாப்பிட வேண்டும் என்று பார்ப்பார்கள். அதன் போல எவ்வளவோ கஷ்டப்பட்டு பிள்ளைகளை பெரியதாகும் வரை வளர்த்திய பிறகு, அந்த பிள்ளைகள் தன் தாய் தந்தைகளை மோசம் செய்து, தங்கள் சுகத்தை மட்டும் பார்த்துக் கொண்டவர்கள் பல பேர் சமூகத்தில் இருக்கின்றார்கள். தாய் தந்தை மீது அன்பு இல்லாமல் இருந்தாலும் பரவாயில்லை மற்றும், இளம் வயது வரும் வரை அவர்களுக்கு எந்த குறைபாடு இல்லாமல் வளர்த்தியதற்கு பதிலாக தாய் தந்தையை பொறுப்பாக பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை பிள்ளைகளுக்கு இருக்கும். அப்படிப்பட்ட பொறுப்பை மறந்து போவது உலக நடைமுறையில் அநியாயம் ஆகும். வெளியே சமூகத்திற்கு சம்பந்தப்பட்ட நீதி நியாயம் பிரகாரம் பார்த்தால் வயதாகிவிட்டதால் தனக்குத் தானே வாழ முடியாத தாய் தந்தையை வளர்க்காமல் போவது, அவர்களுடைய நல்லது கெட்டதை பார்க்காமல் போவது அக்கிரமம், அந்நியாயம் ஆகும். தாய் தந்தை கெட்டவராக இருந்தாலும் அவரை பாதுகாப்பது சமூகத்தில் அவர்களுடைய சந்தானத்திற்கு ஏற்ற பொறுப்பு. இதுவரை வெளியே சமூக சம்பந்தமான விதானத்தை சொல்லிக் கொண்டோம். இனி போனால் ஆன்மீக சம்பந்தமான விதானம் பிரகாரம் சொல்லிக் கொண்டால் இந்த விதமாக இருக்கின்றது.

தாய் தந்தை என்பவர்கள் இரண்டு ரகமாக ஒவ்வொரு மனிதர்களுக்கு இருப்பார்கள். இரண்டு ரகமான தாய் தந்தை என்ன? எல்லோருக்கும் இருப்பது ஒரே தாய் ஒரே தந்தை அல்லவா! இந்த விதமாக யாராவது கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால்! விவரமாக சொல்லிக் கொண்டால் பிரக்ருதி விதானத்தில் இருக்கின்ற தாய் தந்தை வேறு, பரமாத்மா விதானத்தில் இருக்கின்ற தாய் தந்தை வேறு. வெளியே சமூக சம்பந்தம் பிரகாரம் தெரிகின்ற தாய் தந்தை பிரக்ருதி விதானத்தில் இருக்கின்றவர்கள். அதன் போலவே உள்ளே ஆன்மீகத்திற்கு சம்பந்தப்பட்ட தெரியப்படாத தாய் தந்தை வேறு என்று சொல்லலாம். வாஸ்தவமாக ஒவ்வொருவருக்கு தெரிகின்ற மற்றும் தெரியாத இரண்டு ரகமான தாய் தந்தை இருக்கிறார் என்று சொல்லலாம். ஆன்மீகம் தெரிந்தவர்கள் இரண்டு ரகமான தாய் தந்தைகளை தெரிந்து கொண்டு இருப்பார்கள். ஆன்மீகம் தெரியாதவர்கள் தெரிகின்ற தாய் தந்தையை மட்டும் தெரிந்து கொண்டிருப்பார்கள். ஆன்மீகம், ஆன்மீகம் அல்லாதது என்றால் உங்களுக்கு அர்த்தமாகாமல் போகலாம். அதனால் அர்த்தமாகும் முறையில் சொல்லிக் கொள்ளலாம். ஒவ்வொரு மனிதனுக்கு ஒரு வாழ்க்கை இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். வாழ்க்கை என்பது பிறப்பில் ஆரம்பமாகி, மரணத்தால் முடிகின்றது. பிறந்ததிலிருந்து இறப்பு வரை கடந்த காலத்தை ஒரு ஜீவித காலம் என்று சொல்கின்றோம். பிறப்பில் புதிய தேகம் வருகின்றது, மரணத்தில் இருந்த தேகம் போகின்றது. ஒரு முறை புதிய தேகம் வந்தாலும், பிறகு மரணத்தில் பழைய தேகம் போனாலும், தேகத்தில் நிவாசிக்கின்ற ஜீவன் மட்டும் அப்படியே இருக்கின்றான். இதனைப் பொறுத்து வாழ்க்கையில் ஜீவன் சாஸ்வதமானவன் தேகம் அசாஸ்வதம் என்று தெரிந்து போகின்றது. சஜீவமாக இருக்கின்ற ஒரு மனிதனை பிரித்துக் கொண்டு பார்த்தால் ஜீவன் வேறு, தேகம் வேறு என்று தெரிகின்றது. **ஜீவன் + தேகம் = ஒரு மனிதன்,** இதனை யாரும் அல்லவென்று சொல்ல முடியாது. ஜீவன், தேகம் என்னும் இரண்டு பாகமாக இருக்கின்ற மனிதனில் தேகம் சில காலம் மட்டும் இருக்கும். மேலும் தேகம் நாசனமானாலும் ஜீவன் நாசனம் ஆகாதவன் என்னும், அவன் பிறகு ஜென்மத்தில் மற்றொரு புதிய தேகத்தை அடைகின்றான் என்று தெரிகின்றது. ஒரு ஜீவிதத்தில் உள்ள தேகத்தை, ஜீவனை எடுத்துக் கொண்டு பார்த்தால் இரண்டுக்கும் தாய் தந்தை இருக்கிறார் என்று தெரிகின்றது. ஒரு சஜீவ தேகத்திற்கு தாய்

தந்தை இருக்கிறார் என்று சொல்லினால், இந்த பக்கம் தேகத்திற்கு அந்த பக்கம் ஜீவனுக்கு இருவருக்கும் தாய் தந்தை இருக்கிறார்கள் அல்லாவா!

ஒரு சஜீவமான மனிதனுக்கு பலானவர்கள் தாய் தந்தை என்று சொல்கின்றோம். அதன் போலவே அவரை காட்டுகிறோம். ஒரு பணிக்காக விண்ணப்பிக்கும் போது அதில் கூட தாய் தந்தை பெயர்கள் என்ற இடத்தில் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகள் பெயர் மட்டும் எழுதுகின்றோம். ஒவ்வொரு மனிதனுக்கு தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தை பெயர்களே தெரியும். மேலும் தனக்கு தாய் தந்தை யாரோ, அவர்களின் பெயர் என்னவென்று தெரியாது. ஒவ்வொரு மனிதன் தன்னுடைய தேகத்தை நான் தான் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறான். மேலும் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தையாக சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். வாஸ்தவமாக தன்னுடைய தாய் தந்தை வேறு என்று யாருக்கும் தெரியாது. தன்னுடைய தேகத்திற்கு தாய் தந்தை ஆனவர்களை தவறாக, தன்னுடைய தாய் தந்தையாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சமூகத்தில் எவ்வளவு பெரிய நிலையில் இருந்தாலும், நாட்டுக்கு ராஜாவாக இருந்தாலும், மந்திரியாக இருந்தாலும், விஞ்ஞான வெக்தர்களாக இருந்தாலும், மேதாவியாக இருந்தாலும் யாரானாலும், எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் தன்னுடைய தாய் தந்தையை மட்டும் தெரிந்து கொள்ள முடியாது. தனக்கு தாய் தந்தை இருக்கிறார் என்ற விஷயம் கூட மறந்து போனார்கள். வாஸ்தவமாக தன்னையே மறந்து போய், தன்னுடைய தேகத்தை தானாக நினைத்துக் கொண்டு, தான் நீட்டமானவன், குள்ள மாணவன், கருப்பானவன் அல்லது வெள்ளையாக இருக்கின்றவன் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றான். வாஸ்தவமாக எந்த மனிதனும் தான் தேகம் அல்லவென்று, தன் வேறு, தன்னுடைய தேகம் வேறு என்று ஞாபகம் வைத்துக் கொள்ளாமல் தன்னுடைய தேகமே நான் தான் என்று நினைத்துக் கொண்டு முழுமையாக நம்பி, தன்னுடைய தேகம் கொண்ட தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தை என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

பிறந்த ஒவ்வொரு மனிதனும் அதன் போல நினைத்துக் கொண்டிருப்பதினால் மனிதனுடைய உண்மையான தாய் தந்தை யாரோ மனிதனுக்கே தெரியாமல் போனது. அப்படிப்பட்ட நேரத்தில் கடவுளே சுயமாக ஜீவன் உடைய தாய் தந்தையை பற்றி

தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பகவத்கீதா சொல்லிய சந்தர்ப்பத்தில் ஜீவனுடைய தாய் தந்தை யாரோ கடவுளே தெரிவித்தார். பகவத்கீதா குணத்ரயவிபாக யோகத்தில் **3,4** சுலோகங்கள் இதன் போல் இருக்கின்றது.

*3)மம யோநிர் மஹத் பிரம்ம தஸ் மிந் கற்பம் ததாம்யகம் I*

*ஸம்பவ ஸர்வ பூதாநாம் ததோபவதி பாரத II*

*4)ஸர்வ யோநிஷீ கௌந்தேய மூர்தய சம்பவந்தியா I*

*தாஸாம் பிரம்ம மஹத் யோநிரஹம் பீஜப்பிரதம் பிதா II*

இந்த சுலோகம் எண்ணம் பிரகாரம் கடவுள் கூறியது இதன் போல இருக்கின்றது. “விசாலமான, பெரியதான பிரக்ருதி ஸ்ரீ சொரூபமான யோனியாக (கர்ப்பமாக) இருக்கின்றது. அதனை நான் கர்ப்பம் வரும்படி செய்கின்றேன். அதனால் அனைத்து ஜீவராசிகள் பிறக்கின்றது. பூமி மீது எந்த ஜீவ ராசியும் எந்த தாய் கர்ப்பத்திலிருந்து பிறந்தாலும், வெவ்வேறு உருவத்தில் தெரியும் ஜீவராசிகள் அனைத்துக்கும் பிரக்ருதி தாய் பீஜதாதனான நான் தந்தையாக இருக்கின்றேன்”. என்று சொல்லினார். பகவான் கீதாவில் சொல்லியது பிரகாரம் ஜீவன் எந்த தேகம் கர்ப்பத்தில் பிறந்தாலும் அந்த தேகத்தில் மூல ஆதாரம் பஞ்சபூதங்களான பிரக்ருதி தாய், அதற்கு சைதன்யம் பீஜத்தை கொடுத்த கடவுள் தந்தையாகும். இதனைப் பொறுத்து எவ்வளவோ பெரிதாக இருக்கின்ற கடவுளுக்கு சுயமாக மகனாக இருந்து மற்றும் எவ்வளவோ பெரிய பலம் கொண்ட பிரக்ருதி சந்தானமாக இருந்து, மனிதன் தன்னுடைய நிலையை மறந்து போய் தன்னை அசாஸ்வதமான தேகமாக ஒப்பிட்டு மிகச்சிறியவனாக போனான்.

நிரந்தரமான தாய் தந்தையை தெரிந்து கொண்டால் மனிதன் சாஸ்வதமான மோக்ஷத்தை அடைவான். அசாஸ்வதமான தேகமாக தன்னைத் தானே கணக்கிடுவதினால் மனிதன் அசாஸ்வதமானவனாக போனான். அசாஸ்வதமான ஜென்மங்களை அடைகின்றான். அசாஸ்வதமான தேகத்தை நான் தான் என்று நம்பியது போல் ஜீவனை மாயா பிரம்மிக்க செய்கின்றது. மனிதன் தன் உண்மையான தந்தையை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்னும், தந்தை மீது ஆர்வம் வைக்காத வரை மாயா மனிதனை

தன் யாரோ தெரியாமல், தன் தேகம் நீதான் என்று பிரமிக்கும் படி செய்யும். பிரக்ருதி மனிதனுக்கு தாயாக இருக்கின்ற விஷயம் மனிதனுக்கு தெரியாது அல்லவா! தாய் பிரக்ருதி மற்றொரு உருவம் அணிந்து மாயாவாக அழைக்கப்படுகின்றது. தேகத்தில் குணங்கள் வடிவத்தில் இருக்கின்ற மாயா மனிதனை கடவுள் ஞானம் பக்கம் போகாமல் கர்மத்திலேயே மிதங்க வைக்கின்றது. மாயா மாதாவினால் தயார் செய்யப்பட்ட வலையில் சிக்கிக்கொண்ட மனிதன், அந்த வலையில் இருந்து வெளிப்படாமல் போகின்றான். மாயா வலையில் 12 ரகமான நூல்கள் இருக்கின்றது. ஒவ்வொரு நூல் மனிதனை விட எல்லா ரகத்திலும் பலம் கொண்டு இருக்கின்றது. மனிதனை சிக்க வைப்பதற்கு மாயா உபயோகித்த வலையை ஒவ்வொரு ரகமுள்ள நூல் 9 இருக்கின்றது. அதன் பிரகாரம் 12 ரகம் கொண்ட நூல் இணைந்து மொத்தம் 108 குவியல்கள் வலையாக தயாரானது. 108 குவியல் வலை சிறியதாக இருந்தாலும், குவியல்கள் அதிகமாக இல்லாமல் இருந்தாலும் மனிதனை சிக்க வைப்பதற்கு மிக சுலபமானது. மாயாவின் வலை சாதாரணமான மீன் வலை போன்றது அல்ல. வலையில் ஒவ்வொரு நூல் குவியல்கள் ஒரு விளைவுகள் கொண்டு இருக்கும். ஒவ்வொரு நூல் குவியல்களில் ஒரு குணம் விளைவுகள் இருக்கும். அந்த குண விளைவுகள் கொண்ட வலையில் ஒவ்வொரு நூலும் மனிதன் தன் பக்கம் இழுத்துக் கொள்வதற்கு விளைவு கொண்டு இருக்கின்றது. அதனால் மனிதன் ஒவ்வொரு நொடியும் ஏதோ ஒரு குணத்திற்கு ஒட்டிக்கொண்டு போகின்றான். ஒவ்வொரு குணங்கள் வலையில் ஒரு நூல் குவியலாக இருந்து, கவர்ச்சிக் கொண்டிருப்பதினால் அந்த குணத்தின் கவர்ச்சி விளைவுகளினால் விழுந்து விடுகின்றான். அந்த கவர்ச்சியை **வலப்பு** என்று கூட சொல்லலாம். **வலப்பு என்ற சொல்லிலிருந்து வலை என்ற வார்த்தை பிறந்தது.** மேலும் கவர்ச்சி விளைவு கொண்ட குணங்களை வலையாக வர்ணித்து சொல்கின்றோம். மாயாவின் குணம் என்ற வலையில் சிக்கிக் கொள்ளாதவன் பூமி மீது யாரும் இல்லை என்றே சொல்லலாம். என்றால் மாயாவின் விளைவுகளில் விழுகாதவன் யாருமில்லை என்று சொல்லலாம். ஏதோ ஒரு கவர்ச்சியினால் மீன்கள் வலையில் சிக்கிக் கொண்டது போல, மாயாவின் வலையில் கூட மனிதன் சிக்கிக் கொள்கின்றான். மீன் வலையில் இருக்கின்ற நூல்கள் எல்லாம் ஒரு ரகம் இருப்பதினால், மாயாவின் வலை 108 ரகமான நூல் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டோம் அல்லவா! 108 நூல் 12 குண பாகங்களில்

கூடியிருக்கின்றது. அவற்றை ஒவ்வொன்றின் பெயர் சொல்லிக் கொண்டால் இந்த விதமாக இருக்கின்றது. 1.காம 2.குரோத 3.லோப 4.மோஹ 5.மத 6.மஸ்தர 7.தான 8.தய 9.அவுதாரிய 10.வைராக்கிய 11.வினைய 12.அன்பு. இந்த 12 குணபாகத்தில் மனிதனை அசாஸ்வதமான தன்னுடைய தேகத்தை தானாக பிரமிக்கும் படி செய்கின்றது, தேகத்திற்கு சம்பந்தமுள்ள அசாஸ்வதமான தாய் தந்தைகளை தன்னுடைய தாய் தந்தையாக பிரமிக்கும் படி செய்கின்றது, நான் அழகாக இருக்கிறேன் என்றும் அல்லது நான் அழகு இல்லாதவன் என்றும், கருப்பாக இருக்கின்றவன் என்றும் அல்லது வெள்ளையாக இருக்கின்றவன் என்றும் நீட்டமாக இருக்கிறவன் என்றும் குள்ளமாக இருக்கின்றவன் என்றும் தன்னுடைய தேகத்தை பொறுத்து பிரமிக்கும் படி செய்கின்றது குணங்கள் வரிசையில் நான்காவதாக இருக்கின்ற மோஹ குணம். அது மட்டுமல்லாமல் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகள் கூட அந்த தேகத்தில் ஜீவனுடைய தாய் தந்தையாக பிரமிக்கும் படி செய்வது கூட மோஹ குணம் தான்.

தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையிடமிருந்து பிறந்தாலும் அந்த தேகத்திற்கு தாய் தந்தை தேகம் சம்பந்தப்பட்ட ஜாடைகள் வரும். வெளியே இருக்கின்ற தாய் தந்தை தேகம் கொண்ட ஜாடைகள் அவருடைய சந்ததிக்கு இருப்பது சகஜம் தான். தாய் ஜாடை சிறிது, தந்தை ஜாடை சிறிது பிறந்த சந்ததிக்கு இருப்பது சகஜம் தான். சிலர்களில் தாய் ஜாடை அதிகமாக இருந்து, தந்தை ஜாடைகள் குறைவாக இருக்கும். சிலர்களில் தந்தை ஜாடைகள் அதிகமாக இருந்து, தாய் ஜாடைகள் குறைவாக இருக்கும். அரிதாக சிலர்களில் தாய் தந்தைகளில் ஒருவர் ஜாடை மட்டும் இருக்கும். மனிதன் எந்த ஜாடையில் இருந்தாலும் விஷயத்தில் முழுமையாக மோஹ குணம் என்ற வலையில் சிக்கிக் கொண்டிருக்கின்றான். தன்னுடைய தேகத்திற்கு இருக்கின்ற தாய் தந்தை ஜாடைகளை பார்த்து நான் இவர் உடைய மகன் தான் என்று நினைக்கப்படுகின்றது. தேகமே நான் தான் என்று நினைத்துக் கொண்ட மனிதன், தன் தேகம் போல் இருக்கின்ற தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தை என்று நினைத்துக் கொள்கின்றான். அவர்கள் தன்னுடையவர்கள் என்று பிரம்மிக்கும் படி செய்கின்ற மோஹ குணம். மோஹ குண விளைவுகளினால் சிறிய வயதிலிருந்து தாய் தந்தைகளை தன்னுடையவர்களாக அடையாளித்த மனிதன், பெரியதாகிய பிறகு

தன்னுடைய தேகம் ஜாடைகள் தாய் தந்தையின் ஜாடைகளுடன் கூடி இருக்கின்றதை பார்த்து, நான் உண்மையாகவே இவருடைய மகன்தான், இவர்கள்தான் என்னுடைய தாய் தந்தை என்று பந்தத்தை வளர்த்துக் கொள்வோம். தாய் தந்தை மீது மகனுக்கு, மகன் மீது தாய் தந்தைக்கு பாசம், அன்பும் வளர்ந்து போகும். அப்போது மனிதன் மோஹ குண என்னும் வலையில் சிக்கிக் கொண்டது போல் ஆகும். இந்த விஷயத்தை ஒரு கவி தன்னுடைய பாட்டுக்களில் அனுராகம் அன்பு அழகான வலை என்று சொல்லினார். இந்த வார்த்தை அந்த கவி சிறிது ஞானப்பார்வையில் சொல்லியது போல் தெரிகின்றது. 12 குணங்களில் ஒரு மோஹ குணம் மிக சிறிய வயதில் ஆரம்பமாகி முதல் தாயை தன்னுடையதாக அடையாளித்து பிறகு தந்தையை அடையாளிக்கும் படி செய்து, அதன் பிறகு குடும்பத்தில் உள்ள அனைவரையும் தன்னுடையவர்களாக கணக்கிட செய்கின்றது.

மோஹ குணத்தை விட முதலாவதான ஆசை, இரண்டாவதான கோபம் எல்லோரும் பெரியதாக சொல்லிக்கொண்டாலும், ஆன்மீகமாக மனிதனை தான் உண்மையாக யார் என்று தெரிந்து கொள்ளாமல் செய்கின்றது மோஹ குணம் தான். **தனக்கு கர்மங்களை ஒட்ட வைப்பதில் காமம் (ஆசை), குரோதம் (கோபம்) முதலாவது, மனிதனை ஆன்மீக ரீதியாக மோசம் செய்வதில் முதலில் இருப்பது மோஹ குணம் தான்.** அதனால் தான் பகவத்கீதாவில் கடவுள் அர்ஜுனனுக்கு முதலில் மோஹ குணமே போரில் குறுக்கே வரும்படி செய்து, தன் மோஹ குணத்தினால் தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்டிருக்கின்ற எல்லாரையும் தன்னுடையவராக எண்ணிக்கொண்ட அர்ஜுனனுக்கு துக்கம் வரும் படி செய்து, தன்னைத் தானே மறந்து போன நிலையில் அர்ஜுனன் இருக்கும்போது, இப்போது மனிதனுக்கு ஞானம் தேவை என்பது போல் பகவான் தெய்வ ஞானத்தை அர்ஜுனனுக்கு தெரிவித்தார். இதனைப் பொறுத்து ஆன்மீகத்திற்கு குறுக்கே வந்தது முக்கியமான மோஹ குணம் என்றும், அதுதான் உண்மையான நிரந்தரமான தன்னுடைய தாய் தந்தையை மறக்கும் படி செய்து, தனக்கு (ஜீவனுக்கு) தாய் தந்தை நிரந்தரம் அல்லாத தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தையாக கணக்கிடப்படுகின்றது. இந்த விதமாக மோஹகுணத்தில் ஒட்டிக்கொண்டு தன்னுடைய தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாவை அடையாளிக்காதவன்

பூமி மேல் பிறந்தாலும் பிரயோஜனம் இல்லை என்று சில பெரியோர்கள் சொல்லினார்கள். இதே விஷயத்தை வேமன யோகி கூட தன்னுடைய தத்துவத்தில் விவரித்து இதன் போன்று சொல்லினார்.

*தாய் தந்தை மீது இரக்கமில்லாத புத்திரன் பிறந்தது*

*எதற்கு அவன் இறந்தது எதற்கு புற்றுக்குளே*

*இருக்கின்ற செதில்கள் பிறக்கின்றதா*

*இறக்கின்றதா விஸ்வதாபிராம கேளடா வேமா!*

இந்த தத்துவத்தை பல பேர் சிறிய வயதிலேயே படித்திருந்தாலும் இதில் உள்ள எண்ணம் யாருக்கும் அர்த்தம் ஆகாமல் மாயா செய்வது மட்டுமல்லாமல், மேல் தத்துவத்தில் வேமன்ன யோகி சொல்லியது கூட தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தை தான் என்பது போல் பிரமிக்க செய்யப்பட்டது. வேமன யோகி இந்த தத்துவத்தை சொல்லுவதற்கு முன்பே ஒரு தத்துவத்தை இதன் போல சொல்லினார்.

*வேமன தத்துவம் மனப்பாடம் செய்தால்*

*ஆயிரம் மடங்கு நீங்கள் கூர்ந்து*

*கவனித்தால் ஞானத்தை காண்பீர்கள்*

*விஸ்வதாபிராமா கேளடா வேமா!*

இந்த தத்துவம் எண்ணம் பிரகாரம் வேமன தத்துவம் படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரகமாக ஆயிரம் ரகம் அர்த்தத்தை கொடுக்கின்ற, அந்த தத்துவத்தை விவரித்துக் கொண்டு பார்த்தால் அந்த தத்துவத்தில் ஆச்சரியம் கொண்ட ஞானம் தவிர வேறொன்று இல்லை என்று வேமன யோகி சுயமாக சொல்லியது போல் தெரிகின்றது. இதனைப் பொறுத்து தாய் தந்தை மீது இரக்கமில்லாத மகன் என்ற தத்துவத்தில் வேமனா ஆத்மா ஞானம் சம்பந்தம் கொண்ட தாய் தந்தை பற்றி சொல்லினார் என்றும், தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையை பற்றி சொல்லவில்லை என்று அர்த்தமாகின்றது. ஆத்மா சம்பந்த ஞான பிரகாரம் அந்த தத்துவத்தை அர்த்தம் செய்து கொண்டால்

மனிதனுடைய உண்மையான, நிரந்தரமான தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாவை பற்றி பிறந்த பிறகு தெரிந்து கொள்ளாதவன், பிரக்ருதி பரமாத்மாவின் மீது நினைவு இல்லாதவன், அவர்களின் மீது ஆர்வம், இரக்கமில்லாதவன் பிறந்தாலும் பிரயோஜனம் இல்லை என்னும், அப்படிப்பட்டவன் பிறந்தாலும் பிறக்காமல் போனாலும் ஒன்றுதான் என்றும், புற்றுக்குள் இருக்கின்ற செதில்கள் பிறந்து இறந்தது போல என்றும், அவனுடையது பயனற்ற பிரயோஜனம் அல்லாத ஜென்மம் என்றும் வேமன யோகி தன்னுடைய தத்துவத்தில் சொல்லினார். அந்த வார்த்தை நமக்கு மாயாவினால் தான் அர்த்தம் ஆகவில்லை.

பிரம்மவித்யா சாஸ்திரம் அல்லாமல் பௌதிக சாஸ்திரம் படித்தவர்கள், விஞ்ஞானிகள் என்று நினைத்துக் கொண்டு விஞ்ஞான மேடை வைத்துக் கொண்டவர்கள், எங்களுக்கு தெரியாத சயின்ஸ் (விஞ்ஞானம்) இல்லை என்றும் மேதாவிகளாக இருக்கின்றவர்கள் அவர்கள் படித்த சாஸ்திரம் பிரகாரம், பிரக்ருதி பரமாத்மா தாய் தந்தையாக இருக்கிறார் என்று எங்களுடைய வார்த்தையை மறுக்கலாம். எங்களுடைய வார்த்தை சாஸ்திரத்திற்கு எதிர்ப்பாக இருக்கிறது என்று சொல்லலாம். கடவுள் எல்லோருக்கும் உண்மையான தந்தை என்ற வார்த்தை பைத்தியமான வார்த்தை என்று வர்ணித்து சொல்லலாம். அவர்கள் அப்படி சொல்வதற்கு காரணம் இருக்கின்றது, அது என்னவென்றால்! ஒரு குழந்தைக்கு அவர் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையின் தேகங்கள் ஜாடை மட்டும் அல்லாமல், வம்சம் பரம்பரை ஜீன் கூட குழந்தை தேகத்தில் இருக்கின்றதினால், சில தலைமுறை சம்பந்தம் அந்த குழந்தைக்கு இருக்கிறது என்றும், குழந்தைக்கு தேக தாய் தந்தை பௌதிக சம்பந்த உருவம் ஜாடை மட்டுமல்லாமல், அபௌதிகமான குணங்கள் மற்றும் முறையின் விவகாரங்கள் இருக்கும் என்றும், அதனினால் ஒரு குழந்தை பௌதிகமாக, அபௌதிகமாக தெரிகின்ற தாய் தந்தைக்கு சம்பந்தப்பட்டவன் என்னும் சாஸ்திரம் முறையாக சொல்லலாம், அப்படி அல்லாமல் தாய் தந்தையை பிரக்ருதி பரமாத்மா என்பது அசாஸ்திரம் என்று சொல்லுவதற்கு வாய்ப்பு இருக்கும். அப்படிப்பட்ட போது உங்களுடைய வார்த்தை சத்தியம் எப்படி ஆகும் என்று சிலர் எங்களை கேள்வி கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால்!

பூமி மீது இருக்கின்ற ஆறு சாஸ்திரங்களில் பௌதிக சாஸ்திரம் கூட ஒன்றுதான். எந்த சாஸ்திரங்களாக இருந்தாலும் எப்போதும் நிராகரிக்க முடியாது. நிராகரிக்க முடியாத சாசனமாக இருப்பது சாஸ்திரத்தின் முக்கியத்துவம் என்று நாங்கள் கூட சொல்கின்றோம். ஷட் (ஆறு) சாஸ்திரங்களில் மற்ற ஐந்து சாஸ்திரங்களை விட பெரியது பிரம்ம வித்யா சாஸ்திரம். என்னுடைய வாதனை பிரம்ம வித்யா சாஸ்திரத்திற்கு சம்பந்தப்பட்டது. மற்றவருடைய வாதனை பௌதிக சாஸ்திரத்திற்கு சம்பந்தப்பட்டது. சாஸ்திரம் முறை கொண்டது எந்த வாதமாக இருந்தாலும் சத்தியம் தான். இப்போது சிலர் விஞ்ஞானிகள் பௌதிக சாஸ்திரம் பிரகாரம், அபௌதிகமான தெரியாத குணங்கள் கூட அவரவர் வம்சங்களை பொருத்து வருகின்றது என்னும், அதனால் பௌதிகமாக, அபௌதிகமாக இரண்டு விதமான ஒரு குழந்தைக்கு தெரிகின்ற தாய் தந்தைகளே உண்மையான தாய் தந்தை என்னும் சொல்வதற்கு சாஸ்திர முறை தான் என்று நான் கூட ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால்! தாய் தந்தையிலிருந்து ஏற்படும் டி.என்.ஏ (ஜீன்கள்) கூட பௌதிகமானது என்னும், ஜீன்க்கு கயிர் சுற்றிக் கொண்டிருக்கும் ஏணி போன்ற உருவம் இருக்கிறது என்னும், தாய் அண்டத்தில் மற்றும் தந்தை விந்தால் குரோமோஜோம்ஸ்வினால் அவர்களுடைய வம்சம் பரம்பரை ஜீன்கள் (டி.என்.ஏ) தயாராகின்றது என்னும், வம்ச பரம்பரை குணங்கள் முறைகள் கூட பௌதிகமானது என்று தெரிகின்றது. இனி போனால் பிரம்ம வித்யா சாஸ்திரத்தை அனுசரித்து பார்த்தால் மனிதனின் ஜீன்கள், வம்சம் பரம்பரைக்கும் பிரம்ம வித்யாவுக்கு சம்பந்தம் இல்லை. தந்தையின் விந்து, தாய் ரஜோகனம் (அண்டம்), பிரம்ம வித்யா சாஸ்திரத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல. அது வெறும் பௌதிக சாஸ்திரத்திற்கு சம்பந்தப்பட்டது. பௌதிக சாஸ்திரத்திற்கு சம்பந்தப்பட்ட வரை ஒரு மனிதனுக்கு பௌதிக தாய் தந்தை இருப்பது உண்மைதான். மற்றும் அவர் வம்ச பரம்பரையாக சம்பந்தம் இருப்பது கூட உண்மைதான். ஆனால் இங்கு சிறிது கவனிக்க வேண்டியது என்னவென்றால்!

தேகத்தில் இருக்கின்ற ஜீவனுக்கு கர்மம் என்பது ஒன்று இருக்கின்றது. ஒரு ஜீவன் தன்னுடைய கர்மம் பிரகாரம் தனக்கு நெருங்கிய சம்பந்தம் கர்மம் இருக்கின்றவர்கள் வீடுகளில்

பிறப்பார்கள். ஜீவனுக்கு இருக்கின்ற கர்மமே அந்த விதமாக ஒரு வம்சத்தில் பிறக்க வைக்கின்றது. உலகத்தில் எத்தனையோ விதமான கர்மங்கள் கொண்டவர்கள் இருக்கின்றார்கள். அவரவர் கர்மங்களே அவர்களை மறு ஜென்மத்திற்கு கொண்டு போகின்றன. அப்படி கொண்டு போகும்போது கிட்டத்தட்ட அதன் போன்ற கர்மம் இருக்கின்ற வம்சத்திலேயே பிறக்க வைக்கின்றது. அதனினால் கடந்த காலத்தில் அவர்களுடைய பெரியோர்கள் கர்ம பிரகாரம் செய்த வேலைகளை பிறகு பிறந்தவரும் கூட அப்படிப்பட்ட கர்மங்கள் பிரகாரம், அப்படிப்பட்ட வேலைகள் செய்வதினால் பார்ப்பவர் இவனுக்கு தாத்தா புத்தி வந்தது என்றும், அல்லது முப்பாட்டன் புத்தி வந்தது என்றும் தந்தை புத்தி வந்தது என்று சொல்வார்கள். கர்மங்களை பொறுத்து மனோ புத்தி, சித்தங்கள் வேலை செய்யும் என்பது தெரியாமல் வேலை செய்யும் புத்தியை, தாத்தா உடையது அல்லது முப்பாட்டன் உடையது என்று சொல்வார்கள். இந்த விதமாக மேல் தெரிகின்ற காரியத்தை பொறுத்து ஒரு மனிதன் ஒரு வம்சத்திற்கு சேர்ந்தவன் என்றும், பலான மகன் என்றும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இது எல்லாம் பௌதிக தாய் தந்தையை காண்பித்து மனிதனுக்கு தான் யாரோ, தன்னுடைய உண்மையான நிலையே என்னவென்று தெரியாமல் செய்கின்றது. ஒரு மனிதனைப் பிரித்து பார்த்தால் தேகம் வேறு, ஜீவன் வேறு என்று தெரிகின்றது. அதன் போலவே தேகத்தில் ஜீவன், கர்மம் வெவ்வேறாக இருக்கின்றது. ஜீவன் தன்னுடைய ஜீவிதத்தில் கர்மாவை சம்பாதித்துக் கொண்டு இருக்கிறான் மற்றும் அனுபவிக்கின்றான். கடந்த ஜென்மத்தில் சம்பாதித்துக் கொண்ட கர்மம் பிரகாரம் ஜீவன் வாழ்க்கையை கடத்த வேண்டியது இருக்கும். ஒவ்வொரு வேலைக்கு கர்மம் தான் காரணமாக இருக்கும் போது, நடக்கின்ற வேலைகளில் கஷ்ட சுகங்கள் ஜீவன் அனுபவித்துக் கொண்டிருப்பான். அது மட்டுமல்லாமல் நடக்கின்ற வேலையை பொறுத்து, அவற்றுக்கு இருக்கின்ற கர்மத்தை பொறுத்து, ஜீவன் பலானவனுக்கு சம்பந்தப்பட்டவன் என்று சொல்ல முடியாது. அது மட்டுமல்லாமல் ஜீவனுடைய உருவம் ஜாடை பொறுத்து, ஜீவன் எந்த பதார்த்த்ததுடன் கூடிக் கொண்டு இருக்கின்றானோ, ஜீவன் என்றால் என்ன? யார்? என்ற விஷயம் சொல்ல முடியாது. நடக்கின்ற கர்மத்தை பொறுத்து, காரியத்தை பொறுத்து ஒரு நபருடைய பௌதிக தாய் தந்தையை, அவர்களுடைய வம்சம் என்று சொல்லலாம். மேலும் அவரில் இருக்கின்ற ஜீவன் அம்சம், உருவத்தைப் பற்றி சொல்ல முடியாது.

பூமி மீது இருக்கின்றது ஷட் சாஸ்திரம் (ஆறு சாஸ்திரங்கள்) மட்டும்தான். அதில் ஐந்து சாஸ்திரங்கள் ஜென்ரல் சயின்ஸ்க்கு சம்பந்தப்பட்டது. ஜென்ரல் சயின்ஸ் என்றால் சாமான்யமான சாஸ்திரம். அப்படியே சூப்பர் சயின்ஸ் என்பது ஒன்று இருக்கின்றது. சூப்பர் சயின்ஸ் என்றால் பிரம்ம சாஸ்திரம் அல்லது பெரிய சாஸ்திரம் என்று சொல்லலாம். பிரம்மா என்றால் பெரியது என்று அர்த்தம். சயின்ஸை விஞ்ஞானம் என்று கூட சொல்லலாம். ஆறு சாஸ்திரங்களில் ஐந்து சாஸ்திரங்கள் என்றால் ஒன்று கணித சாஸ்திரம், இரண்டு ககோள சாஸ்திரம், மூன்று ரசாயன சாஸ்திரம், நான்கு பௌதிக சாஸ்திரம், ஐந்து ஜோதிட சாஸ்திரம். இந்த ஐந்து சாஸ்திரங்களை விட முதல் பிறந்தது ஆறாவது சாஸ்திரமான பிரம்ம வித்யா சாஸ்திரம் அல்லது பிரம்ம சாஸ்திரம் என்று சொல்லலாம். உலகத்தில் எந்த விஷயமாவதும் சாஸ்திர பிரமாணம் இருக்க வேண்டும். சாஸ்திர பிரமாணம் இல்லாதது அது அசத்தியமாக கணக்கிடப்படும். அதனால் ஒரு விஷயத்தை சத்தியம் என்று சொல்வதற்கு சாஸ்திரம் எவ்வளவு தேவையோ, அப்படியே ஒரு சாஸ்திரத்தை அசத்தியம் என்று சொல்லுவதற்கு கூட சாஸ்திரம் அவ்வளவு தேவையாகும் என்ற சூத்திரம் பிரகாரம் எது சத்தியமோ, எது அசத்தியமோ சாஸ்திரத்தினால் தேர்ந்தெடுக்கலாம். சாஸ்திர பிரகாரம் சொல்லாத விஷயங்கள் சத்தியமாகலாம் அல்லது அசத்தியம் ஆகலாம். அப்படி சொல்லியது குருட்டுத்தனமாக ஆனது போல் ஆகும். அதனால் எந்த விஷயமாவதும் சத்தியமா அசத்தியமா என்று பார்ப்பதற்கு சாஸ்திரம் கண் போன்றது என்று சொல்லலாம்.

உலகத்தில் இருக்கின்ற ஆறு சாஸ்திரங்களில் ஐந்து சாமானியமான சாஸ்திரம் மட்டுமல்லாமல் ஒன்று அசமானியமான பெரிய சாஸ்திரம் என்று சொல்லிக் கொண்டோம் அல்லவா! பெரிய சாஸ்திரமான பகவத்கீதாவில் கூட ஒரு ஜென்மத்தில் இருக்கின்ற சம்ஸ்காரம் பொறுத்து மறு ஜென்மத்தில் பௌதிக தாய் தந்தை இருப்பார் என்று சொல்லுவதும் கூட நடந்தது. எப்படிப்பட்டவர்களும் அதன் போன்ற பழக்கங்கள், ஆலோசனைகள், முறைகள் இருக்கின்ற அவர்கள் வீட்டில் பிறப்பார் என்று பகவத்கீதாவில் கிருஷ்ண பகவான் கூட கூறினார். பகவத்கீதா ஆத்மசம்யம யோகத்தில் 41,42 சுலோகங்கள்

*சுலோகங்கள்:- 41. ப்ராப்ய புண்யக்ருதாம் லோகாநுஷித்வா ஷஸ்வதீ ஸமா, ஸ்ரீசீநாம் ஸ்ரீமதாம் கேஹே யோக ப்ரஷ்டோபி ஜாயதே //*

*சுலோகங்கள்:- 42. அதவா யோகி நாமேவ குலே பவதி தீமதாம், ஏதத்தி துர்லபதரம் லோகே ஜென்ம யதீத்ருஷ்யம் //*

**கருத்து:-**முந்தைய ஜென்மத்தில் யோக பரஸ்டியானவர்கள் அவருக்கு இருந்த புண்ணியப்பலன்ங்கள் அனுபவித்த பிறகு நல்ல நடைமுறைகளைக் கொண்டு ஸ்ரீ மந்தர்கள் **(ஞானிகள்)** இருக்கின்ற வீடுகளில் பிறப்பார்கள். அப்படி ஆகாமல் போனால் தெய்வ ஞானத்தில் நல்ல மேதாவிகளாக இருந்த யோகிகள் வம்சத்தில் பிறப்பார்கள். லோகத்தில் அப்படிப்பட்ட ஜென்மங்கள் அடைவது எவ்வளவோ அரிதாக நடக்கும்.

இதனை பொறுத்து கடந்து ஜென்மத்தில் ஞானிகளாக இருக்கின்றவர்கள் ஞானிகள் இடம், யோகியானவர்கள் யோகிகள் வம்சத்தில் ஜென்மிப்பார்கள் என்று தெரிகின்றது. இந்த விஷயம் பிரம்ம வித்யா சாஸ்திரமான பகவத்கீதாவில் சொல்லியதினால் முழுமையான சத்தியம் என்று தெரிகின்றது. அது மட்டுமல்லாமல் நேராக நடக்கின்றது என்று கூட தெரிந்து போகின்றது.

ஒரு மனிதன் எப்படிப்பட்ட நடைமுறையில் விகாரங்கள் மீது ஆர்வம் கொண்டு இருப்பாரோ, அப்படிப்பட்ட எண்ணம் கொண்டவர்கள் வீட்டில் பிறப்பதினால், தந்தைக்கு தாத்தாவுக்கு இருக்கின்ற எண்ணம் இருப்பதினால், அந்த நபர் பலானவர் பேரன் என்னும், பலானவர் மகன் என்று சொல்வதற்கு பலமாக இருக்கும். இப்படிப்பட்ட பலமான சில வெளியே ஆதாரங்களை பொறுத்து ஒரு மனிதன் நான் பலானவருக்கு பிறந்தேன் என்பது நினைக்கப்படுகின்றது. அதனால் ஒவ்வொரு மனிதனும் வெளியில் நேரடியாக இருந்தாலும் தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தையாக சொல்லிக்கொள்ள நடக்கின்றது. ஆனால் வாஸ்தவமாக இதெல்லாம் வெளியே விவகாரத்திற்கு சம்பந்தப்பட்ட விஷயம் என்றும், முறை விவகாரங்கள் எல்லாம் குணங்கள் ஆர்வத்தை பொறுத்து வருகின்றது என்றும், குணங்கள் அவர்களுடைய முறைகள் வேறு, ஜீவன் வேறு என்னும், ஜீவன் ஆத்மாவுக்கு சம்பந்தப்பட்டவன் என்றும், ஜீவன் குணங்களுக்கு சம்பந்தப்பட்டவன் அல்ல என்றும், யாரும் தெரிந்து கொள்ளாமல்

போகின்றார்கள். அதனால் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தையாக மனிதன் எண்ணிக் கொண்டிருக்கின்றான். ஒன்று தேகம் ஜாடையை பொறுத்து, இரண்டு நடைமுறை பழக்கத்தை பொறுத்து, இரண்டு விதமான காரணத்தினால் ஒவ்வொரு மனிதன் தாய் தந்தை விஷயத்தில் தவறாக நினைத்து தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தையாக நினைக்க நடக்கின்றது. தனக்கு இரண்டு ரகமான தாய் தந்தை இருக்கின்றார் என்றும், ஒருவர் தனக்கு (ஜீவாத்மாவுக்கு) சம்பந்தப்பட்டவர் என்றும், இரண்டாவது அவர் தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்டவர் என்றும், தனக்கு சம்பந்தப்பட்டவர் சிருஷ்டி ஆதியில் இருந்து ஒரே தாய் தந்தையாக, நிரந்தரமான தாய் தந்தையாக இருக்கின்றார் என்றும், தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்டவர் ஜென்ம ஜென்மங்களுக்கு வெவ்வேறு தாய் தந்தையாக இருக்கின்றார் என்று யாரும் நினைக்கவில்லை.

சாதாரணமான மனிதர்களுக்கு, கண்ணுக்கு தெரிகின்ற தாய் தந்தை மட்டும் தெரிந்து, கண்ணுக்கு தெரியாத தாய் தந்தை தெரியாமல் போகலாம். தாய் தந்தைகள் இரண்டு விதமாக இருக்கின்றார் என்பதும் கூட அவர்களுக்கு தெரியாது என்றே சொல்லலாம். ஆனால் தெய்வ ஞானத்திற்கு சம்பந்தப்பட்ட ஞானிகளுக்கு, யோகிகளுக்கு இரண்டாவது ரகம் கொண்ட பிரக்ருதி பரமாத்மாக்களே தாய் தந்தையாக இருக்கிறார் என்று தெரிந்து இருக்கும். ஞானம் தெரிந்தவர்களுக்கு ஜென்ம ஜென்மங்களுக்கு சாஸ்வத தாய் தந்தையானவர்கள் விஷயம் தெரிவதினால், தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகளை மிக குறைவான நபராக, ஒரு ஜென்மத்திற்கு மட்டும் தான் என்று நினைப்பார்கள். அப்படிப்பட்டபோது ஞானம் தெரிந்த நபர் தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகளை கௌரவிப்பார்களா? அவர்களை வயதான காலத்தில் பார்ப்பார்களா? இப்படிப்பட்ட கேள்விகள் வரும். அதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால்! தேகம் தாய் தந்தை தன் தேகம் பிறந்ததிலிருந்து வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். என் மகன் என்னும் மோஹ குணத்தால் தனக்கு பிறந்த குழந்தையை வளர்ப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். ஞானம் தெரிந்த நபர் தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகளை, தன்னுடைய தேகத்தை வளர்த்தியதில் மிக நெருங்கியவராக

அடையாளித்து, அதற்கு பதிலாக அவர்களுடைய தேகத்தை கூட நான் வளர்த்துவதும் முக்கியமான கடமையாக நினைக்க வேண்டும். நான் சிறிய வயதாக இருக்கும்போது எனக்கு எவ்வளவு பொறுப்பாக கல்விகளை கற்றுக் கொடுத்தார்களோ, எவ்வளவு அன்பாக வளர்த்தினார்களோ, தனக்கு பசி ஆகாமல் இருந்தாலும் வேளை வேளைக்கு எப்படி ஆகாரங்களை கொடுத்தார்களோ, அதன் போலவே எல்லாம் விதமாகவும் தாய் தந்தைகளை பொறுப்பாக பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஞானம் தெரிந்த நபர் நினைத்துக் கொள்வார். ஞானி அல்லது யோகி ஆனவர் தன்னுடைய தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாக்கள் எப்போதும் முதியவர்களாக மாட்டார்கள் என்னும், நான் எப்போதும் பெரியவனாக வளரமாட்டேன் என்னும், நான் சாஸ்வதமாக பிரக்ருதி தாய் தந்தை மடியில் குழந்தை தான் என்னும், அப்படிப்பட்ட போது தந்தை பரமாத்மா தாய் பிரக்ருதி எப்போதும் தன்னை வளர்த்துவார்கள் என்னும், நான் அவர்களை வளர்த்தும் நிலைக்கு வளரவில்லை என்று தெரிந்து இருப்பார்.

தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய், தந்தை மட்டும் முதியோர்களாக இருக்கும் போது, தன் வயது வந்தவனாக அவர்களை வளர்த்தும் நிலை கொண்டு இருப்பார். மேலும் தன்னுடைய தாய் தந்தையை விட்டு, தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையை வளர்த்தினால் அந்த ஜென்மத்திற்கு தகுந்த வேலையாக, நியாயமான வேலையாக ஞானி அடையாளித்து, தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைக்கு எப்படிப்பட்ட குறைபாடு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பார். ஞானம் தெரிந்த நபர் தனக்கு பிரக்ருதி பரமாத்மா தாய் தந்தை தெரிந்தாலும், தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தை மீது கவன குறைவு செய்ய மாட்டார். தன்னுடைய சிறிய வயதில் அவர் அவருடைய தேகத்தை வளர்த்தியதினால், முதியோரில் அவர்களுடைய தேகத்தை வளர்த்துவது தன்னுடைய பொறுப்பாக கணக்கிடுவார். யோகி அல்லது ஞானியாக இருந்தால் தன்னுடைய தாய் தந்தையின் மீது எவ்வளவு பக்தி கொண்டிருந்தாலும், தன்னுடைய தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தை மீது பொறுப்பு இல்லாமல் நடந்து கொள்ள மட்டார். தன்னுடைய தேகத்தை வளர்த்தியதற்கு பதிலாக, அவர்களுடைய தேகத்தின் பராமரிப்பை பார்ப்பதற்கு தனக்கு முக்கியமான காரியமாக நினைப்பார். உலகத்தில் ஞானம்

இல்லாத சாதாரணமானவர்கள் அவர்களை தாய் தந்தையை வளர்க்க முடியாமல் இறுதி நிலையில் அவர்களுடைய சொத்துக்கள் ஆபரணங்களை பறித்து கொண்டிருக்கின்றவர்களும் கூட இருக்கிறார்கள். முதியவர்களாக இருந்த தன்னுடைய தாய் தந்தை இறந்து போனால் இருக்கின்ற சொத்துக்கள் இஷ்டம் வந்தபடி புழங்கிக் கொள்ளலாம் என்று அவர்களை கொன்றவர்களும் கூட இருக்கின்றார்கள். அவர் சொத்துக்களை அனுபவித்து கொண்டு தாய் தந்தைகளை வீதியில் விடுகின்றவர்களும் கூட இருக்கின்றார்கள். இந்த விதமாக ஞானம் இல்லாத சிலர்கள் அவர்கள் தாய் தந்தைகளை எத்தனையோ விதமாக துன்புறுத்துகின்றவர்களும் கூட இருக்கின்றார்கள். மேலும் யோகிகள், ஞானிகளாக இருக்கின்றவர்கள் தெரிகின்ற தாய் தந்தைகளை தன் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகள் என்று தெரிந்து கொண்டு, அவருக்கு தகுந்தபடி கௌரவித்து, அவர்களுக்கு எந்த விதமாக சிரமம் ஏற்படாமல், எப்படிப்பட்ட கஷ்டம் வராமல் பொறுப்பாக பார்த்துக் கொள்வார்கள்.

தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகளை சரியாக பார்த்துக் கொள்ளாத மகன்கள் சிலர்கள், சிறிதளவு கூட பார்த்துக் கொள்ளாத மகன்கள் சிலர்கள், ஆங்காங்கே தெரிந்து கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட மகன்களை பார்த்து தாய் தந்தைகள் கவலைப்படுவார்கள். வளர்க்கும் விஷயத்தில் மகன்கள் சிறிதளவு கூட பொறுப்பாக பார்த்துக் கொள்ளாமல் போனாலும், மகன்களைப் பற்றி கவலைப்படாமல் அது எல்லாம் நம்முடைய கர்மம் என்று நினைத்துக் கொண்ட தாய் தந்தைகள் இருப்பார்கள். மகன்கள் வளர்க்காமல் போனாலும், எங்களை சொத்துக்கள் சம்பாதிக்கவில்லை என்று தூசித்து, பெரிய படிப்பு படித்த மகன்கள் என் தாய் தந்தைகள் புத்தி குறைவானவர்கள் என்று எண்ணிக்கொண்டு, சிறிய சிறிய விஷயத்திற்கு மரியாதை இல்லாமல் பேசிக்கொண்டு இருந்தாலும், தாய் தந்தைகள் சிறிது வரை கவலைப்படுவார்கள். ஆனால் எல்லாவற்றை விட அதிகம் பொறுப்புக் கொண்ட ஒரு விஷயம் இருக்கிறது. தாய் தந்தைகள் சிறிது அளவு கஷ்டம் இல்லாமல் வளர்த்திய மகனாக இருந்தாலும், ஒரு விஷயத்தில் மட்டும் தவறாக பேசினால், அந்த வார்த்தை தான் தாய் தந்தைகளை எல்லாவற்றை விட அதிகமாக கவலைப்படும்படி செய்யும். அப்படிப்பட்ட உண்மையான விஷயம் கீழ் விவரிக்கிறோம் பாருங்கள்.

ஒரு நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவருக்கு ஒரே மகன் சந்தானம். தனக்கும் ஒரே மகன் இருக்கின்றதினால் அந்த மகன் மீது மோஹ குணம், அன்பு குணங்கள் அதிகமாகி அன்பின் அன்பை கொடுத்து மிகுந்த பாசத்துடன் வளர்த்தார்கள். தன்னுடைய வாழ்க்கை தன் மகனுக்காகவே என்னும் தன் மகனை வளர்த்தி, தனக்கு கூட இல்லாத வசதியை மகன்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பார்கள். ருசி உள்ள பண்டங்களை மகனுக்கு சமையல் செய்து வைத்து, தான் ருசி இல்லாத ஆகாரத்தை சாப்பிடுவார்கள். தனக்கு பணம் வசதி இல்லாமல் இருந்தாலும் கடனை வாங்கி மகனுக்கு நல்ல உடைகளை வாங்கி கொடுப்பார்கள். அந்த விதமாக மகனை சிறிய வயதிலிருந்து சுகமாக வளர்த்தி அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். பெரிய பெரிய படிப்பு நிலையில்லாமல் இருந்தாலும் சிரமப்பட்டு தன் மகனை மேல் படிப்பு படிக்க வைப்பார்கள். தன்னுடைய மகன் பெரிய படிப்பு படிக்கின்றான் என்னும் சந்தோஷப்பட்டு தன்னுடைய கஷ்டங்களை கூட மறந்து போவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் மகன் பட்டணத்தில் வசித்துக் கொண்டிருக்கும் போது, தன் மகனுக்காக தாய் தந்தை எவ்வளவு கஷ்டப்படுகின்றார்கள் என்னும் சிறிதளவு கூட தெரியாமல், தனக்கு இஷ்டம் வந்தது போல் நடந்து கொண்டிருப்பான். மகனுடைய தாய் தந்தை எத்தனையோ கஷ்டங்கள் பட்டு தனக்காக அனுப்பிய பணத்தை ஊதாரித்தனமாக செலவு செய்து கொண்டிருந்தான். அது மட்டுமல்லாமல் மற்றவர் போலவே ஜாலியாக பணத்தை செலவு பண்ணி, தன்னுடன் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த ஒரு பணக்கார குடும்பத்திற்கு சேர்ந்த பெண்ணை காதலித்தான். அந்த பெண் கூட இவன் பணக்கார குடும்பத்திற்கு சேர்ந்தவன் என்று அவனை நம்பி காதலித்தது. இதன் போல ஒருவருக்கு ஒருவர் காதலித்த பிறகு அவர்களுடைய படிப்பு கூட முடிந்துவிட்டது. படிப்பு முடிந்த உடனே அவருக்கு பெரிய உத்தியோகம் கூட வந்தது. உத்தியோகம் வந்த பிறகு காதலித்த பெண்ணை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். திருமண விஷயத்தைப் பற்றி பேசுவதற்காக பெண் சொல்லிய போது ஒரு நாள் அவள் வீட்டுக்கு சென்றான். அந்த பெண் தன் காதலித்தவனை அந்த பெண்ணுடைய தாய் தந்தைக்கு அறிமுகப்படுத்தியது. அந்த பெண் வீட்டுக்கு போன அவன் எவ்வளவோ மதிப்பு கொண்ட அந்த வீட்டை, உயர் ஸ்தானத்தில் இருந்த பெண்ணின் தாய் தந்தையை

பார்த்து, இவர்கள் தன்னுடைய குடிசையை பார்த்தால், தன்னுடைய தாய் தந்தையை பார்த்தால் தன்னை காதலித்த பெண் என்னை திருமணம் செய்து கொள்ளாது என்றும், அதன் போலவே பெண்ணின் தாய் தந்தை திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்றும் நினைத்த அவன், அவர்கள் தன் வீட்டுக்கு போகாமல் தற்போது என்னுடைய தாய் தந்தை வெளிநாட்டுக்கு சென்று உள்ளார்கள் என்றும், வந்த பிறகு அறிமுகப்படுத்துகிறேன் என்று சொல்லினார். அப்போது பெண்ணின் தாய் தந்தை எங்களுக்கு ஒரு பெண் மட்டும் தான் என்னும், வேறு சந்தானம் இல்லை என்றும், அதனால் இருக்கின்ற சொத்துக்கள் எல்லாம் என் மகளுடையது தான் என்றும் என் மகளை திருமணம் செய்து கொண்டால் நீங்கள் எங்கள் குடும்பத்திலேயே வீட்டு மாப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று தாய் தந்தை இருவரும் கூறினார்கள். அப்போது அவன் எந்த சொத்து இல்லாததினால் அதனை விட மீறிய பாக்கியம் இல்லை என்னும், இப்படிப்பட்ட வாய்ப்பு விட்டால் இனி கிடைக்காது என்று நினைத்து, அதன் போலவே அவர்கள் வீட்டிலேயே இருக்கிறேன் என்று ஒப்புக்கொண்டான்.

அப்படியே ஒப்புக்கொண்டதினால் அவர்களுடைய திருமணம் நிச்சயமானது. தன்னுடைய திருமணம் நிச்சயமானது என்பதை அவனுடைய தாய் தந்தைக்கு சொல்லவில்லை. அப்படி சொல்லினால் அவர்கள் தன்னுடைய திருமணத்திற்கு வந்தால் மேலும், வறண்ட முகமும், சுருங்கிய முகம் ஒல்லியான தேகம் அடைந்தவர்களை பார்த்தால், தன்னுடைய மாமனார் பார்த்தால் நாங்கள் ஏழை என்பது தெரிந்துவிடும், அதுவரை நான் பணக்காரன் என்ற வார்த்தை எல்லாம் பொய்யானது என்று தெரிந்து போகும், அதனால் திருமணம் நின்று போகும் என்று நினைத்து, தன்னுடைய தாய் தந்தைக்கு திருமண விஷயத்தை சொல்லவில்லை. அது மட்டுமல்லாமல் திருமண நாளன்று தன்னுடைய தாய் தந்தையாக தன்னுடைய மாமனாருக்கு அறிமுகப்படுத்துவதற்கு, நன்றாக தெரிகின்ற வயது இருக்கின்ற ஒரு ஜோடியை ஏற்பாடு செய்து கொண்டான். தன் தாய் தந்தையாக நடிக்கும் படி முதலிலேயே அவர்களுக்கு சொல்லி ஏற்பாடு செய்து கொண்டான். திருமணத்திற்கு முந்தைய நாள் தன்னுடைய மாமனாருக்கு இவர்தான் என்னுடைய தாய் தந்தை என்று தன் ஏற்பாடு செய்து கொண்டவர்களை காட்டினான். இறுதிக்கு திருமணம் நடக்கின்ற

நேரம் வந்தது. வாஸ்தவமாக தன்னுடைய தாய் தந்தைக்கு தன்னுடைய மகன் திருமணம் விஷயம் தெரியாது. ஆனால் தன்னுடைய மகனை பார்த்து வர வேண்டும் என்று அவனுடைய தாய் தந்தை நினைத்து புறப்பட்டு பட்டணத்திற்கு வந்தார்கள். சரியாக அந்த நாள் அவர்களுடைய மகன் திருமணம் நாள் என்று அவர்களுக்கு தெரியாது. பட்டணத்திற்கு வந்த பிறகு தன் மகனுக்கு திருமணம் என்றும், அந்த திருமணம் முகூர்த்தத்திற்கு ஒரு மணி நேரம் இருக்கிறது என்பதும், திருமணம் பலான கல்யாண மண்டபத்தில் நடக்கின்றது என்று தெரிந்தது. அந்த விஷயம் தெரிந்த உடனே அவர்கள் திருமண மண்டபத்திற்கு புறப்பட்டு வந்தார்கள். அவர்கள் வந்த நேரத்திற்கு திருமண மேடையில் தன் மகன் உட்கார்ந்து இருப்பதை பார்த்து, அப்போது ஒன்றும் பேசாமல், அங்கு இருக்கின்ற ஜெனங்கள் மத்தியில் நின்று மகன் திருமணத்தைப் பார்த்து நின்றார்கள். அவர்கள் அங்கு வந்த பிறகு பத்து நிமிடத்தில் திருமணம் முடிந்தது. திருமணம் முடிந்த பிறகு மணமகன் மணமகள் அவரவர்கள் தாய் தந்தையிடம் பாத நமஸ்காரம் செய்ய வேண்டும் என்று புரோகிதார் சொல்லியபோது, மணமகன் முதலிலேயே தன் தாய் தந்தையாக ஏற்பாடு செய்து கொண்டவருக்கு நமஸ்காரம் செய்த பிறகு மணமகள் தாய் தந்தை பாத நமஸ்காரம் செய்தார்கள். அந்த நிகழ்வை நேரடியாக பார்த்த மணமகனுடைய தாய் தந்தைக்கு, அங்குள்ள விஷயம் எல்லாம் அர்த்தமாகிப்போனது. தன் உயிரை விட மேலாக வளர்த்திய மகன் எங்களை மோசம் செய்தான் என்று கிரகித்தார்கள்.

எங்களை எதற்கு அவ்வளவு மோசம் செய்தானோ தன் மகனிடம் போய் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும், ஜெனங்கள் மத்தியில் முன்னுக்கு போய் தன்மகனை சந்தித்தார்கள். அப்போது தன் மகன் எந்த விதமாகவும் பயப்படாமல் சர்வ சாதாரணமாக, நன்றாக இருக்கிறீர்களா என்று வெளி மனிதர்களிடம் கேட்பது போல் கேட்டான் மகன். உடனே அங்கிருந்த தன்னுடைய மாமனாருக்கு அத்தைக்கு தன்னுடைய தாய் தந்தையை காண்பித்து இவர்கள் என்னுடைய பண்ணையை கவனித்து வரும் பணியாளர்கள் என்று அறிமுகப்படுத்தினான். அப்போது அவனுடைய தாய் தந்தை அந்த வார்த்தையை கேட்டு ஆச்சரியப்பட்டு, தன்னுடைய மகன் எங்களைப் பற்றி அவர்களிடம் பொய் சொல்லியிருக்கிறான் என்று அர்த்தம் செய்து கொண்டார்கள். தங்களைப் பற்றி பொய் சொல்லுவது மட்டுமல்லாமல் தன்னுடைய

ஸ்தானத்தில் வேறு தாய் தந்தைகளை ஏற்பாடு செய்து கொண்டான் என்றும் கூட தெரிந்து, அந்த நேரத்தில் அங்கு என்ன பேசினாலும் தன்னுடைய மகன் மோசக்காரன் என்பது எல்லோருக்கும் தெரிந்து போகும் நினைத்து, நாங்கள்தான் தாய் தந்தை என்பதை இப்போது சொல்லினால், இறுதிக்கு தன் மகன் கவலைப்பட வேண்டியது இருக்கும் என்றும், அப்படி தன்னுடைய மகன் எங்களினால் சிக்கிக் கொள்ளுவது அவர்களுக்கு இஷ்டம் இல்லாமல் போனதினால், அவர்கள் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருந்து விட்டார்கள். அவன் சுகத்திற்காக, அவனுக்குப் பிடித்த பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்கு, தன்னுடைய தாய் தந்தையை விட்டு வேறவர்களை தாய் தந்தையாக காண்பித்தான். தன்னுடைய மகனுக்கு உண்மையான தாய் தந்தையை விட்டு, தன்னுடைய கௌரவத்திற்காக வாடகைக்கு சிறிது காலம் இருந்து போகின்ற வரை தாய் தந்தையாக காண்பித்தது மட்டுமல்லாமல், திருமண நேரத்தில் சாஸ்வதம் அல்லாத தாய் தந்தை பெயரை தன்னுடைய தாய் தந்தையாக சொல்வது கவனித்த தாய், தந்தை, தனக்கு பிறந்து தங்களுடைய பெயர் சொல்லாமல் வேறு அவர்கள் பெயர் சொல்வது எவ்வளவு கவலைப்பட வேண்டிய விஷயமாக இருந்தாலும், தன்னுடைய மகன் எவ்வளவு மோசக்காரனாக இருந்தாலும் தன்னுடைய மகன்தான் என்று பொறுத்துக் கொண்டார்கள்.

பார்த்தீர்களா! இது எவ்வளவு கவலைப்பட வேண்டிய விஷயம்! எந்த தாய் தந்தை ஆனாலும் அவர்கள் எதிரிலேயே தன்னுடைய மகன் தன்னை அல்லவென்று வேறவர்களை தாய் தந்தையாக சொல்லியதை பார்த்தால், அவர்கள் எவ்வளவோ கவலையோடு பொங்கி போனார்கள். இந்த விஷயம் எந்த தாய் தந்தைக்காவதும் மானசீக கவலையை கொடுக்கும். மேலும் இங்கு நடந்த நிகழ்வுகளில் மணமகனுடைய உண்மையான தாய் தந்தைகள் கவலைப்படவில்லை. எங்கு இருந்தாலும், யாரை தாய் தந்தைகளாக சொல்லினாலும் இறுதிக்கு அவன் அவர்களுடைய மகன் தானே! என்னும், நம்முடைய மகன் சுகமாக இருந்தால் போதும் என்று நினைத்துக் கொண்டார்கள். அவர்களுடைய மகன் தன் கண் முன்னே எங்களை பணியாளர்காளாக காட்டி, தாய் தந்தை அல்லாத தற்காலிக தாய் தந்தையை தன்னுடைய தாய் தந்தையாக சொல்லிக் கொள்வதை பொறுத்துக் கொண்டு, அவன் எப்படி சொல்லினாலும் உண்மையில் நாங்கள்தான் அல்லவா!

என்று அவனுடைய தாய் தந்தை நினைத்துக் கொண்டார்கள். தற்போது அவனுடையது தவறு என்பது தெரியாமல் வேறவர்களை தாய் தந்தையாக சொல்லினாலும், ஏதோ ஒரு நாள் நம்மை தான் தாய் தந்தையாக ஒப்புக் கொண்டே தீர வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்கள். அப்படியே ஆறு மாதங்கள் காலம் கடந்து போனது. இடையில் ஒரு நாள் தன் மகனுக்கு பெரிய நோய் வந்தது என்று கிராமத்தில் இருக்கும் தாய் தந்தைகளுக்கு தெரிந்தது. தன்னுடைய மகன் நோயால் அவதிப்படுகின்றான் என்று தெரிந்த உடனே, அந்த வயதான தம்பதிகள் பட்டணத்துக்கு புறப்பட்டு சென்றார்கள். அவர்கள் போவதற்கு முன்பே ஆஸ்பத்திரியில் இருக்கின்ற அவனுக்கு ரத்தம் குறைவாக இருக்கிறது என்றும், அவனுக்கு சரியாக இருக்கின்ற குரூப் ரத்தம் வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லினார்கள். அப்போது திருமணத்திற்காக ஏற்ப்பாடு செய்த தற்காலிக தாய் தந்யை அவனுடைய மாமனார் வரவழைத்தார். அவர்களுடைய ரத்தத்தை பரிசோதனை செய்து பார்த்தால் அவர்களில் அவனுடைய குரூப்புக்கு சம்பந்தப்பட்ட ரத்தம் இல்லை என்று தெரிந்தது. அப்படி நடந்த பிறகு அவனுடைய உண்மையான தாய் தந்தை ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். தன்னுடைய மருமகன் பணியாளர்கள் என்று சொல்லப்பட்ட அவர்களைப் பார்த்து அவனுடைய மாமனாருக்கு சந்தேகம் வந்தது. முதலில் தாய் தந்தைகளாக வந்தவர்கள் அவனுடைய ஜாடைகள் இல்லாமல் இருப்பது, அவர்களுடைய ரத்தம் குரூப் வேறாக இருப்பது, அவர்கள் தாய் தந்தை இல்லை என்ற சந்தேகம் வந்தது. அப்படியே பணியாளர்களாக சொல்லப்பட்ட தம்பதிகளில் மருமகன் ஜாடைகள் அதிகமாக இருப்பதை பார்த்து இவர்கள்தான் உண்மையான தாய் தந்தை என்று சந்தேகம் வந்தது. உடனே அவனுடைய மாமனார் அங்கு வந்த தம்பதிகள் ரத்தத்தை, D,N,A வை (ஜீன்யை) பரிசோதனை செய்து பார்த்தால் அவனுடைய ரத்தம் சரியாக இருந்தது மட்டுமல்லாமல் அந்த தம்பதிகள் D,N,A (ஜீன்) அவருடைய மருமகனுடைய D,N,A ஒன்று தான் என்று தெரிந்து போனது. அதனால் அந்த தம்பதிகளுடைய மகன் என்றும், அவர்தான் உண்மையான தாய் தந்தைகள் என்று தெரிந்து போனது. இறுதிக்கு நாங்கள் தான் உண்மையான தாய் தந்தை என்றும், திருமணத்தில் இருந்தவர்கள் தற்காலிக தாய் தந்தைகளாக இருக்கின்றவர் தான் என்று, எல்லோருக்கும் தெரிந்து போன பின் தன் மகனும் கூட உண்மையான தாய் தந்தை

இவர்கள் என்று ஒப்புக்கொண்டதால் அந்த தம்பதிகள் சந்தோசப்பட்டார்கள். அப்போது அவர்களுடைய மகனை சொந்த வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள்.

தன்னுடைய உண்மையான தாய் தந்தையை விட்டு இத்தனை காலம் வேறாக, தூரமாக இருந்ததற்கு மகன் தன்னுடைய தாய் தந்யையிடம் மன்னிக்க வேண்டினான். தன்னுடைய தவறை தெரிந்து கொண்டதற்கு, மறுபடியும் உண்மையான தாய் தந்தை வீட்டுக்கு சேர்ந்தான். இந்த அனைத்து நிகழ்வுகளில் அனைவரும் மகனுடையது தான் தவறு என்றாலும், தாய் தந்தைகள் எவ்வளவோ பொறுத்துக் கொண்டார்கள் என்றும், அப்படிப்பட்ட மகன் எந்த தாய் தந்தைக்கும் இருக்கக்கூடாது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த நிகழ்வுகளை படித்த நீங்கள் கூட மகனுடையது வில்லன் பாத்திரம், தந்தையுடையது ஹீரோ பாத்திரம் என்று சரியாக சொல்வீர்கள். ஆனால் அந்த வில்லன் பாத்திரம் தன்னுடையது தான் என்று யாரும் நினைத்துக் கொள்ள மாட்டார்கள். இந்த விஷயத்தை விவரமாக சொல்லிக் கொண்டால் இப்படி இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் நிரந்தரமான, நிரந்தரம் இல்லாத இரண்டு ரகம் தாய் தந்தைகள் இருக்கின்றார்கள். இப்போது கூறிக் கொண்ட உதாரணத்தில் திருமண மகனுக்கு திருமண நேரத்தில் சிறிது நேரம் தாய் தந்தைகளாக இருக்கின்றவர்கள் நிரந்தரம் இல்லாத தாய் தந்தைகள். அவனை சிறிய வயதில் இருந்து வளர்த்திய நிரந்தரமான தாய் தந்தை இருப்பது போல், ஒவ்வொரு மனிதனுக்கு உலகம் பிறந்ததிலிருந்து ஜீவாத்மாவை வளர்த்துக் கொண்டிருக்கின்ற பிரக்ருதி பரமாத்மா நிரந்தரமான தாய் தந்தையாக, ஒரு ஜென்மத்திற்கு மட்டும் தாய் தந்தையாக இருக்கின்ற தேகத்திற்கு சம்பந்தப்பட்ட நிரந்தரம் அல்லாத தாய் தந்தைகளாக இருக்கின்றார்கள். ஜீவன் தன்னுடைய சாஸ்வதமான தாய் தந்தையை மணமகன் போல விட்டுவிட்டு, திருமணத்தில் மட்டும் வேலைக்கு வந்தவரை பிடித்துக் கொண்டது போல், ஒரு ஜென்மத்தில் மட்டும் வேலைக்கு வருகின்ற அசாஸ்வதமானவர்களை சொல்லிக் கொண்டிருக்கின்றான். அவன் செய்தது போல் நாம் கூட சாஸ்வதமான தாய் தந்தையாக இருக்கின்ற பிரக்ருதி பரமாத்மாவை விட்டு, தாய் தந்தை அல்லாதவர்களைப் பிடித்துக் கொண்டோம். நாம் பிரக்ருதி பரமாத்மாவை தாய் தந்தைகளாக நினைக்காமல் போனாலும்,

அவர்கள் மட்டும் எவ்வளவோ பொறுமையுடன் நாம் எங்கிருந்தாலும் யாரை அனுசரித்தாலும், இறுதிக்கு அவர்கள் மனிதனை இவன் எங்களுடைய சந்தானம் தான்! என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். திருமணத்தில் அவர்களுடைய மகன் தங்கள் முன்பே வேறு தாய் தந்தைகளுக்கு பாத நமஸ்காரம் செய்து கொண்டிருப்பது கூட, அவர்களுடைய மகன் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்த தாய் தந்தைகள் போல், பிரக்ருதி பரமாத்மா ஜீவன் மீது சிறிதளவு கூட கோபித்துக் கொள்ள வில்லை (கோபத்தை) காட்டவில்லை. அவர்களுடைய மகன் தன்னுடைய தவறை தெரிந்து கொண்டு இறுதிக்கு அவனுடைய சொந்த வீட்டுக்குப் போனது போல், ஜீவன் கூட தன்னுடைய அஞ்ஞானத்தால் நடந்து கொண்டது தவறு என்னும் தெரிந்து கொண்டு, ஞானம் தெரிந்து கொண்டு தன்னுடைய உண்மையான தாய் தந்தை பிரக்ருதி பரமாத்மாவின் சன்னிதியை (மோக்ஷத்தில்) சேருவான். இந்த விஷயம் ஜீவிகளாக இருக்கின்ற நம் எல்லோருக்கும் கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது என்று நினைக்கிறோம்.

ஒவ்வொருவரும் தாய் தந்தைகள் விஷயத்தில் தவறாக நினைக்க கூடாது என்னும், தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகளை தேகத்திற்கு கொடுக்கின்ற கௌரவத்துடன், ஆத்மாவின் தாய் தந்தையை ஆத்ம கௌரவத்தால் பார்க்க வேண்டும் என்னும் நாங்கள் பல தடவை பல பேருக்கு தெரிவித்தோம். பல பேர் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகள் தவிர தன்னுடைய (ஜீவாத்மா) உடைய தாய் தந்தையை சிறிதளவு கூட அடையாளிக்கவில்லை என்றும், அப்படி செய்வதினால் தனக்கு பிரக்ருதி பரமாத்மாவினால் கிடைப்பது எதுவும் கிடைக்காமல் போகின்றது என்று தெரிவித்தோம். நாங்கள் சொல்லிய வார்த்தை கேட்ட சிலர்கள் இதன் போல கேள்வி கேட்பதும் நடந்தது. “யாரும் இதுவரை சொல்லாத விஷயங்களை நீங்கள் சொல்கின்றீர். எங்களுக்கு தெரிந்த வரை தெரிகின்ற தாய் தந்தைகள் தவிர யாரும் இல்லை. இது எங்களுக்கு தெரிந்தது மட்டுமல்லாமல் எத்தனையோ பேர் சுவாமிகள் மற்றும் ஞானம் தெரிந்த பெரியோர்கள் தெரிகின்ற தாய் தந்தைகளையே வளர்த்தி, கௌரவிக்க வேண்டும் என்று சொல்லினார்கள் மற்றும் பூஜை செய்யுங்கள் என்று சொல்லினார்கள். பெரியோர்கள் சொல்லியது போல் சிலர்கள் செய்கின்றார்கள், சிலர்கள் செய்வதில்லை. மேலும்

நீங்கள் மட்டும் இப்போது இன்னொரு தாய் தந்தைகள் இருக்கின்றார்கள் என்னும், அவர்கள் இவர்களை விட பெரியவர்கள் என்னும், அவர்களை நீங்கள் அடையாளிக்காமல் போனால் அவர்களுடைய சொத்து உங்களுக்கு வராது என்று சொல்கின்றீர்கள். அவர்கள் யார், அவர்களுடைய சொத்து என்னவென்று உங்களுக்கு தெரியாது. எல்லோருக்கும் தெரிந்த படி எங்களுடைய தாய் தந்தைகள் மட்டும் எங்களுக்கு தெரியும். அவர்கள் எனக்கு பங்கிட்டு கொடுத்த பத்து ஏக்கர் சொத்து கூட தெரியும். ஆனால் தெரியாத தாய் தந்தைகளை பற்றி, அவர்களினால் வரும் சொத்து விஷயம் எங்களுக்கு தெரியாது. உங்களுக்கு ஏதாவது தெரிந்திருந்தால் அவர்கள் எப்படிப்பட்டவரோ, அவர் சொத்து என்னவென்று தெரிவித்தால், அவர்களைத் தேடி தெரிந்து கொள்வது மட்டுமல்லாமல், அவர்களிலிருந்து வரும் சொத்துக்கள் கூட வாங்கிக் கொள்வோம்" என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் சொல்லிய பதில் என்னவென்றால்!

நாங்கள் உங்களுக்கு இரண்டாவது தாய் தந்தை இருக்கிறார்கள் என்னும் பல தடவை சொல்லினாலும் நீங்கள் சொல்லியபோது அதை தவிர்த்து விட்டீர்கள். இப்போது அவர்களுடைய சொத்து உங்களுக்கு வராது என்னும் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, சொத்து என்ற பெயர் கேட்டாலே அவர் எங்கு இருப்பார்களோ? எப்படி இருக்கிறார்களோ? அவர்களிடம் எங்களுக்கு வரும் சொத்து என்ன இருக்கிறது என்று கேட்கின்றார்கள். கிருஷ்ண பகவான் ஐந்தாயிரம் வருடம் பூர்வம் பகவத்கீதாவில் தாய் தந்தை விஷயங்கள் சொல்லிய போதே நீங்கள் இவ்வளவு ஆர்வம் காட்டியிருக்கக் கூடாதா? ஒருவேளை அவர் சொல்லியது எங்களுக்கு தெரியாது என்றால், 2000 வருடம் பூர்வம் பைபிளில் இயேசு பிரபு **"உன் தந்தை பரலோகத்தில் இருக்கிறார்"** என்னும் சொல்லிய போது, அந்த தந்தையைப் பற்றி, அவரினால் வரும் சொத்துக்கள் பற்றி கேட்கக் கூடாதா? 1400 வருடங்கள் பின்பு குர்ஆன் கிரந்தத்தில் மஹமத் பிரவக்தா **"உன்னை பிறக்க வைத்தது கடவுள் தான்"** என்னும் அழுத்தி சொல்லியபோது அவர் யார்? அவருடைய சொத்து என்னவென்று சிறிதாவது, யாராவது கேட்டீர்களா? எத்தனையோ பேர் பிரவக்தாகள், பகவான் கடந்த காலத்தில் உன்னுடைய உண்மையான தாய் தந்தையை பற்றி சொல்லியபோது, யாரும் சொல்லாத விஷயம் நீங்கள் சொல்லுகின்றீர்களே என்று கேட்பது

என்ன? உங்களை போல் உள்ளவர்களால் தான் உண்மையான தாய் தந்தையை பற்றி தற்போது காலத்தில் சில சுவாமிகளுக்கும் தெரியாமல் போனது. மேலும் அவர்கள் சொல்லாமல் போனால் சத்தியத்தை சொல்லிய நாங்கள் உருவாக்கி சொல்லியதா? சிலர்கள் நினைத்துக் கொண்டது போல் நாங்கள் தாய் தந்தை விஷயத்தில் அசத்தியத்தை கூறவில்லை. எத்தனையோ பேர் வக்தர்கள் (சிறந்த பேச்சாளர்கள்), பிரவக்தர்கள் (சிறந்த ஞானத்தை வழங்கக் கூடியவர்கள்) கடந்த காலத்தில் சொல்லிய விஷயத்தை நாங்கள் கூட சொல்லினோம். இப்போது அந்த தாய் தந்தையால் வருகின்ற சொத்து என்னவென்று தெரிவிக்கிறேன் கேளுங்கள்.

தெரிகின்ற தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகள் தெரிகின்ற சொத்து மட்டும் தான் கொடுப்பார்கள். தெரிகின்ற சொத்து தனம், தங்கம், பொருள், வாகனங்கள் சர சொத்து, அதன் போலவே வீடுகள் பூமிகள் எனப்படும் ஸ்திர சொத்துக்கள் தவிர ஒன்றும் இருக்காது. இதில் சர சொத்துக்கள் சிலது இருந்தாலும், ஸ்திர சொத்துக்கள் சிலது இருந்தாலும், வாஸ்தவமாக எல்லாம் சர சொத்துக்கள் தான் என்று சொல்லலாம். சர சொத்துக்கள் என்றால் அசாஸ்வதமானது என்னும் மாற்றம் அடைகின்றது என்று அர்த்தம். அதன் போலவே ஸ்திர (அசையா) சொத்துக்கள் என்றால் நிரந்தரமாக இருக்கும் மேலும், மாற்றம் அடையாதது என்று அர்த்தம். பேருக்கு பூமிகளை ஸ்திர சொத்துக்கள் என்னும் சிலர்கள் சொல்லிக் கொண்டாலும், வாஸ்தவமாக அது கூட மனிதனுக்கு சர சொத்து என்று சொல்லலாம். அது எப்படி என்றால்! தெரிகின்ற தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகள் நிரந்தரமானவர்கள் அல்ல. அவர்கள் ஒரு ஜென்மத்திற்கு மட்டும் தாய் தந்தையாக மட்டுமல்லாமல், ஒரு ஜென்மத்தில் கூட முழுமை காலம் இருக்காமல் சில காலம் இருந்து போவார்கள். நிரந்தரமில்லாத அவரிலிருந்து கிடைத்தது கூட நிரந்தரம் இல்லாதது என்று சொல்லலாம். இதனை பொறுத்து இதுவரை வெளியில் இருக்கின்ற தாய் தந்தைகளில் இருந்த நிரந்தரமானது கிடைக்கவில்லை. இப்போது சிலர்கள் ஒரு கேள்வியை கேட்கலாம். மனிதன் கூட சிறிது காலம் இருந்து போகின்றவர் தானே! அப்படிப்பட்ட போது மனிதனே நிரந்தரம் இல்லாத போது அவனுக்கு நிரந்தரமாக இருக்கின்ற சொத்து என்ன இருக்கும்? என்று கேட்கலாம். அதற்கு பதிலை கவனித்தால் இதன் போல்

இருக்கின்றது. தெரிகின்ற மனிதனில் நிரந்தரமானது, நிரந்தரம் இல்லாதது இரண்டு பாகம் இருக்கின்றது. நிரந்தரம் இல்லாதது மேல் தெரிகின்ற தேகம் என்று தெரிந்து கொண்டோம். மேல் தெரியாத ஜீவன் சிருஷ்டி ஆதியில் இருந்து இருக்கிறான். தன் அணிந்த எத்தனையோ தேகங்கள் அழிந்து போனாலும், அவன் மட்டும் அழியாமல் இருக்கின்றான். அதனால் ஜீவன் நிரந்தரமானவன் என்னும், தேகம் நிரந்தரம் இல்லாதது என்று சொல்கின்றோம். அது மட்டுமல்லாமல் ஒரு ஜீவன் தேகம் அணிந்து ஓரிடத்தில் இருக்கவில்லை. ஒவ்வொரு ஜென்மத்தில் ஒவ்வொரு பகுதிகளில், ஒவ்வொரு பெயரில் அதுவரை இருக்கின்றான். பகுதிகள், பெயர்கள், தேகம் சிறிது காலம் இருக்கும்போது ஜீவன் நிரந்தரமாக இருக்கின்றான். தேகத்தில் கூடியிருக்கின்ற மனிதன் நிரந்தரம் இல்லாமல் இருக்கும்போது, அதில் ஜீவன் நிரந்தரமானவன் என்று தெரிந்து கொண்டோம் அல்லவா! அந்த விதமாகவே தெரிகின்ற மனிதர்கள் நிரந்தரம் இல்லாத தாய் தந்தைகளில் இருந்து கிடைப்பது நிரந்தரம் இல்லாத சொத்துக்கள் தான் என்று சொல்லலாம். அதனால் நிரந்தரமாக இருக்கின்ற தாய் தந்தைகளிடமிருந்து கிடைக்கின்ற சொத்து, நிரந்தரமாகவே இருக்கின்றது சூத்திரம். அதன் பிரகாரம் சிருஷ்டி ஆதியில் ஜீவனுக்கு தாய் தந்தையாக இருக்கின்ற பிரக்ருதி பரமாத்மாக்கள் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கின்றார்கள். அவர்கள் மாறவில்லை, அவருக்குப் பிறந்த ஜீவனும் மாறவில்லை. அதனால் நிரந்தரமாக இருக்கின்ற தாய் தந்தைகளிடமிருந்து வரும் சொத்து நிரந்தரமானது என்று சொல்லினோம்.

தெரிகின்ற தாய் தந்தைகளிலிருந்து சர ஸ்திர என்பது கிடைத்தது அது எல்லாம் சர சொத்து தான் என்று சொல்லினோம் அல்லவா! அதன் போலவே பிரக்ருதி பரமாத்மாவில் இருந்து சொத்தாக கிடைத்ததும் கூட சர ஸ்திர சொத்து தான் என்று சொல்லலாம். கடவுளின் இருந்து மனிதனுக்கு கிடைத்த அவற்றினை ஒரு முறை பிரகாரம் சர ஸ்திர சொத்துக்கள் என்று சொல்லினாலும், அவற்றின் மற்றொரு விதமாக ஸ்திர சொத்துக்கள் என்று சொல்லலாம். நிரந்தரமான தாய் தந்தைகளிலிருந்து கிடைக்கின்ற சொத்துக்கள் நிரந்தரமானது என்னும் சூத்திரம் பிரகாரம், தந்தையான கடவுளிடம் இருந்து கிடைக்கும் சர ஸ்திர சொத்துக்கள் எல்லாம் நிரந்திரமானதாகும். கடவுளிடம் இருந்து கிடைக்கின்றதனை கூட சர, ஸ்திர என்று இரண்டு ரகமாக

இருக்குமா? என்று யாராவது கேட்டால் இந்த விதமாக பதில் சொல்லலாம். கடவுளிடம் இருந்து கிடைக்கின்ற அவற்றில் ஒரு ஜீவித காலம் எல்லாம் இருப்பது சர சொத்துக்கள், ஒரு ஜீவிதம் என்னும் அளவு இல்லாமல் நிரந்தரமாக இருப்பது ஸ்திர சொத்து என்று சொல்லலாம். ஒரு ஜீவித காலத்தில் மட்டும் இருந்து, மரணம் நேரத்தில் போகின்றது சர சொத்துக்கள் என்று சொல்லலாம். அது நம்முடைய தேகத்தின் ஜென்மத்திலேயே கிடைத்தாலும், தெரியாதது இரண்டு ரகமான உறுப்புகள் என்று சொல்லலாம். அப்படிப்பட்ட சர சொத்துக்களில் முக்கியமானது இதயம், சிறுநீரகம், கல்லீரல், நுரையீரல் மற்றும் முதலியன எத்தனையோ இருக்கின்றது. இதெல்லாம் ஒரு ஜென்மத்திற்கு மட்டும் இருந்தாலும், பிறகு ஜென்மத்திலும் கூட அப்படிப்பட்ட உறுப்புகளை கடவுள் கொடுக்கின்றார். தேகத்தில் இருக்கின்ற உறுப்புக்கள் எல்லாம் ஒரு ஜென்மத்திற்கும் மட்டும் இருந்தாலும், எல்லா ஜென்மங்களில் அதே உறுப்புக்கள் கிடைக்கின்றதினால் அவற்றைக் கூட ஒரு விதமாக நிரந்தரமான அவற்றின் பட்டியலில் சேர்த்து சொல்லலாம்.

இனி கடவுளிடமிருந்து கிடைக்கும் சாஸ்வதமானது ஒன்று இருக்கின்றது அதனை விட மீறியது, அதனை விட பெரியது எதுவும் இருக்காது, அதுதான் மோக்ஷம், மோக்ஷத்தை முக்தி என்று கூட சொல்வார்கள். ஒருமுறை முக்தி கிடைத்தால் அது உன்னிடம் சாஸ்வதமாக இருக்கும். அது கிடைத்த பின் ஜென்ம ஜென்மத்திற்கு மாறிப்போகும் சர சொத்துக்களில் வேலை இல்லை. அதனால் முக்தி கிடைத்தவனுக்கு ஜென்மங்கள் இருக்காது. மோக்ஷம் ஒரு முறை கிடைத்தால், அது முழுமையாக ஸ்திர சொத்தாகவே இருக்கும். எவ்வளவோ பெரிய ஸ்திர சொத்தான மோக்ஷம் கடவுளாகப்பட்ட தந்தையிடமிருந்து கிடைக்கின்றதால், அது அவ்வளவு சுலபமாக யாருக்கும் கிடைக்காது. நீ உண்மையாக சிருஷ்டி ஆதியில் இருந்து யாருடைய குமாரன் என்று தெரிந்து, பலானவர் சாஸ்வத தந்தை என்று தெரிந்து, மௌனமாக இருக்கின்ற கடவுளிடம் நானும் உன்னுடைய குமாரன், நீ தான் உண்மையான சாஸ்வதமான தந்தை என்று ஒப்புக் கொண்டு, சொல்லிக் கொண்டு அதற்கு தகுந்த சாட்சி ஆதாரம் எல்லாவற்றையும் கடவுளுக்கு காண்பித்தால், மனிதன் சொல்லுவது எல்லாம் மனசு பூர்த்தியாக சொல்லுகின்றான் என்னும் கடவுளுக்கு தெரிந்தால், அப்போது அவரில் இருந்து மோக்ஷம் கிடைக்கும்.

மனிதன் சொல்லுவது முழுமையாக சத்தியம் என்று தெரிந்து கடவுள் மனிதனுக்கு மோக்ஷம் கொடுத்தால், அது கிடைத்த மனிதன் மறுபடியும் ஜென்மம் எடுக்காமல், கடவுள் சன்னிதானமான பரமில் சேருவார். பரலோகத்தில் சேர்ந்தவர் யாராக இருந்தாலும் அதுவரை இருந்த தன்னுடைய நிலையை இழந்து, தெய்வ நிலையாக மாறி பரலோகத்தில் சேருவார். கடவுளுடைய சொத்தான மோக்ஷத்தை அடைந்தவன், கடவுள் போல் மட்டுமல்லாமல் கடவுளாக மாறி போவான். ஒரு மனிதன் மோக்ஷம் அடைந்தால், அவன் கடவுளாகி போனால், அதுவரை இருந்த கடவுள் என்ன ஆகுவார்? அப்போது இரண்டு கடவுள் இருப்பார்களா? என்று சிலர் கேட்கலாம். அதற்கு பதில் என்னவென்றால்! சிருஷ்டி ஆதியில் இருந்து கடவுள் ஒருவர் தான் இருப்பார். ஆனால் மனிதன் மோக்ஷம் அடைந்தால் இரண்டு கடவுளாக மாட்டார். எவ்வளவு பேர் மனிதர்கள் மோக்ஷம் அடைந்தால் எல்லோரும், இருக்கின்ற கடவுளில் சேர்ந்து போய் அவர்களும் கூட கடவுள் ஆகி விடுவார்கள். ஆயிரம் பேர் ஜீவிகள் மோக்ஷம் அடைந்தாலும் அவர் எல்லோரும் ஒரே கடவுளிலேயே சேர்ந்து போவார்கள். நதிகள் எத்தனை கடல்களில் சேர்ந்தால் எல்லாம் கடலாக மாறி போகும் அல்லவா! நதிகள் கடலில் சேர்ந்து போன பிறகு அதுவரை அதற்கு இருந்த பெயரை நிலையை இழந்து நதிகள் கடல் நிலையாக, கடல் என்ற பெயராக மாறிப்போகும் அல்லவா! அந்த விதமாகவே தேகத்தை அணிந்தவர்கள் எத்தனை பேர் மோக்ஷம் அடைந்தாலும், அவர் எல்லோரும் கடவுளாகவே இருப்பார்கள். கடலில் நதியை அடையாளிக்க முடியாததால் கடவுளிடம் சேர்ந்தவன் பலானவன் என்று அடையாளிக்க முடியாது. எத்தனை நதிகள் சேர்ந்தாலும் முதலில் இருந்த கடல் தன்னுடைய இடம், தன்னுடைய நிலை, தன்னுடைய சாந்தரத்தை எப்படி இழந்து போகதோ, அந்த விதமாகவே எத்தனை ஜீவிகள் கடவுளில் சேர்ந்தாலும் கடவுள் தன்னுடைய நிலையை, தன்னுடைய தர்மங்கள் நிலையை இழக்க வில்லை. கடலில் சேர்ந்த எந்த நதியாக இருந்தாலும் மாயமாகி போனது போல், கடவுளில் சேர்ந்த யாராவதும் அதுவரை இருந்த தன்னுடைய நிலையை பெயரை இழந்து போகும். பகவத்கீதாவில் புருஷோத்தம பிராப்த்தி யோகம் என்னும் அத்தியாயத்தில் 7ஆவது சுலோகம் இந்த விதமாக இருக்கின்றது.

*சுலோகம்:- மமைவாம்ஷோ ஜீவலோகே ஜீவபூத ஸநாதநஹ /*

*முநஷஷ்டாந்நீரியாணி பிரக்ருதி ஸ்தாநி கர்ஷதி //*

**கருத்து:-**ஜீவாத்மா என்னுடைய அம்சத்தால் பிரக்ருதியில் பிறந்தாலும் கூட அது கர்மத்தினால் கூடியிருப்பதினால் மனசு முதலியன இந்திரியங்களினால் அடைக்கப்பட்டு ஜென்மத்திற்கு அந்த பக்கம் இந்த பக்கம் இழுக்கப்படுகின்றான்.

மேல் உள்ள சுலோகத்தில் கடவுள் சொல்லியது போல் ஜீவாத்மா ஆனவன் முதலில் பரமாத்மாவிலிருந்து பரமாத்மா அம்சத்தில் இருந்து பிறந்தவன் என்று தெரிகின்றது. பரமாத்மா (கடவுள்) இன் சூட்சுமாதி சூட்சுமமான ஒரு பாகத்தினால் பிறந்தவர் ஒரு மனிதன், அதனால் மேல் உள்ள சுலோகத்தில் "மமை வாம்ஷோ ஜீவ லோகே ஜீவ பூத" என்று சொல்லப்பட்டது. ஒரு ஜீவன் பூமி மீது எந்த மனிதனாக இருந்தாலும், அவர் கடல் நீரில் மழை துளி போல், கடவுளிலிருந்து வந்த அம்சம் தான் என்று தெரிகின்றது. கடவுளிலிருந்து பிரிந்து போன கடவுளின் அம்சம் கொண்ட ஜீவன் கர்மத்தினால் அடைக்கப்பட்டு, எத்தனையோ ஜென்மங்கள் அடைந்து, இறுதிக்கு கர்மத்தை தெரிந்து கொண்டு, அதனிலிருந்து வெளியே வந்து, மறுபடியும் தன்னுடைய முதலாவது ஸ்தானத்தில் கடவுளில் சேருகின்றான். கர்ம பந்தம் இல்லாத ஜீவன் கடவுளில் சேரும்போது, ஜீவன் கடவுளின் அம்சமானதினால், சுலபமாக கடவுளிடம் இணைந்து போகின்றன். அதனை ஜீவபிரம்ம ஐக்கிய சந்தானம் என்று சொல்லலாம். கர்ம பந்தத்தில் இருந்து வெளியே வருவது முக்தி அல்லது மோக்ஷம் என்று சொல்லலாம். கடவுளின் அம்சம் கொண்ட ஜீவன் கர்மத்தினால் அடைக்கப்பட்டு பலவிதமான ஜென்மங்களை அடைந்து, எப்போது தன்னுடைய ஞானத்தை தன் தெரிந்து கொண்டு, கர்மம் என்னும் சிறையிலிருந்து விடுதலை (முக்தி) அடைந்து, முதல் ஸ்தானமான தன்னுடைய ஸ்தானத்தை ஜீவன் சேர்ந்து, முதல் தன் யாராக இருந்தாரோ அவராகவே (கடவுளாகவே) மாறி போகின்றான்.

இப்போது உங்களுக்காக நானே (ஜீவன்) ஒரு கேள்வி கேட்கின்றேன். அது என்னவென்றால்! தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தைகள் தன்னுடைய மகனுக்கு சொத்துக் கொடுக்கும் போது ஒரு சர சொத்து மட்டுமல்லாமல், ஸ்திர சொத்து கூட கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு தடவை தந்தை சொத்து கொடுத்தால்

இரண்டு ரகமான சொத்துக்கள் கொடுப்பார். மேலும் முதலில் ஒன்று கொடுத்து பிறகு சிறிது காலத்திற்கு மற்றொன்று கொடுக்கவில்லை. ஆனால் மனிதனுக்கு கடவுள் முதலில் தேகத்தில் உறுப்புக்களை சர சொத்துக்களாக கொடுத்து, பிறகு எத்தனையோ ஜென்மங்கள் கடந்த பின் ஜீவன் இஷ்டமாக வேண்டிக் கொண்டால் அதுவும் ஜீவனுடைய கோரிக்கைகள் தன் ஒப்புக்கொண்டால், அப்போது ஸ்திர சொத்துக்களான மோக்ஷத்தை கொடுப்பார் என்று நீங்கள் தெரிவித்தீர். தேகம் தந்தை கொடுத்தது போல் ஜீவனுடைய தந்தையான கடவுள் இரண்டு ரகமான சொத்துக்கள் ஒரே தடவை எதற்கு கொடுக்கவில்லை? என்று கேட்கின்றோம். அதற்கு பதில் என் பக்கத்திலேயே இருக்கின்ற என்னுடைய நண்பன் (ஆத்மா) இதன் போல சொல்கின்றார். வெளியே தெரிகின்ற தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தந்தை கொடுத்த சர, ஸ்திர இரண்டு ரகமுள்ள சொத்துக்கள் ஒரு மனிதன் அடைந்த பின் அவனிடம் இருந்த சர சொத்து ஸ்திர சொத்தாக மாற்றிக் கொள்ளலாம். அதன் போலவே தனக்கு இருக்கின்ற ஸ்திர, சர சொத்தாக கூட மாற்றிக் கொள்ளலாம். சர சொத்துக்களான பணத்தை ஸ்திர சொத்தான பூமிகளை, வீடுகளை வாங்கி சர சொத்துக்களை ஸ்திர சொத்துக்களாக மாற்றிக் கொள்ளலாம். அதன் போலவே ஸ்திர சொத்துக்களான பூமியை வீடுகளை விற்று சர சொத்துக்களாக மாற்றிக் கொள்ளலாம். மேலும் கடவுள் கொடுத்த சர சொத்துக்கள் ஸ்திர சொத்துக்களாக மாற்ற முடியாது. அதன் போலவே கடவுள் கொடுத்த ஸ்திர சொத்துக்கள் கூட சர சொத்துக்களாக மாற்ற முடியாது.

இனி விவரமாக சொல்லிக் கொண்டால் தெரிகின்ற தந்தை ஒரு தடவை இரண்டு ரகமுள்ள சொத்துக்களை கொடுத்தது போல், தெரியப்படாத தந்தையான கடவுள் இரண்டு சொத்துக்களை ஒரே தடவை கொடுக்க மாட்டார். முதலில் சர சொத்துக்கள் மட்டும் கொடுப்பார். சர சொத்துக்களால் மனிதன் ஜீவிதம் நடந்து கொண்டிருக்கும். எந்த மனிதன் ஆனாலும் எனக்கு சர சொத்துக்கள் வேண்டாம், ஸ்திர சொத்துக்கள் தான் வேண்டும் என்னும் வேண்டியபோது, அவன் முழுமை இஷ்டத்தால் ஸ்திர சொத்துக்களை வேண்டி இருந்தால், அவரிடம் இருக்கின்ற சர சொத்துக்களை எடுத்துக் கொண்டு, ஸ்திர சொத்துக்களை கடவுள் கொடுப்பார். கடவுள் கொடுக்கப்படும் இரண்டு சொத்துக்களில் ஒன்று இருந்தால் இன்னொன்று இருக்காது. கடவுள் கொடுக்கும்

இரண்டு சொத்துக்களில் கடவுள் கொடுத்த உடைமைகள் ஒன்றுக்கொன்று மாறாதவை. சர சொத்துக்கள் தேகம் இருந்தால், ஸ்திர சொத்தான மோக்ஷம் இருக்காது. ஒருவேளை ஸ்திர சொத்தான மோக்ஷம் கிடைத்தால் சர சொத்தான தேகம் இருக்காது. இது இப்படி இருக்கும் போது ஜீவனுக்கு தந்தையாக இருக்கின்ற கடவுள், முதலில் மனிதர்கள் எல்லோருக்கும் சர சொத்தான தேகத்தை கொடுத்தார். இப்படி கொடுத்த தேகத்துடன் மனிதன் திருப்தி பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றான். தேகத்தில் இருக்கின்ற மனிதன் (ஜீவன்) இரண்டாவது சொத்தை மறந்து விட்டான். இரண்டாவது ரகம் கொண்ட சொத்தாக இருக்கின்ற மோக்ஷம் எனக்கு தேவை இல்லை என்று சிலர் சொல்கின்றார்கள். சிலர்கள் தேகத்தால் இறந்து பிறந்து இதன் போன்று காலத்தை கடத்துவது நல்லது அல்லவா! எந்த வேலை இல்லாத மோக்ஷத்தை அடைந்தால் காலம் எப்படி போகும் என்று சொல்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் மோக்ஷத்தை வேண்டுவதில்லை. மோக்ஷத்தை இஷ்டமாக வேண்டினால் தான் கடவுள் கொடுப்பார். மற்றும் அதனை வேண்டாமல் இருந்தால், இஷ்டம் இல்லாமல் வேண்டினால் கடவுள் கொடுக்க மாட்டார். கடவுள் கொடுக்கின்ற இரண்டு ரகமான சொத்துக்களில் ஒன்றை மட்டும் வேண்டிக் கொள்ளாமலே கொடுப்பார். இரண்டாவதை வேண்டினால் அவனுக்கு இருக்கின்ற ஆர்வத்தை பொறுத்துக் கொடுப்பார். **ஆர்வ குறைவு சிறிதளவு இருந்தாலும் கடவுள் கொடுக்கப்படும் மோக்ஷம் கிடைக்காது.**

இனி சிலர்கள் கடவுள் கொடுக்கப்பட்ட சர சொத்தான தேகம் இருக்க வேண்டும் என்னும் வேண்டி, இரண்டாவது ரகமான மோக்ஷத்தை கூட வேண்டுகின்றார்கள். ஆனால் அப்படி கொடுப்பதற்கு கடவுள் ஒப்புக் கொள்ள மாட்டார். கடவுள் முதலிலேயே, ஒன்று இருந்தால் மற்றொன்று இருக்காது என்னும் சாசனம் செய்தார். அந்த சாசனம் பிரகாரம் தேகம் இருந்தால் மோக்ஷம் யாருக்கும் கிடைக்காது. தேகத்தை வேண்டுகின்றவர்கள் மோக்ஷத்தை வேண்ட மாட்டார்கள். வேண்டினால் அவருக்கு மோக்ஷம் கிடைக்காது. சிலர்களுக்கு தெரியத ஒருவர் தந்தை இருக்கிறார் என்னும், அவரினால் மோக்ஷம் கிடைக்கும் என்று சிறிதளவு கூட தெரியாது. அப்படிப்பட்டவர்கள் இரண்டாவது சொத்தான மோக்ஷத்தை வேண்டுவதற்கும் வாய்ப்பே இல்லை. அவர்கள் சாஸ்வதமாக ஜெனன மரணங்களை அடைவார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு கடவுள் யார் என்று கூட தெரியாது. மேலும் அவர்கள் கடவுளைக் கூட குற்றம் சொல்லும் நிலையில் இருப்பார்கள். அவர்கள் கடவுளை குற்றம் சொல்லினால், அவர்களுக்கு கடவுள் தவறாமல் தண்டனை கொடுப்பார். பூமி மீது சிலர் தெரிகின்ற தாய் தந்தை சொத்துக்கள் அனுபவித்துக் கொண்டு அந்த சொத்துக்களை தன்னுடைய உரிமை என்று நினைத்துக் கொண்டு, தாய் தந்தைகள் அவருக்கு கொடுத்தது இந்த சொத்துக்கள் என்னும், சிறிதளவு கூட நினைக்காமல், இப்போது இருக்கின்ற சொத்துக்களை விட இன்னும் சேஷ்டமானவற்றை கொடுக்கவில்லை என்னும், தன் தாய் தந்தையை திறமை இல்லாதவர்களாக நினைத்து பேசுவார்கள். அந்த விதமாகவே கடவுளுடைய மதிப்பை, ஞானத்தை அடையாளிக்காத மனிதர்கள் சிறிது வயதான பிறகு முதிய வயதில் கண்கள் தெரியாமல் போனால், முழங்கால் வலி வந்தால், தேகம் லேசாகியபோது, கடவுள் இப்படிப்பட்ட தேகத்தை எதற்கு கொடுக்க வேண்டும்? கருங்கல்லால் செய்யப்பட்ட தேகத்தை கொடுக்கக் கூடாதா! அல்லது ஏதோ ஒரு லோகத்தால் செய்த தேகத்தை கொடுக்கக் கூடாதா? இந்த விதமாக முழங்கால் தேய்ந்து போவதும், எலும்புகள் உடைந்து போவதும், சதை கரைந்து போகின்ற தேகத்தை கொடுக்க வேண்டும் என்னும், உண்மையாக இப்படிப்பட்ட தேகத்தை தயார் செய்ய வேண்டும் என்னும் யாரேனும் ஆலோசனை கொடுத்தார்களோ! இந்த விதமாக கேட்கின்றவர்களும் கூட இருக்கின்றார்கள். இந்த விதமாக இருக்கின்ற சொத்துக்களை விட்டு இல்லாத சொத்தை, இன்னும் சுகத்தை கொடுக்கும் சொத்துக்கள் வேண்டுகின்றவர்கள் கூட இருக்கின்றார்கள். அப்படி வேண்டுவதில் தவறில்லை, அவர்களுக்கு இருக்கின்ற சொத்துக்கள் மதிப்பு பற்றி தெரிந்து கொள்ளாமல் போவது தவறாகி நின்றது. அவர்களுக்கு கொடுத்த தேகத்திற்குள் புத்தி என்ற சொத்து உலகத்தில் எந்த ஜீவராசிகளுக்கு கொடுக்கவில்லை என்னும், அவர்களுக்கு இருக்கின்ற யோசனை சக்தி எந்த ஜாதி விலங்குகள் கூட இல்லை என்னும், அப்படிப்பட்ட புத்தியை கொடுத்ததற்காக தன்னுடைய தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாக்கள் எவ்வளவோ சிறந்தவர்கள் என்னும், எல்லாவற்றுக்கும் திறமையானவர்கள் என்று யாரும் நினைக்கவில்லை. சிருஷ்டி ஆதியில் பிறக்க வைத்த, சாஸ்வதமான தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாக்களை மனிதன் தெரிந்து கொள்ளாமல் போவதற்கு, அவர்களுடைய மதிப்பு

தெரிந்து கொள்ளாமல் போனதற்கு மனிதனுக்கு இருக்கின்ற அஞ்ஞானமே காரணம்.

பூமி மீது சிலர் மனிதர்கள் சிறிது ஞானம் தெரிந்து கொண்டு அந்த சிறிய ஞானத்துடன் கடவுள் இப்படிப்பட்டவர் என்னும் சொல்லிக்கொண்டு இருக்கின்றார்கள். ஒவ்வொரு மதத்திற்கு சேர்ந்தவர்கள் ஒவ்வொரு விதமான ஞானத்தை சிறிது வரை தெரிந்துகொண்டு, கடவுளைப் பற்றி பேசுகின்றார்கள். எந்த மதத்தில் இருந்தாலும் சம்பூரணமான ஞானம் தெரியாமலேயே, கடவுளைப் பற்றி பேசினால் அது அசம் பூர்ணமாகவே இருக்கும். சிறிது ஞானம் தெரிந்தவனுக்கு கடவுள் எப்படிப்பட்டவரோ, அவருடைய உண்மையான சொரூபம் என்ன, அவருடைய விதானம் என்ன வென்று முழுமையாக தெரியப்படாது. அவருக்குத் தெரிந்த சிறிது ஞானத்தினால் கடவுள், கடவுளுடைய விதானங்கள் (தர்மங்கள்) சிறிது மட்டும் தெரியும் என்று பல பேருக்கு தெரியாது. அதனால் ஒவ்வொரு மனிதனும் கடவுளைப் பற்றி தனக்குத் தெரிந்தது எல்லாம் வேறவர்களுக்கு தெரியாது என்று நினைத்துக் கொண்டிருப்பார்கள். அதன் போலவே ஒவ்வொரு மதத்திற்கு சேர்ந்தவர்கள் அவர்களுடைய மதத்தில் கடவுளைப் பற்றி தெரிந்தது எல்லாம், வேற மதத்திற்கு சேர்ந்தவர்களுக்கு தெரியாது என்று நினைத்து கொண்டிருப்பார்கள். இன்னும் எங்கள் மதத்தில் சொல்லப்பட்ட கடவுளே உண்மையான கடவுள் என்னும், வேறு மதங்களில் சொல்லப்பட்டிருக்கின்ற கடவுள் உண்மையான கடவுள் அல்லவென்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த விதமாக எல்லா மதத்திலும் மக்கள் நினைத்துக் கொண்டிருப்பதினால், அவரவர் எண்ணத்தில் கடவுள் வெவ்வேறு விதமாக அர்த்தமானார். அதனால் கடவுள் நமக்கு எப்படி தந்தை ஆனார் என்னும் மனிதனுக்கு முழுமையாக அர்த்தமாகாமல் போனது. தந்தையாக இருக்கின்ற கடவுள் விஷயம் தெரியாத போது, தாயான பிரக்ருதி விஷயம் சிறிதளவு கூட தெரியாது என்று சொல்லலாம். **கடவுள் மற்றும் பகவான் பற்றிய சமஸ்த ஞானம் மனிதனுக்கு எதுவரை தெரியப்படாதோ அதுவரை மனிதனுக்கு உண்மையான தந்தை விஷயம் தெரியாது. அதன் போலவே பிரக்ருதி மற்றும் மாயாவை பற்றி சமஸ்த ஞானம் மனிதனுக்கு எதுவரை தெரியப்படாதோ அதுவரை தனக்கு உண்மையான தாய் யார் என்று தெரியாது.** முக்கியமாக சொல்லிக் கொண்டால் எல்லா மதங்களில் எல்லாம் மூல கிரந்தத்தில் பரமாத்மாவை (தந்தையை) பற்றி அதிகமாக,

பிரக்ருதியை (தாய்யை) பற்றி குறைவாக சொல்லப்பட்டது. அதிகமாக சொல்லப்பட்ட பரமாத்மாவை பற்றி மனிதனுக்கு சரியாக தெரியாத போது, குறைவான விவரம் சொல்லிய பிரக்ருதியை பற்றி மனிதனுக்கு முழுமையாக தெரியாது என்று சொல்லலாம். முதல் தாயான பிரக்ருதியை பற்றி தெரியாதது, தந்தையான கடவுளைப் பற்றியும் யாருக்கும் தெரியாது. எதற்கு என்றால்! பிரக்ருதி மனிதனில் மாயாவாக இருக்கிறது. மனிதன் தலையில் உள்ள மாயா, கடவுளை தெரிந்து கொள்ளாத ஒவ்வொருவருக்கும் தடங்கலாக தெய்வ மார்க்கத்திலிருந்து வெளியில் அனுப்பும். மாயாவை தாண்டி போக வேண்டும் என்றால் எப்படிப்பட்டவர்களுக்கும் கடினமானது. கடவுளே அந்த விதமாக மாயாவுக்கு பலத்தை கொடுத்து வைத்தார். ஒவ்வொரு மனிதனிலும் குணங்கள் வடிவத்தில் மாயா (சாத்தான்) அல்லது சைத்தான் இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட மாயாவை பற்றி பகவான் பகவத்கீதாவில் விஞ்ஞான யோகத்தில் 14 ஆவது சுலோகத்தில் இப்படி தெரிவித்தார்.

***சுலோகம்:- தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா I***

***மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே II***

**கருத்து:-** “தெய்வமான என்னால் சிருஷ்டிக்கப்பட்ட என்னுடைய மாயை ஜெயித்து தாண்டி போவது துசாத்தியம். மேலும் எவன் என்னை நம்புகின்றானோ, ஆராதிப்பானோ அவன் மட்டும் என்னுடைய மாயாவிலிருந்து ஜெயித்து தாண்டி போகுவான்” என்று சொல்லப்பட்டது. இந்த வார்த்தை பகவான் சொல்லிய கடவுளுடைய வார்த்தை. மேலும் கிறிஸ்தவர்களில் யகோவா என்று சொல்லியது போல், முஸ்லிம்களில் அல்லாஹ் என்று சொல்லியது போல் கணக்கிட்டுக் கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. கடவுள் சர்வ மனிதர்களுக்கு சொல்லப்பட்டதால் எல்லோரும் மேல் உள்ள வாக்கியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். பூமி மீது எந்த மதத்திற்கு சேர்ந்தவராக இருந்தாலும் மனிதனானதினால் அவனுக்கு குணங்கள் இருக்கிறது. குணங்களில் கூடியது மாயாவாக இருக்கின்றது. மாயாவை ஜெயிக்கவில்லை என்றால் யாரும் அதனை தாண்டி கடவுளிடம் சேர முடியாது. அதனால் முதலில் எந்த மதத்திற்கு சேர்ந்தவராக இருந்தாலும் மாயாவை பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. மாயாவை பற்றி தெரியாதது, எந்த மனிதனும் கடவுளைப் பற்றி தெரிந்து

கொள்ள முடியாது. முக்கியமாக மாயா, மதத்தை குறுக்கே வைத்து மனிதனை கடவுளுடைய ஞானத்தில் இருக்கும் படி ஏமாற்றுகிறது. **மனிதன் மாயாவின் கையால் ஏமாற்றம் அடையாமல் இருக்க வேண்டும் என்றால் மதத்திற்கு அதீதமாக இருக்க வேண்டும். எல்லா மதங்களும் நம்முடையது தான் என்று நினைத்துக் கொள்ள வேண்டும். எல்லா மதத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற கடவுள் வெவ்வேறு அல்லவென்று எல்லோருக்கும் ஒரே கடவுள் என்ற எண்ணம் வர வேண்டும்.** அப்படி ஆகாதவரை என்னுடைய மதம் வேறு, உன்னுடைய மதம் வேறு அந்த எண்ணம் இருக்கும் வரை, மனிதன் மாயாவின் கையிலேயே இருப்பான். அவர் ஆன்மீக தெரிந்தவன் என்னும் ஹிந்துக்கள் (இந்துக்கள்), அவர் உண்மையான விசுவாசமுள்ளவன் என்னும் முஸ்லிம், நான் உண்மையான யகோவா பக்தன் என்னும் கிறிஸ்தவர்கள் நினைக்கும் படி செய்து எல்லோரையும் மாயா ஏமாற்றுகின்றது. அப்படிப்பட்டவர்களுக்கு யாருக்கும் தன்னுடைய மதத்தில் இருக்கின்ற ஞானம், வேறு மதத்தில் இருக்கின்ற ஞானம் தெரியாமல் செய்யும். தன்னுடைய மதத்தில் இருக்கின்ற ஞானம் அவர்களுக்கு அர்த்தமானது என்று நம்ப வைக்கும். அதனால் முதலில் உன்னுடைய தாய், பிறகு உன்னுடைய தந்தையை தெரிந்து கொள்ள வேண்டும். **தாயை (மாயாவை) தெரியாதது யாரும் தந்தையை (கடவுளை) தெரிந்து கொள்ள முடியாது. இந்த ரகசியம் தெரியாமல் எல்லா மதத்தில் இருக்கின்றவர்கள் தாங்கள் ஞானிகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.** இங்கு பல பேருக்கு என்னை ஒரு கேள்வி கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது என்னவென்றால்! நீங்கள் உங்கள் ரசனையில் பல இடத்தில் **"த்ரை குண்ய விஷயாவேதா நிஸ்த்ரைகுண்யோ"** மூன்று குணம் விஷயங்களே வேதங்கள் அவற்றை விட்டு விடுவதால், வேதங்களை விட்டு விடுவதால் குண விஷயங்களில் கூடியிருக்கின்ற மாயாவிலிருந்து வெளியில் வருவாய் என்று பகவத்கீதா ஸாங்க்யா யோகத்தில் 45 ஆவது சுலோகத்தில் எழுதியது போல் சொல்லினார். அது மட்டுமல்லாமல் விஞ்ஞான யோகத்தில் 13,14 ஆவது சுலோகங்களில்

*சுலோகம்:-13) த்ரிபிர்குணமயைர்பாவைரேபி ஸர்வமிதம் ஜெகத்*

*மேஹிதம் நாபிஜாநாதி மாமேப்ய பரமவ்யயம் //*

*சுலோகம்:-14) தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா /*

**மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே //**

"சர்வ ஜெகத் எல்லாம் சாத்வீக, ராஜச, தாமச குணங்களால் கூடி இருப்பதினால் அந்த குணங்கள் விளைவுகளினால் மயக்கம் (இப்னடைச்) செய்யப்பட்டதினால் நாசனம் ஆகாத என்னை, என்னுடைய பரம எண்ணத்தை பற்றி சிறிதளவு கூட தெரியாமல் இருக்கின்றார்கள்."

"என்னால் தயார் செய்யப்பட்ட குணங்களால் கூடி இருக்கின்ற மாயாவை தாண்டுவது துசாத்தியமான வேலை. யார் என்னுடைய ஞானத்தை தெரிந்து என்னை ஆராதனை செய்வாரோ, அவனே மாயாவை சுலபமாக தாண்டி போவான்." அதனால் மூன்று குணங்கள் மாயா என்றும், மூன்று குணங்கள் விஷயங்களினால் கூடி இருக்கின்ற வேதங்கள் மாயாவுக்கு பிரதி உருவம் என்றும், மாயாவை ஜெயிப்பதற்கு வேதங்களை விட்டு விட வேண்டும் என்று சொல்லினீர்கள் அல்லவா! இப்போது மாயாவை தெரியாவிட்டால் கடவுளை தெரிய முடியாது என்று சொல்கின்றீர். அப்போது கடவுளை நம்பியவர் மாயாவை ஜெயிக்கலாம் என்று சொல்லினீர். இப்போது முதலில் மாயாவை தெரிந்து கொள், பிறகு கடவுள் தெரியப்படுவார் என்று சொல்லுகின்றீர். இதெல்லாம் பார்த்தால் நீங்கள் இரண்டு விதமாக பேசுகிறீர் என்று தெரிகின்றது. இதன் போல இரண்டு விதமாக பேசினால், நாங்கள் எதை நம்ப வேண்டும்? அந்தரங்கத்தில் இருக்கின்ற மாயாவை ஜெயிக்க வேண்டும் என்றால், வெளியில் இருக்கின்ற வேதங்களை விடுங்கள் என்று சொல்லினீர்கள். ஆனால் இப்போது நீங்கள் சொல்லும் ஞானம் கூட வேதங்கள் அல்லாததா? என்று கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் இந்த விதமாக இருக்கின்றது.

தந்தையைப் பற்றி சொல்லியது தாய் தான் என்னும், அதன் போலவே கடவுளைப் பற்றி சொல்லியது பிரக்ருதி (மாயா) என்று சொல்லினோம் அல்லவா! அதனால் கடவுள் மாயாவினால் (வேதங்களினால்) தெரியும் என்று இப்போது கூட சொல்கின்றேன்.

இங்கு நீங்கள் நன்றாக கவனித்து பார்த்தால், நாங்கள் சொல்லியதில் எந்த தவறும் இல்லை என்றும், நாங்கள் இரண்டு ரகமாக பேசவில்லை என்று உங்களுக்கே தெரியும். இப்போது நன்றாக கேளுங்கள், மாயா தெய்வ மார்க்கத்தில் அனுப்பும், அதன் போலவே மாயா கடவுளுடைய மார்க்கத்திலிருந்து கூட தவற வைக்கும். மாயா இரண்டு ரகமான சாமர்த்தியம் கொண்டது. மாயா நினைத்துக் கொண்டால், எவ்வளவு புத்திசாலியானவனாக இருந்தாலும் கூட அஞ்ஞானியாக மாற்றும். அதன் போலவே மாயா நினைத்துக் கொண்டால், எவ்வளவு புத்தி குறைவாக இருக்கின்றவனை கூட பெரிய ஞானியாக மாற்றும். இதனைப் பொறுத்து **வேதம்** என்பது மாயா இரண்டு ரகமாக இருக்கிறது என்று தெரிகின்றது. ஒரு ரகம் மாயா கடவுளுக்கு எதிர்ப்பானது என்றும், மற்றொரு ரகம் மாயா கடவுளுக்கு சாதகமானது என்று தெரிகின்றது. கடவுளுக்கு எதிர்ப்பாக இருக்கின்ற மாயா கடவுள் பக்கம் யாரையும் போக வைக்காது. கடவுளுக்கு சாதகமாக இருக்கின்ற மாயா கடவுள் பக்கம் போகின்றவனை தடங்கல் படுத்தாமல், அவனுடைய வழியை சுலபமாக செய்யும். இப்படி கடவுளினால் தயார் செய்யப்பட்ட மாயா இரண்டு விதமாக வேலை செய்கின்றது. ஒரே மாயா இரண்டு ரகமான விளைவுகள் காட்டுகின்றது. அதனால் மாயாவை இரண்டு ரகமாக கூறினோம். அதன் போலவே மாயா சொரூபமான வேதங்களை கூட இரண்டு ரகமாக சொல்லலாம். வேதங்கள் தெய்வத்தை தெரிவிக்கும்படி நம்ப வைத்து, கடவுளிடம் சேர வைக்காமல் கடவுளுக்கு எதிர்ப்பு கொண்ட மார்க்கத்தில் மனிதனை அனுப்பும். அதன் போலவே வேதங்களே கடவுளிடம் சேரும்படி கடவுளுக்கு சாதகமான மார்க்கத்தில் கூட அனுப்பும்.

இதுவரை கடவுளுக்கு எதிர்ப்புக் கொண்ட மார்க்கத்தில் அனுப்பும் வேதங்கள் எது? அதன் போலவே கடவுளுக்கு சாதகமாக இருக்கின்ற மார்க்கத்தில் பயணம் செய்யும் வேதங்கள் எது? என்று கேட்டால் அது இப்படி இருக்கின்றது. இந்து (ஹிந்து) மதத்தில் சிலருக்கு மட்டும் வேதங்கள் தெரியும். இன்று சமூகத்தில் எல்லோருக்கும் வேதங்களை பற்றி தெரியாமல் போனது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் தன்னுடையது எந்த மதம் கூட தெரியாத நிலையில் ஹிந்து என்று சொல்கின்றார்கள். அதனால் சிலருக்கு மட்டும் வேதங்கள் நான்கு என்னும், அது 1.சாம வேதம், 2.யஜுர் வேதம், 3.அதர்வண வேதம், 4.ருக் வேதம் என்று

தெரிகின்றது. இந்த நான்கு வேதங்கள் வியாசமகரிஷி எழுதினார். வியாசன் நான்கு வேதங்கள் மட்டுமல்லாமல் 18 புராணங்களை கூட எழுதினார். வேதங்கள் நான்கு கடவுளுக்கு எதிர்ப்பு கொண்ட மார்க்கத்தில் மனிதனை அனுப்புகின்றது என்று தெரிந்து கொள்ள வேண்டும். நான்கு வேதங்கள் தயாராகி மக்களில் சேர்ந்த பிறகு அதுவரை இருந்த சிறிது தர்மங்கள் கூட இல்லாமல் போனது. அதனால் அப்போது தர்மங்களை மறுபடியும் தெரிவிப்பதற்கு பகவான் பிறந்தார். அதர்மங்கள் அபிவிருத்தி ஆகுவதற்கு நான்கு வேதங்கள் மூன்று குணங்கள் இணைந்து மாயாவாக மனிதனை ஊக்கப்படுத்தியது. அப்போது பூமி மீது தர்ம சம்ஸ்தாபனத்திற்காக முதல் அவதாரமாக பகவானான ஸ்ரீகிருஷ்ணர் பிறந்தார். ஒரு தடவை தர்மங்கள் முழுமையான நிலையில் நிலைநிறுத்துவதற்கு கடவுளுடைய அம்சம் மூன்று தடவை பிறக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதன் பிரகாரம் கவனித்தால் ஒரு தடவை பகவான் வருகை துவாபரயுகத்தில் இறுதியில் நடந்தது. பிறகு இரண்டாவது தடவை பிரவக்தா வருவது கூட முடிந்தது. இனி மூன்றாவது வருகை ஆதார்னகர்த்தாவாக வரவேண்டியது இருக்கும். அப்படியிருக்கும் போது மாயா உருவம் கொண்ட நான்கு வேதங்கள் கடவுளுக்கு எதிர்ப்பு மார்க்கத்தை காட்டும் போது, கடவுளுக்கு சாதகமான மார்க்கத்தை காட்டும் ஐந்தாவது வேதம் கூட ஒன்று இருக்கிறது. அதனை **“பஞ்சம வேதம்”** என்று சொல்வார்கள். சிலர்கள் பாரதம் பஞ்சம வேதம் என்னும், சிலர்கள் பாகவதம் பஞ்சம வேதம் என்று சொல்கின்றார்கள். வாஸ்தவமாக அந்த இரண்டும் கூட பஞ்சம வேதங்கள் அல்ல. பாரதம் வரலாறு ஆகும்போது, பாகவதம் புராணம் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

400 வருடம் முன்பு போத்துலூரி வீரபிரம்மம் அவர்கள் தன்னுடைய கால ஞானத்தில் பஞ்சம வேதங்கள் சாந்திர சிந்து வேதம் பற்றி சொல்லினார். **“சாந்திர சிந்து வேதத்திற்கு கர்த்தா ஆனந்த குரு. சாந்திர சிந்து வேதம் பூமி மீது இல்லை. அதனை விரிவாக சொல்பவர் ஆனந்த குரு”** என்று சொல்லினார். அது மட்டுமல்லாமல் **“சாந்திர சிந்து வேத மார்க்கத்தில் சகலமானவர்கள் (எல்லா மதத்தினர்கள்) நடந்து கொள்வார்கள்”** என்று கூட சொல்லினார். நீங்கள் என்னை கேட்ட கேள்விகளில் நீங்கள் சொல்லுவது வேதங்கள் அல்லவா? என்று கேள்வி கேட்டார்கள். அதற்கு சரியான பதில் நாங்கள் சொல்வதும் கூட

வேதம் தான். கால ஞானத்தில் திரு பிரம்மம் அவர்கள் சொல்லிய சாந்திர சிந்து வேதத்தை நாங்கள் சொல்கின்றோம். என்னால் சொல்லப்பட்டது தெய்வ மார்க்கம் என்று தெரியும். மேலும் சாந்திர சிந்து வேதம் என்று எனக்குக் கூட தெரியாது. அந்த விஷயத்தை திரு பிரம்மம் அவர்கள் தன்னுடைய கால ஞானத்தில் சில இடத்தில் எழுதி இருப்பதினால் அந்த விஷயம் எங்களுக்கே இப்போது தான் தெரிந்தது. வெளி உலகத்தில் என்னை நான் அதிகமாக உயர்த்தி கொண்டால் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவன். நான் வெளியே உலகத்திற்கு தெரியாமல் இருக்க வேண்டும் என்று நினைப்பவன். ஆனால் திரு வீரபிரம்மம் அவர்கள் தன்னுடைய கால ஞானத்தில் **“பிரபோதா ஆசிரமம் உன்னதமான ஞானம் இருக்கும்”** என்று எழுதி இருப்பதினால் நான் சிறிது வெளிப்பட நடந்தது. அது மட்டும் அல்லாமல் **“பிரபோதா ஆசிரமமானவர் சேனாதிபதி குணங்கள் கொண்டு இருக்கிறார் என்றும், சேனாதிபதியே ஆனந்த குரு என்னும், சித்தாந்த சிரோன்மணியான குரு சுவாமி சித்தாந்தம் முக்கியமானது ஐயா”** இந்த விதமாக எழுதி இருப்பதினால் இன்னும் எங்களை வெளிப்படையாக எழுதிய சில வாக்கியங்களினால் நான் ஞானம் சொல்லும் குரு என்று வெளிப்படையாகினோம். வாஸ்தவமாக நாங்கள் சொல்லிய விஷயங்களை எல்லா மதத்தினோர்கள் இஷ்டப்படுவது, நாங்கள் சொல்லியது **த்ரைத்தசித்தாந்தம்** ஆனதினால், 400 வருடங்கள் பூர்வம் எழுதிய கால ஞானத்திற்கு முழுமையாக சரியானது. எங்களுடைய ரசனைகள் எல்லாம் புதியதாக இருப்பதினால், இதுவரை யாருக்கும் தெரியாத புதிய ஞான விஷயங்களாக இருப்பதினால், நாங்கள் சொல்லியது **சாந்திரசிந்து வேதம்** என்று ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது.

திரு பிரம்மம் அவர்கள் **“சித்தாந்த சிரோன்மணியான குரு சுவாமி சித்தாந்தம் முக்கியமானது ஐயா”** என்று சொல்லியது போல் மற்றும், **“சாந்திர சிந்து வேத மார்க்கம் வழியில் சகலமானவர்கள் நடந்தார் ஐயா”** என்று சொல்லியது போல் எங்களுக்கு இப்போது தெரிந்தது. ஆனால் இதற்கு முன்பே இதே விஷயத்தை நாங்கள் சொல்லிய ஞானம் எல்லா மதத்தினோர்கள் அனுசரிப்பார்கள் என்று, மூன்று மதத்தினர்கள் ஒன்றாகி போய் **த்ரைத்தசித்தாந்த ஞானத்தை** பெரியதாக சொல்லிக் கொண்டிருப்பார்கள் என்று பல தடவை கூறினோம். நாங்கள் சொல்லியது போல் நடந்து கொண்டிருப்பது தெரிந்த சத்தியமே.

அதனால் திருபிரம்மம் அவர்கள் எங்களைப் பற்றி எழுதிய எழுத்துக்களை அல்லவென்று சொல்ல வில்லை. நாங்கள் சொல்லிக் கொண்டிருப்பது யாருக்கும் தெரியாத சாந்திர சிந்து வேதம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். இப்போதும் கிட்டதட்ட 350 வருடம் பின்பு ஜீவசமாதி அடைந்த திருபிரம்மம் அவர்கள், தன்னுடைய சமாதியில் இருந்து வெளியில் வந்து ஜென்மம் எடுத்துக்கொண்டு முப்பது வருடங்கள் ஆகின்றது. அவருடைய வயது இப்போது 30 வருடங்கள். அவர் இன்னும் சில காலத்திற்குப் பிறகு எங்களிடம் வருவார் என்னும், ஆனந்த குரு என்னுடைய குரு என்று தன்னுடைய கால ஞானத்தில் சொல்வது நடந்தது. அவர் வந்தபோது நான் யார் என்பது அவர் வெளிப்படையாக சொல்லுவார். அப்போதாவது என்னுடைய மற்றும் என்னுடைய ஆத்மா விஷயங்கள் வெளிப்படும். அதனால் நீங்கள் கேட்ட கேள்விக்கு பதிலாக நான் சொல்லியது கூட வேதம் தான் என்று, என்னால் சொல்லப்பட்ட வேதம் கடவுள் ஞானம் எளிதாக செய்து, மனிதனை மோக்ஷத்திற்கு (தெய்வ சன்னதிக்கு) அனுப்பும் என்று சொல்கின்றோம்.

நாங்கள் இதுவரை தெரிவித்த ஞானம் முழுமையாக தெய்வ சம்பந்தமானதாக இருக்கிறது. எல்லா மதத்திற்கு ஏற்றுகொள்ளக்கூடியது. எல்லா மத கிரந்தங்களில் நாங்கள் சொல்லிய ஞானம் இருக்கிறது. மேலும் எல்லா மதத்தினோர்கள் எங்களுடைய ஞானம் ஒப்புக் கொள்ள வேண்டியது வரும். சிலர்கள் பொறாமையால் அஞ்ஞானத்தால் நாங்கள் சொல்லியது ஞானம் அல்லவென்று சொல்லினாலும், அதே மதத்திற்கு சேர்ந்தவர்கள் எத்தனையோ பேர் எங்களுடைய ஞானம் பெரியது என்று சொல்வார்கள். இப்போது கூட **"தாய் தந்தை"** இந்த சிறிய கிரந்தத்தில் இருக்கின்ற விஷயத்தை யாரும் கண்டிக்க முடியாது. எதற்கு என்றால் **சித்தாந்தத்தில் கூடியிருக்கின்ற ஞானம் கண்டிக்க முடியாது.** தாயுடைய சமாச்சாரம் தாய் மாமாவுக்கு தெரியாதா! என்பது போல் மாயா சமாச்சாரம் யோகியாக இருப்பவருக்கு தவறாமல் தெரியும். அதனால் எல்லோருக்கும் தாய் தந்தை யாரோ சித்தாந்த கர்த்தாவான நான் சொல்லாமல் இருக்க முடியாது. அதே விஷயத்தை உன்னுடைய தந்தை யார், உன்னுடைய தாய் யார் தெரிந்துக்கொள் என்று சொல்கின்றேன். தாய் பக்கத்திலிருந்து தந்தை பக்கம் போகும்படி, வேதம் அல்லாத வேதமான சாந்திர சிந்து வேதம் தெரிந்து உண்மையான தாய் தந்தையை தெரிந்து

கொள்ள வேண்டும் என்று என் பக்கம் இருந்து சொல்கின்றேன். இங்கு சிலர்கள் உங்களுடைய பெருந்தன்மையை பற்றிய நீங்களே சொல்லிக் கொண்டிருக்கின்றீர்களே என்று கேட்கலாம். அதற்கு பதில் நான் யாரோ எனக்கே தெரியாதபோது என்னுடைய பெருந்தன்மையைப் பற்றி நான் எப்படி சொல்ல முடியும். என்னைப் பற்றி நான் சொல்லவில்லை, என்னைப் பற்றி வேறவர்கள் சொல்லியதை சொல்லினேன். என்னைப் பற்றி சொல்லியபோது போத்துலூரி திருவீரபிரம்மம் அவர்கள் உலகத்தில் நடக்க போவதை சில வருடங்கள் எதிர்காலத்தை முதலிலேயே சொல்லிய பெரிய நபர். மேலும் அவர் சொல்லிய விஷயத்தை சந்தர்ப்பம் வந்தது அதனால் சொல்லினேன். நாங்கள் சொல்லியது அர்த்தம் ஆகாமல் போனால், வேறு விதமாக நீங்கள் நினைத்துக் கொண்டால் அது கூட மாயாவே ஆகும். அதனால் கடவுளுக்கு தூரமாக்கின்ற மாயாவை விட்டு, கடவுளுக்கு அருகில் இருக்கின்ற மாயா வார்த்தை கேட்கலாம். உண்மையான தாய் தந்தை பற்றிய சமாச்சாரத்தை இன்னும் பார்க்கலாம்.

ஒரு மனிதனுக்கு வெளித்தந்தை யார் என்பது தன்னுடைய வெளி தாயே தெரிவிக்க வேண்டும். தன்னுடைய குழந்தைக்கு தந்தை யார் என்ற விஷயம் தாய்க்கு மட்டும் தெரியும். அதே விதமாக கடவுள் யார் என்ற விஷயம் பிரக்ருதிக்கு மட்டுமே தெரியும். வெளியில் இருக்கின்ற தேகத்தின் தாய் தன்னுடைய குழந்தையுடன் நேரடியாக பேசுகின்றது, அதனால் சுயமாக தாயே தந்தையை காட்டுகின்றது. இங்கு ஜீவனுக்கு தந்தை ஸ்தானத்தில் இருக்கின்ற பரமாத்மாவை, தாய் ஸ்தானத்தில் இருக்கின்ற பிரக்ருதி காட்ட வேண்டியது இருக்கும். ஆனால் பிரக்ருதி மனிதனிடம் பேசாது. அதனால் பிரக்ருதி கடவுளைப் பற்றி ஜீவனுக்கு தெரியப்படுத்தாது. அப்படிப்பட்ட போது கடவுளே ஜீவனுக்கு கடவுள் விஷயங்கள் தெரிவிப்பதற்கு பிரக்ருதி சார்பாக வேலை செய்ய வேண்டியது இருக்கிறது. பிரக்ருதி சார்பாக வேலை செய்து, கடவுளுடைய விஷயம் தெரிவிப்பதற்கு, கடவுளுடைய அம்சம் பகவானாக வருகின்றது. பிரக்ருதி மாயாவாக மாறி எப்போதும் மனிதனில் இருந்தால், கடவுள் மட்டும் பகவானாக எப்போதோ ஒரு நேரத்தில் பூமி மீது வருவார். பிரக்ருதி மனிதனில் மாயாவாக மாறி இருந்தால், கடவுள் மனிதர்களின் மத்தியில் பகவானாக மாறி வருவார். பகவான் பிரக்ருதியால் தயார் செய்யப்பட்ட தேகத்தை அணிந்து தெரிகின்ற மனிதனாக பிறப்பார். அப்படி பிறந்தவர்

பிரக்ருதி தெரிவிக்க வேண்டிய பரமாத்மாவை, பிரக்ருதி சார்பாக அவர் தெரிவிப்பார். பிரக்ருதி மாயா வடிவத்தில் மனிதனில் இருக்கின்றது. மேலும் பிரக்ருதி சார்பாக வேலை செய்வதற்கு பகவானாக வந்த கடவுள், பிரக்ருதிக்கு மாறு உருவமான மாயா போல் நடந்து கொள்ளும். மாயா கடவுளுடைய மார்க்கத்திற்கு தடங்கல் ஏற்படுத்துவதற்கு, கடவுளுடைய மார்க்கத்தை சுலபமாக செய்வதற்கு எப்படி தகுதியாக இருக்கிறதோ, அதன் போலவே பகவானாக வந்தவர் தன் பிரக்ருதியாக இருக்கின்ற மாயா போல் நடந்து கொண்டு தேவைப்படுகின்றவர்களை, தகுதி பெற்றவர்களை கடவுளுடைய மார்க்கத்திற்கு சேர்த்தும். தேவை இல்லாதவரை, தகுதி இல்லாதவரை கடவுளுடைய மார்க்கத்திலிருந்து தவிர்க்க வைக்கும். பகவானை குரு என்று சொல்லலாம். குரு அல்லது பகவான் பூமி மீது வந்தால், ஞானத்தின் மீது ஆர்வம் இருக்கின்றவர்களுக்கு குருவாக தெரிவார். ஆர்வம் இல்லாதவர்களுக்கு மாயாவாக தெரிந்து, கடவுளுடைய ஞானம் தெரியாமல் செய்வார். கடவுள் தன்னுடைய பிரக்ருதியினால் தயாராகிய தேகத்தை அணிந்து கொண்டு, மாயாவின் குண எண்ணம் கொண்டு பகவானாக பிறப்பார். பகவான் கடவுளுடைய அம்சமாக இருப்பதினால் கடவுளுடைய ஞானத்தை தெரிவிப்பார். அதன் போலவே பகவான் பிரக்ருதி ஸ்தானத்தில் இருந்து பிரக்ருதி பாத்திரத்தையும் அணிவதினால், மாயாவாக கடவுளுடைய ஞானம் தெரியாமல் செய்வார்.

பகவான் (குரு) தெரிவிக்கின்ற ஒரே ஞானம் மனிதனுக்கு அர்த்தம் ஆகுவதில் நல்லதாக, கெட்டதாக இரண்டு விதமாக அர்த்தமாகும். நல்லதாக அர்த்தமானால் அது கடவுளுடைய ஞானமாக தெரிந்து கடவுள் பக்கம் அனுப்பும். கெட்டதாக அர்த்தமானால் தெரிந்து கொண்டது கடவுளுடைய ஞானம் போல் தெரியாமல் அது ஞானமே அல்லவென்று தெரிந்து, ஞானத்திற்கு தூரமாகும் படி செய்து மாயாவின் பக்கம் அனுப்பும். இதனைப் பொறுத்து குரு (பகவான்) மாயாவின் ஸ்தானத்திலிருந்து கடவுளுடைய மார்க்கத்திற்கு, கடவுளுடைய ஞானத்திற்கு தூரம் செய்வார். அதன் போலவே கடவுளுடைய மார்க்கத்திற்கு, கடவுளுடைய ஞானத்திற்கு நெருங்கும்படியும் செய்வார். அதனால் பகவத்கீதாவின் ஞானயோகத்தில் ஆறாவது சுலோகத்தில் **“பிரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்ம மாயயா”** என்னுடைய பிரக்ருதி ஸ்தானத்தில் இருந்து மாயா சார்பில் (மாயா

போல்) என்னுடைய ஆத்மா பிறக்கின்றது என்று சொல்லப்பட்டது. கடவுள் பகவானாக பிறந்தால், கடவுளைப் பற்றி தெரியப்படுத்துவது பகவான் ஆனதினால், அவர் வந்தது பிரக்ருதி சார்பில் இருந்து மாயா போல் வந்தார் என்று தெரிகின்றது. அதனால் அவர் சொல்லிய ஞானம் ஒன்றாக இருந்தாலும், அது கடவுள் பக்கமாவது அல்லது மாயா பக்கமாவது கொண்டு போகும். இந்த விஷயம் அர்த்தம் ஆகுவதற்கு ஒரு உதாரணத்தை பார்க்கலாம். தெரிகின்ற தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய், தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தந்தையை பற்றி தெரிவிக்கப்படுகின்றது என்னும், தாய்க்கு மட்டும் தான் குழந்தைக்கு தந்தை யார் என்பது தெரியும் என்று சொல்லிக் கொண்டோம் அல்லவா! அப்படிப்பட்ட ஸ்தானத்தில் இருந்த ஒரு தாய்க்கு மூன்று மகன்கள் இருக்கிறார்கள். மூன்று மகன்கள் ஐந்து வருடங்களுக்குள்ளே பிறந்தார்கள். மூன்று மகன்கள் பிறந்த பிறகு ஒரு வருடம் கழித்து தந்தை வியாபாரத்திற்காக வெளிநாட்டுக்கு சென்றார். அங்கு இருந்து வருவதற்கு 12 வருடங்கள் பிடித்தது. கணவன் வந்த நேரத்திற்கு தன்னுடைய குழந்தைகளுக்கு சிறியவனுக்கு 13 வருடம், இரண்டாம் அவனுக்கு 16 வருடங்கள், பெரியவனுக்கு 18 வருடம் வயது இருந்தது. சிறிய வயதிலேயே தம்முடைய தந்தை தெரியாததினால், சிறிது காலம் பிறகு வந்த தந்தையை பற்றி தாய் சொல்ல வேண்டியது இருந்தது. தன்னுடைய குழந்தைக்கு தந்தை யார் என்ற ரகசியம் தாய்க்கு மட்டும் தெரிந்திருப்பதினால், இவர் தான் உங்களுடைய தந்தை என்று தாய் தெரியப்படுத்தியது. தாய் ஒரே எண்ணத்தால், ஒரு அர்த்தமுள்ள விஷயம் எல்லோருக்கு சமமாக சொல்லியது. எல்லோரும் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இல்லாததினால், மூன்று மகன்கள் வெவ்வேறு வேலைகளில், வெவ்வேறு இடத்தில் செய்வதினால், எல்லோருக்கும் ஒரே தடவை சொல்ல முடியவில்லை. மூன்று மகன்களுக்கு தனித்தனியாக வெவ்வேறு நேரத்தில் வீட்டுக்கு வந்த போது, அவருக்கு தனித்தனியாகவே இவர் தான் உங்களுடைய தந்தை என்று சொல்லப்பட்டது.

முதல் நாள் ராத்திரி நேரத்தில் வீட்டுக்கு வந்த பெரிய மகனுக்கு அவர் தந்தை விஷயம் தாய் சொல்லியது. அவர் அந்த நேரத்தில் தூக்கத்தில் இருந்ததினால் தாய் சொல்லிய வார்த்தை கேட்டிருந்தாலும் “இவர் உன்னுடைய தந்தை” என்ற வார்த்தை இவர் என் தந்தை என்று அர்த்தமானது. அப்போது தன்னுடைய தாய் சொல்லிய விஷயம் வேறாக அர்த்தமாகி போய், தாய்

காண்பித்த மனிதனை தன்னுடைய தாத்தாவாக ஒப்பிட்டுக் கொண்டார். இரண்டாவது நாள் காலையில் இரண்டாவது மகன் வந்தபோது, பெரிய மகனுக்கு தெரிவித்த விஷயமே தாய் அவருக்கு கூட தெரிவித்து, “இவர் உன்னுடைய தந்தை” என்று சொல்லியது. தாய் சொல்லிய விஷயம் ஆர்வத்துடன் கேட்காமல் இரண்டாவது மகன் “இவர் உன்னுடைய சின்ன தந்தை” என்று சொல்லியது போல் அர்த்தமானது. அதே நாள் சாயந்திரம் வீட்டுக்கு வந்த சிறிய மகனுக்கு “இவர் தான் என்னுடைய கணவன்” என்று தாய் சொல்லியது. அவர் வயதில் சிறியவனாக இருந்ததினால், தாய்க்கு கணவன் அவனுக்கு என்ன ஆகுவாரோ என்று கூட தெரியாது. அப்படிப்பட்ட போது தாய் காண்பித்த நபர் நமக்கு விருந்தாளியாக நினைத்தார் மேலும் தந்தையாக அர்த்தம் ஆகவில்லை. இந்த விதமாக மூன்று மகன்களுக்கு தாய் சொல்லிய சத்தியம் அர்த்தம் ஆகாமல் தன் தந்தையை ஒருவர் தாத்தாவாக, ஒருவன் சித்தப்பாவாக, மற்றொருவர் விருந்தாளியாக அர்த்தம் செய்து கொண்டார்கள். தந்தை விஷயம் தெரிவித்த தாய்க்கு அதே நாள் நோய் வந்து மருத்துவமனைக்கு (ஆஸ்பத்திரிக்கு) போனது. அவர் நோய்க்கு தகுந்தபடி சிகிச்சை செய்வதற்கு அவரை ஒரு மாதம் காலம் கட்டில் மீது ஆஸ்பத்திரியில் இருக்கும்படி வைத்தியர் சொல்லியதினால் அவர்களுடைய தாய் அங்கே இருந்தது. தன் அக்காவுக்கு ஆரோக்கியம் நன்றாக இல்லாததினால் அவர் சகோதரன் (தம்பி) மருத்துவமனைக்கு போய், தன்னுடைய அக்கா மாமாவிடம் பேசிய பிறகு தன்னுடைய மருமகன்களிடம் பேசுவதற்கு, அக்கா வீட்டுக்கு வந்து அங்கே சிறிது நாட்கள் இருந்தார். அப்போது தனக்கு மாமா, அக்காவுக்கு கணவன், மருமகன்களுக்கு தந்தையாக இருக்கின்ற அவரை தன்னுடைய மருமகன்கள் தவறாக நினைத்துக் கொண்டார்கள் என்று அவருக்கு தெரிந்தது. சொந்த தந்தையை மூன்று மகன்கள் தந்தையாக அர்த்தம் செய்து கொள்ளாமல் வெவ்வேறு விதமாக சொல்லிக் கொள்ள அவருக்கு ஆச்சரியமாக ஏற்பட்டது. அவர்களுக்கு தாய் மாமாவாக ஆனதினால், அவர்கள் தாய் தனக்கு அக்காவானதினால், அவர்களுடைய தந்தை சொந்த மாமாவானதினால், தன்னுடைய மருமகன்கள் முழுமையாக தவறாக நினைத்தார்கள் என்று அந்த உண்மை அர்த்தமானது. அவர்களில் உள்ள எண்ணம் எடுத்துவிட்டு அவர்களுடைய மூன்று பேருக்கு தந்தை ஒருவர் தான் என்னும், நீங்கள் பிறப்பதற்கு முன்பு இருந்து உங்களுடைய தந்தை எனக்கு தெரியும் என்று மூன்று

மருமகன்களுக்கு தெரிவித்தார். சிறியவன் ஒருவன் மட்டும் தன்னுடைய மாமா சொல்லிய வார்த்தையை நம்பி ஒப்புக்கொண்டார். மற்ற இருவர்கள் தன்னுடைய மாமா சொல்லிய வார்த்தை நம்பாமல் அவரவர் வேதனைகள் அவர்கள் சொல்லினார்கள். என்னுடைய தாய் எனக்கு இப்படி தான் சொல்லியது என்று ஒருவர் சொன்னால், இல்லை எனக்கு இப்படி தான் சொல்லியது என்று மற்றொருவர் சொல்லினார். ஒருவர் தந்தையை தாத்தா என்று சொல்கின்றார், மற்றொருவர் தந்தையை சின்ன தந்தை (சித்தப்பா) என்று சொல்லுகின்றார். அவர்களுடைய சந்தேகத்தை தீர்ப்பதற்கு அவர்களுடைய தாய் அங்கு இல்லை. அவர்களுடைய தாய் வந்த பிறகு அவர்களுடைய சந்தேகமில்லாமல் செய்யும் என்று அவருடைய தாய் மாமன் நினைத்துக் கொண்டார். ஆனால் அவர்களுடைய தாய் ஆஸ்பத்திரியிலேயே இறந்து போனது. மனைவி இறந்து போவதை பார்த்த கணவன் கூட இருதயம் நின்று இறந்து போனார். மூன்று மகன்கள் அவர்களுடைய தாய் இறந்து போனது என்னும் கவலைப்பட்டாலும் அதில் ஒருவர் மட்டும் தன்னுடைய தாயுடன் தந்தை கூட இறந்து போனார் என்று நினைத்துக் கொண்டார். மற்ற இருவரில் தன் தாயுடன் தாத்தா கூட இறந்து போனார் என்று ஒருவர் நினைத்தால், மற்றொருவர் தாயுடன் சித்தப்பா கூட இறந்து போனார் என்று நினைத்துக் கொண்டார். அவர்களுடைய தாய் இல்லாததினால் இருவருக்கு தந்தை விஷயம் தெரியாமல் போனது. தாய்மாமன் சொல்லினாலும் கேட்கும் நிலையில் இல்லாமல் போனார்கள். அவர்கள் இருவர்கள் அவர்களுக்கு முதல் அர்த்தமான அசத்தியத்தை சத்தியமாக நினைத்துக் கொண்டு, பிறகு தெரிந்த சத்தியத்தை அசத்தியமாக நினைத்துக் கொண்டார்கள்.

தாய்மாமன் எவ்வளவு சொல்லினாலும் அவர்கள் இருவரும் கேட்காமல் அவர்களுடைய தந்தையை ஒப்புக்கொள்ளாமல் ஒருவர் சித்தப்பா என்று சொல்லினால், இன்னொருவன் தாத்தா என்று சொல்கின்றான். ஒருவர் மட்டும் தன்னுடைய தந்தை என்று ஒப்புக்கொண்டார். தந்தை இறந்து போன பிறகு சொத்தை சுயமாக தாய் மாமனே மருமகன்களுக்கு பங்கிட்டு கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் தாய் மாமன் மூன்று மருமகன்களுக்கு ஒரு நிபந்தனை வைத்தார். அந்த நிபந்தனை பிரகாரம் அவர் சொல்லியது போல் தன்னுடைய மாமாவை யார் தந்தையாக

ஒப்புக் கொள்வார்களோ அவருக்கு தந்தையுடைய சொத்தில் (பங்கு) பாகம் வரும் என்னும், தந்தையாக ஒப்புக் கொள்ளாதவர்களுக்கு தந்தை சொத்துக்களில் பாகம் வராது என்று சொல்லினார். அப்போது கூட அவர்களுக்கு இருக்கின்ற நம்பிக்கை விட்டு வேறாக ஒப்புக் கொள்ள மாட்டோம் என்று இருவரும் சொல்லினார், அவர்களுக்கு சொத்தில் பாகம் வராமல் போனது. தாய் கணவன் சொல்லிய போது அதுவரை விருந்தாளியாக அர்த்தம் செய்து கொள்ளுவது தன் தவறு என்னும், தன்னுடை தாய்மாமன் சொல்லியது சத்தியம் என்னும், சத்தியம் பிரகாரம் தான் சொந்தக்காரர் என்னும் நினைத்துக் கொண்ட நபர் சொந்தக்காரர் அல்ல வென்று, உண்மையாக தனக்கு தந்தை என்று தெரிந்துகொண்டதினால், சிறிய மகனுக்கு தந்தை சொத்து எல்லாம் கிடைத்தது. மற்ற இருவருக்கு தந்தையை தந்தை என்று ஒப்புக் கொள்ளாததால், தந்தை சொத்து சிறிதளவு கூட கிடைக்காமல் போனது. இது எல்லாவற்றையும் கவனித்தால் தாய் சொல்லிய சத்தியத்தை மகன்கள் முதலிலேயே கவனிக்காமல் போனதினால் தந்தை சொத்து இருவருக்கும் கிடைக்காமல் போனது என்று அர்த்தமாகின்றது. இந்த உதாரணத்தில் தாயை பிரக்ருதியாக, தந்தையை பரமாத்மாவாக, மகனை ஜீவாத்மா மனிதனாக கணக்கிட்டு பார்க்க வேண்டியது இருக்கும். பிரக்ருதியான தாய், தந்தையைப் பற்றி சொல்லியதை மூல கிரந்தங்களாக கணக்கிட்டு கொள்ளலாம். தாய் மூன்று மகன்களுக்கு ஒரே தந்தை விஷயத்தை சொல்லியது போல், மூன்று மத கிரந்தங்களில் ஒரே கடவுளைப் பற்றிய சொல்லிய விதானமே இருக்கிறது. ஆனால் மூன்று மூல கிரந்தங்களில் உள்ள நோக்கம், எண்ணம் எல்லாம் ஒரே தந்தை (கடவுள்) சமாச்சாரத்தை தெரியப்படுத்தியிருந்தாலும், அந்த சமாச்சாரம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அர்த்தமானது. மூல கிரந்தத்தில் சொல்லியது போல் எல்லோருக்கும் ஒரே கடவுள் என்று (ஒரே தந்தை) தெரிந்து கொள்ளாமல், மகன்களான மனிதர்கள் மூன்று பேர் மூன்று விதமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவன் தாத்தா, ஒருவன் சித்தப்பா, ஒருவன் சொந்தக்காரன் என்பது போல் இன்று மூன்று மதத்திற்கு சேர்ந்தவர்கள் சொல்லியது ஒரே கடவுள் பற்றிதான், அவர்கள் அந்த கடவுளை வெவ்வேறு எண்ணத்துடன் கணக்கிட்டு யகோவா என்றும், ஒருவன் ராமன் என்றும் மற்றொருவன் அல்லாஹ் என்றும் சொல்கின்றார்கள். மூன்று மகன்கள் தாத்தா, சித்தப்பா, சொந்தக்காரர் என்று வெவ்வேறாக

சொல்லிக் கொண்டாலும் அவர் ஒரே நபர் தான் என்னும், அதன் போலவே இன்று மூன்று சமூகத்திற்கு சேர்ந்தவர்கள், மூன்று பெயரில் சொல்லிக் கொண்டிருப்பவர் ஒரே கடவுள் தான் என்னும், பிரக்ருதியை பரமாத்மாவை நன்றாக தெரிந்தாலும் தாய்மாமன் போல் யோகிகள் சொல்லினாலும், மதம் என்ற வளையத்தில் எல்லோருக்கும் கடவுள் ஒருவர்தான் என்று ஒப்புக் கொள்ளாமல் போகின்றார்கள். யோகியானவர் தாய்மாமன் போல மூன்று மதங்களுக்கு சமமான சம்மந்தம் கொண்டு இருந்து, மூன்று நபர்கள் நன்மைக்காக **"நீங்கள் தவறாக மோசபோகின்றீர்கள் உங்களுக்கு அர்த்தமானது உண்மை அல்ல. தாயுடைய வார்த்தை நீங்கள் சரியாக அர்த்தம் செய்து கொள்ளாதது போல், மூல கிரந்தத்தில் இருக்கின்ற வாக்கியங்கள் நீங்கள் சரியாக அர்த்தம் செய்து கொள்ளவில்லை என்னும்"** சொல்லினாலும் யோகி உடைய வார்த்தை கேட்கவில்லை. யோகியானவர் அவர்களை விட முதலில் இருந்து பிரக்ருதி பரமாத்மா விஷயங்கள் தெரிந்தவர் என்னும், அவர்களிடம் சம்பந்தப்பட்டவர் என்னும், அவருக்கு தன்னுடைய கடவுள் (தந்தை) விஷயம் முழுமையாக தெரியும் என்பதை யாரும் கிரகிக்காமல், ஹிதம் (ஞானம்) சொல்லும் யோகி வார்த்தைகளை கணக்கிடாமல் போகின்றார்கள். இறுதிக்கு மாமா போல் இருக்கின்ற யோகியானவர் சொல்லியது மதத்திற்கு சம்பந்தமில்லாத ஞானம் என்றும், தவறாகுவதற்கு இடம் இல்லை என்றும் தெரிந்தவர் எல்லா மதத்திற்கும் கடவுள் ஒருவர் தான் என்று அங்கீகரிப்பார். அப்படி தந்தையான கடவுள் மற்ற எல்லோருக்கும் கூட கடவுள் ஒருவர் தான் என்று தெரிந்ததால், கடவுள் (தந்தை) சொத்தாக இருக்கின்ற பரத்தை (மோக்ஷத்தை) அடைவான். தாய் போன்ற மூல கிரந்தங்களில் சொல்லிய பிரவக்தர்கள் வார்த்தைகளை தவறாக அர்த்தம் செய்து கொண்டவர்கள் தாங்கள் தெரிந்து கொண்ட கடவுள் வேறு என்னும், வேறவர்கள் கடவுள் வேறு என்னும், நினைப்பதால் வேறு மதங்களுக்கு சேர்ந்த கடவுளை தன்னுடைய கடவுளாக, தன்னுடைய கடவுளே வேறு மத கடவுள் ஆக ஒப்புக் கொள்ளாமல் போவதினால் அவர்களுக்கு மோக்ஷம் அல்லது பரம் கிடைக்காது.

இந்த நாள் பூமி மீது மனிதர்கள் எல்லோரும் ஒரே கடவுளினால் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும், மனிதர்கள் மதமாக பிரிந்து போய், உங்கள் கடவுள் எங்களுடைய கடவுள் அல்ல,

எங்களுடைய கடவுள் உங்களுடைய கடவுள் அல்லவென்று சொல்லுகின்றார்கள். ஒரு மதத்தில் இருக்கின்ற கடவுளை மற்றொரு மதத்திற்கு சேர்ந்தவர்கள் பொறாமையாக பார்க்கின்றார்கள். யகோவாவை ஒப்புக் கொள்ளாதவர்கள் கடவுள் அல்லாஹ் தான் என்று சொல்கின்றார்கள். சிலர் அல்லாஹ் கடவுள் அல்லவென்று ராமர் தான் கடவுள் என்று சொல்கின்றார்கள். மற்றொருவர்கள் இவர் இருவரும் அல்ல உண்மையான கடவுள் யகோவா தான் என்று சொல்கின்றார்கள். ஒரே தந்தை மூன்று மகன்களுக்கு ஒருவருக்கு தாத்தாவாக, ஒருவருக்கு சித்தப்பா, ஒருவருக்கு சொந்தக்காரர் என்னும் தெரிந்தது போல், ஒரே கடவுள் மூன்று மதத்தினருக்கு மூன்று பெயரில் தெரிகின்றார். வாஸ்தவமாக மூன்று மகன்கள் நினைத்த மூன்று பெயர்கள் அவர்களுடைய தந்தைக்கு எப்படி பொருந்தாதோ, அதன் போலவே மூன்று மதத்தினர்களும் நினைத்துக் கொண்ட விதானம் கடவுளுக்கு பொருந்தாது. எதற்கு என்றால் கடவுளுக்கு ரூபம், பெயர், வேலை இந்த மூன்றும் இல்லை. அதனால் கடவுளை ரூபம், நாமம், வேலை இல்லாதவர் என்று சொல்கின்றார்கள். இந்த சத்தியத்தை தெரியாதவர்கள் கடவுள் பலான உருவத்தில் இருக்கிறார் என்னும் சிலர், பலான பெயரில் இருக்கிறார் என்னும் சிலர், பலான வேலை செய்கின்றார் என்று சிலர் சொல்கின்றார்கள். அவர் நினைத்துக் கொண்டது சத்தியம் அல்லவென்று அவர்களுக்கு தெரியாமல் போனதினால், உண்மையான, சத்தியமான கடவுளை மதத்தில் இருக்கின்றவர்கள் தெரியாமல் இருக்கின்றார்கள். பிரக்ருதி விதானம், பரமாத்மா விதானம் தெரிந்த யோகி ஆனவர் மதத்திற்கு அதீதமான ஞானத்தை சொல்லினாலும் சிலர் கிரகிக்காமல் இருக்கின்றார்கள். யாராவது கிரகித்தால் உண்மையான சத்தியத்தை தெரிந்து கொண்டால் அவர்கள் சுலபமாக மோக்ஷத்தை அடைவார்கள். எது பூமி மீது இருக்கின்றதோ அது எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது. பூமி, ஆகாசம், நடுவில் காற்று, அக்னி, நீர் அவற்றை ஆதாரம் செய்து கொண்டு வாழ்கின்ற சமஸ்த ஜீவ ராசிகள், சமஸ்த பொருட்களும், சமஸ்த வாகனங்கள் முதலியன எல்லாம் சிருஷ்டிக்கப்பட்டது தான். சமஸ்தத்தை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தா ஒருவர் இருக்கிறார். அவர்தான் கடவுள். எல்லோரும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவர் தான், இருந்தாலும் சிருஷ்டிகர்த்தா எப்படி இருக்கிறாரோ யாருக்கும் தெரியாது. எப்போது நாம் அவரால் பிறக்கப்பட்டோமோ, அப்போதிருந்து அவர் நம் எல்லோருக்கும் தந்தை ஆனார். அதனால் அவரை ஜெகத் பிதா என்று சொல்லலாம். தந்தை

என்றால் காரணமானவர், தாய் என்றால் காரியம் ஆனது. எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் காரணமானவர் பிரக்ருதியை சிருஷ்டித்து, பிரக்ருதியை காரியமாக செய்து கொண்டு சர்வத்தை சிருஷ்டித்தார். பிறந்த மனிதனுக்கு சிறிய வயதிலிருந்து பிரக்ருதி பஞ்சபூதங்களாக தெரிந்து கொண்டே இருக்கிறது. ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி, இந்த ஐந்து பாகங்கள் பிரக்ருதி தான். "ஜெகத் மாதா" என்று யாருக்கும் தெரியாது. பிரக்ருதி தெரிந்து கொண்டிருந்தாலும், பிரக்ருதி நம் தேகத்தில் குண உருவம் கொண்ட மாயாவாக இருந்து மனிதனை கண்காணித்து, தன்னுடைய கணவனான பரமாத்மாவுக்கு இஷ்டம் கொண்டவர்களை கடவுள் பக்கம் போகும்படி செய்து, இஷ்டம் இல்லாதவரை தெய்வ மார்க்கத்தில் இருப்பது போல் பிரமிக்க செய்து, தன்னுடைய மாயாவை தாண்டாமல் செய்கின்றது. பிரக்ருதி ஜெனித்தமான (பிரக்ருதியில் இருந்து பிறந்த) த்ரீ குண ரூபமான மாயாவை தெய்வ ஞானம் இல்லாத மனிதன் தாண்டி போகவே முடியாது. மாயாவை தாண்டுவது துஷ்சாத்தியம். அதனால் ஞானியான போத்துலூரி திரு வீர பிரம்மம் அவர்கள் தன்னுடைய தத்துவங்களில் த்ரீ குண ரூபம் கொண்ட மாயாவின் நோக்கத்தை பற்றி **"மூன்று கால்வாய்கள் தாண்ட முடியாது அண்ணா. இப்படி மூடநம்பிக்கை உள்ள மனிதர்கள் மூன்று கால்வாய்கள் தாண்ட முடியாது அண்ணா"** என்று தத்துவத்தை சொல்லினார்.

தாமச, ராஜச, சாத்விகம் என்னும் மூன்று குணங்கள் கூடி கொண்ட மாயாவை ஜெயிக்க வேண்டும் என்றால், முதலில் மனிதனுக்கு தெய்வ ஞானம் தெரிந்து கடவுளுடைய தர்மங்கள் சம்பூர்ணமாக கிரகித்து இருக்க வேண்டும். கடவுள் தர்மம் சிறிதளவு கூட சரியாக தெரியாமல் போனால், வேறு எண்ணத்துடன் அர்த்தம் செய்து கொண்டால் தர்மம் அதர்மமாக அர்த்தம் ஆகி மாயாவுக்கு நல்ல வாய்ப்பு கொடுத்ததாகும். கடவுள் தர்மங்களில் எந்த ஒன்றும் சரியாக தெரியாமல் போனால் மனிதனை கடவுள் பக்கம் போகவிடாமல், தனக்குத் தெரிந்தது தான் தர்மம் என்று நம்ப வைத்து, கடவுளுக்கு தூரமாக அனுப்பும். எந்த மனிதனும், எவ்வளவு பெரிய ஞானியாக இருந்து பெயர் வாங்கினாலும், கடவுளுடைய தர்மங்களை சரியாக தெரியாதவனை தன்னுடைய கேட்டில் இருந்து (துவாரத்திலிருந்து) மாயா விடாது. அப்படிப்பட்ட போது தன்னுடைய தர்மங்கள் பூமி மீது எல்லோருக்கும் தெரியும்படி கடவுள் முன்பே சிருஷ்டி ஆதியிலேயே சொல்லி

வைத்தார். கடவுள் ஆதியில் சொல்லிய தன்னுடைய தர்மங்களை தெரிந்து கொள்வது மனிதன் இஷ்டத்தால் ஆதாரப்பட்டு இருக்கும். உலகம் விதானம் எல்லாம், உலக காரியம் எல்லாம் மனிதனுடைய கர்மம் மீது ஆதாரப்பட்டு நடக்கின்றது. ஆனால் ஒரு தெய்வ ஞானம் மட்டும் கர்மத்திற்கு அதீதமானது, மனிதன் ஸ்ரத்தா அஸ்ரத்தா (ஆர்வம் ஆர்வம் இல்லாமல்) மீது ஆதாரப்பட்டு இருக்கிறது. மனிதனுக்கு தெய்வ ஞானம் மீது எவ்வளவு ஆர்வம் இருந்தால் அவ்வளவு தெரிந்து கொள்ளுவார்கள். அதனால் பகவத்கீதாவில் ஞான யோகம் என்னும் அத்தியாயத்தில் 39 ஆவது சுலோகத்தில் "ஸ்ரத்தாவான் லபதே ஞானம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு அவரவர் ஆர்வத்தை பொறுத்து ஞானம் கிடைக்கும். அதன் போலவே அவரவர் கர்மத்தை பொறுத்து கஷ்ட சுகங்கள் கிடைக்கும். **கர்மத்தை பொறுத்து உலக பிராப்த பிராப்தங்கள், ஆர்வத்தை பொறுத்து தர்மா தர்மங்கள் கிடைக்கும் என்று தெரிகின்றது.**

மனிதன் கடவுளிடம் சேருவதற்கு தேவைப்படும் தர்மங்கள் எல்லாவற்றையும் கடவுளே சிருஷ்டி ஆதியில் தெரிவித்த போது, மனிதன் ஆர்வம் இல்லாததால் அது காலம் கடந்து கொண்டிருக்கும்போது அதர்மங்களாக மாறிப்போனது. பக்தி மற்றும் ஆன்மீக விதானத்தில் மனிதன் தர்மங்கள் என்று நினைத்துக் கொண்டு அதர்மங்களை அனுசரித்தார். இங்கு சிலர் ஒரு கேள்வி கேட்கலாம். அது என்னவென்றால்! "கடவுள் தர்மங்கள் தெரிவித்தார் அல்லவா! அதர்மங்களை யார் தெரிவித்தார்கள்?" என்று கேள்வி கேட்கலாம். அதற்கு எங்களுடைய பதில் என்னவென்றால்! கடவுள் தெரிவித்த தர்மங்களை அர்த்தம் செய்து கொண்டால் அது தர்மங்களாகவே இருக்கும். ஒருவேளை மனிதன் ஆர்வம் இல்லாமல் போனால் அவற்றினை தவறாக நினைத்துக் கொண்டால் தர்மங்களே அதர்மங்களாக மாறிப்போகும். அதர்மங்களை யாரும் சிருஷ்டிக்கவில்லை. தர்மங்களில் இருந்து அதர்மங்கள் வருகின்றது. **கடவுள் சொல்லி போன பிறகு தர்மங்களை பற்றி மறுபடியும் சொல்லுபவர் இல்லாதபோது, மனிதன் தன் ஆர்வம் இல்லாமல் போனதனால் தர்மங்கள் பூர்த்தி விவரம் தெரிந்து கொள்ளாத போது, தர்மங்களே அதர்மங்களாக மாறிப் போகின்றது.** பிறகு போதிக்கின்ற போதிப்பவரால் அதர்மங்களே பிரச்சாரம் ஆகின்றது. அப்போது தர்மங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு, அதர்மங்கள் அபிவிருத்தி ஆகிப்போகின்றது.

அப்படிப்பட்ட நேரத்தில் கடவுளே தன்னுடைய தர்மங்களை மறுபடியும் சொல்லி, அதர்மங்களை கண்டிக்கப்பட வேண்டியது இருக்கும். கடவுளுடைய தர்மம் பிரகாரம் கடவுள் வேலை செய்யாதவர் என்னும், வேலை இல்லாதவர் என்று சொல்லிக் கொண்டோம். அதனால் கடவுள் மனிதனுக்கு தர்மங்களை பற்றி தெரிவிக்கும் வாய்ப்பே இல்லை. ஆனால் எப்படி அதர்மங்கள் குறைந்து போய் தர்மங்கள் மறுபடியும் மேல் வரும் என்று கேள்வி வரலாம். அதற்கு பதில் இந்த விதமாக இருக்கிறது.

அதர்மங்களாக மாறிப்போன அவற்றை மறுபடியும் தர்மங்களாக நிலை நாட்டுவதற்கு, கடவுள் மூன்று விதானத்தை முதலிலேயே ஏற்பாடு செய்து வைத்தார். சிருஷ்டி தயார் செய்தபோது இந்த மூன்று விதானத்தை கூட தயார் செய்து வைத்தார். கடவுள் தர்மம் என்னவென்று கடவுளுக்கு தவிர யாருக்கும் தெரியாது. அதனால் கடவுளுடைய விதானங்களை (தர்மங்களை) எந்த மனிதனும் சொல்ல முடியாது. எல்லாம் தெரிந்த கடவுள் கூட தன்னுடைய தர்மங்களை யாருக்கும் சுயமாக சொல்ல மாட்டார். இந்தப் பக்கம் மனிதனும் சொல்லாமல், அந்தப்பக்கம் கடவுளும் சொல்லாமல் போனால் தர்மங்கள் எப்படி தெரியும் என்று சந்தேகம் வரும். அதற்கு பதிலாக கடவுள் தர்மங்களை தெரிவிப்பதற்கு மூன்று விதானத்தை நிர்ணயித்து வைத்தார் என்று நாம் முதலிலேயே சொல்லிக் கொண்டோம் அல்லவா! அதன் பிரகாரம் ஒன்று பகவானாக, இரண்டு பிரவக்தாவாக, மூன்று ஆதர்ணகர்த்தாவாக வந்தவர், கடவுள் தர்மங்களை தெரிவிக்கும் படி கடவுளுடைய நிர்மாணம் இருக்கிறது. இந்த விதமாக குறைந்து போன தர்மங்கள் மறுபடியும் முதலில் இருந்த ஸ்தானத்திற்கு கொண்டு வருவதற்கு கடவுளுடைய அம்சம் மூன்று விதமாக வரவேண்டியது இருக்கும். கடவுளுக்கு கணக்கில்லாத கோடிக்கணக்கான கோடி அம்சங்கள் இருக்கிறது. அதில் ஒரு அம்சம் மட்டும் மூன்று விதமாக ஜென்மம் எடுத்து, கடவுளுடைய தர்மங்கள் தெரிவிக்கும். ஒரு தடவை பூமி மீது தர்மங்கள் முழுமை நிலையில் மறுபடியும் வரவேண்டும் என்றால் கடவுளுடைய அம்சம் (கடவுள் அல்ல) மூன்று விதமாக ஜென்மம் எடுத்து சொல்ல வேண்டியது இருக்கும். பிரவக்தா, பகவான், ஆதர்ணகர்த்தா என்பவர்கள் சாதாரணமான மனிதன் அல்ல. அவர்கள் கடவுளுடைய அம்சத்தில் கூடி பிறந்தவர்கள். இப்போது நமக்கு தெரிந்த சமாச்சாரம் பிரகாரம் முதல் பகவான் வந்தார்,

பிறகு பிரவக்தா வந்தார். இனி ஆதர்ணகர்த்தாவுடையது வருகை. பகவான் பிறகு மூன்று ஆயிரம் வருடங்களுக்கு பிரவக்தா வந்த, பிறகு ஆதர்ணகர்த்தா எப்போது வருவார் என்று சொல்ல முடியாது. ஆதார்ணகர்த்தாவால் சம்பூர்ணமாக கடவுளுடைய தர்மங்கள் மறுபடியும் நிலைநாட்டப்படும். கடவுளுடைய அம்சம் மூன்று தடவையாக, மூன்று காலத்தில், மூன்று அசாதாரணமான நபராக, பூமி மீது வருகின்றது என்று தெரிகின்றது.

கடவுள் பிறக்காதவரானாலும் கடவுள் அல்லாமல் கடவுளுடைய சக்தியே கோடிக்கணக்கான கோடி கேலரிகளாக (பாகங்களாக) பிரித்தால் அதில் உள்ள ஒரு கேலரி சக்தி (அம்சம்) மூன்று வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு பகுதிகளில், வெவ்வேறு ஜாதிகளில், வெவ்வேறு பெயரில் பிறக்கின்றது. அதன் போல பகவானாக, பிரவக்தாவாக, ஆதர்ணகர்த்தாவாக, பிறந்த தெய்வ அம்சம் முழுமையாக தர்மங்களை மறுபடியும் நிலைநாட்டுவார். பகவான் ஆனாலும், பிரவக்தானாலும், ஆதர்ணகர்த்தா ஆனாலும் வந்தபோது அவர்கள் சாதாரண நபராக இல்லாமல் இருந்தாலும், அவர்களும் கூட எல்லோர் போல் ஜென்மம் எடுத்து குழந்தை திசையில் இருந்து வளர்ந்து சாதாரண மனிதன் போல் வருகின்றார்கள். அவர்களுக்கு கூட தாய் தந்தைகள் ஒவ்வொரு ஜென்மத்தில் இருக்கின்றார்கள். இங்கு உங்களுக்கு கேள்வி வராமல் இருந்தாலும் எனக்கு ஒரு கேள்வி வந்தது. அது என்னவென்றால்! பிறந்தவர்கள் சாதாரண மனிதன் அல்ல அல்லவா! அவர்கள் கடவுளுடைய அம்சத்தில் பிறந்தவர்கள் அல்லவா! கடவுளே எல்லோருக்கும் தந்தையாகும் போது கடவுள் அம்சத்திற்கு கூட அதே தர்மம் பொருந்தும் அல்லவா! அப்படிப்பட்டபோது பிறந்த பகவானுக்கும், பிறந்த ஆதார்ணகர்த்தாவுக்கும், பிறந்த பிரவக்தாவுக்கும் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தை இருப்பார்களா? அவர்கள் தேகம் அணிந்து ஒரு ஜோடிக்கு பிறந்த போது அவருக்கு அந்த ஜோடிகள் தாய் தந்தைகள் ஆகுவார் அல்லவா! அப்படிப்பட்டபோது தந்தையாக (கடவுளாக) இருக்கின்றவருக்கே தந்தை இருப்பாரா? இந்த கேள்விகள் என்னுடையது தான் பதில் சொல்ல வேண்டியவர் எனக்கு நெருங்கி உள்ள தேகத்தில் இருக்கின்ற என்னுடைய ஆத்மா தான். இப்போது என்ன சொல்கின்றதோ பார்க்கலாம்.

தெய்வம், தெய்வாம்சம் கொண்ட ஒரே தர்மங்களாக இருக்கின்றது. கடவுள் கடவுளாக இருந்தாலும், ஒரு அம்சமாக

இருந்தாலும் தன்னுடைய தர்மத்தை இழக்காது. அதனால் தந்தை எப்போதும் தந்தையாகவே இருப்பார். தந்தை எப்போதும் தன்னுடைய தர்மங்களை இழந்து போய் வேறவருக்கு குழந்தையாக மாற மாட்டார். அதனால் கடவுள் அம்சம் கொண்ட பகவானுக்கும், பிரவக்தாவுக்கும், ஆதர்ணகர்த்தாவுக்கும் தேகம் தந்தை இருக்க மாட்டார். அவர்கள் வேறு மனிதர்கள் போலவே தந்தை வீரியத்தினால் பிறக்கமாட்டார்கள். அதுமட்டுமல்லாமல் தாய் கர்ப்பத்தில் இருந்து எல்லோரும் நிர்ஜீவமாக பிறக்கும்படி பிறக்காமல் கர்ப்பத்தில் இருந்து சஜீவமாக பிறப்பார். பூமி மீது உள்ள சாதாரண மனிதர்கள் எல்லோரும் தந்தை வீரியத்தினால், தாய் அண்டத்தால் பிறக்கின்றார்கள். ஆனால் கடவுள் அம்சம் பிறந்த போது அவருடைய தேகம் தந்தையுடைய விந்துவினாலும், தாயின் அண்டத்தாலும் சம்பந்தமில்லாமல் பிறப்பார். தந்தை விந்தால் பிறக்காதபோது அவருக்கு தந்தை என்பவர் இருக்க மாட்டார். ஒருவேளை அப்படி பிறந்தாலும் தெய்வாம்சத்தை உன் தந்தை யார்? என்று கேட்டால் அவர் ஒரு மனிதனை தன்னுடைய தந்தை என்று சொல்லாமல் கடவுளை தந்தையாக சொல்வார். இதனைப் பொறுத்து பகவானுக்கும் பிரவக்தாவுக்கும் ஆதரணகர்த்தாவுக்கும் தேகம் தாய் தந்தைகள் இருக்க மாட்டார்கள் என்று தெரிகின்றது. அப்படிப்பட்டவரை **“சுயம்பு”** என்று சொல்வார்கள். சுயம்பு என்றால் சுயமாக பிறப்பவர் என்னும், அல்லது தனக்குத் தானே பிறந்தவர் என்று அர்த்தம். தாய் தந்தை என்பவர்கள் சாதாரண மனிதர்களுக்கு மட்டும் இருப்பார் என்னும், அசாதாரணமான பகவானுக்கும், பிரவக்தாவுக்கும், ஆதர்ணகர்த்தாவுக்கும் இருக்க மாட்டார் என்று தெரிகின்றது. சாமான்யமான மனிதன் தேகத்திற்கு தற்காலிகமான தாய் தந்தை இருப்பார்கள். ஆனால் எல்லோருக்கும் நிரந்தரமான தாய் தந்தைகள் பிரக்ருதி பரமாத்மா தான் என்று தெரிகின்றது.

இதுவரை நமக்கு தெரிந்த சமாச்சாரத்தை பொறுத்து துவாபரயுகம் இறுதியில் பகவான், கலியுகத்தில் பிரவக்தாவாக வந்து போனதாக தெரிகின்றது. பிரவக்தாவாக ஜென்மம் கணவன் தொடாமல் கன்னியா கர்ப்பத்திலிருந்து நடந்தது. மேலும் பிரவக்தாவாக பிறந்தவர் தந்தை விந்தால் பிறக்கவில்லை என்று தெரிகின்றது. இனி போனால் பகவானான ஸ்ரீகிருஷ்ணர் பிறந்த போது வசுதேவன், தேவகிதேவி தாய் தந்தையாக இருந்தார் அல்லவா! என்று யாருக்காவது சந்தேகம் வரலாம்.

அதுமட்டுமல்லாமல் ஸ்ரீ கிருஷ்ணர் தேவகிதேவிக்கு அஷ்டம (8) சந்தானம் அல்லவா! என்பதும் கூட கேட்கலாம். கிருஷ்ணர் அஷ்டம சந்தானம் ஆனாலும், தந்தை விந்தால் இல்லாமல் சுயமாகப் பிறந்தவர், அதன் போலவே தாய் அண்டம் விடுதலை ஆகாதற்கு முன்பே ஏழு நாட்கள் பிறகு தேவகிதேவிக்கு கர்ப்பம் வந்த விஷயம் யாருக்கும் தெரியாது. கிருஷ்ணர் ரிஷப லக்னம் ஜாதகத்தை (ஜாபதக்கத்தை) பொறுத்து தாய் மாதவிடாய் பிறகு ஏழு நாட்கள், ஏழு மணி நேரத்திற்கு கிருஷ்ணருடைய தேகம் தயாராகுவதற்கு ஆரம்பித்தது என்று சொல்லலாம். தாய் அண்டம் 14 நாட்கள் பிறகு விடுதலை ஆகும். அண்டம் விடுதலை ஆகாதற்கு முன்பே கிருஷ்ணருடைய ஜென்மம் ஆரம்பமானது. அதனால் கிருஷ்ணருக்கு தாய் தந்தை இல்லை என்று சொல்லலாம். கிருஷ்ணர் தேவகி தேவி கர்ப்பத்திலிருந்து பிறந்திருந்தாலும் உலக பார்வையில் தேவகி தேவி தாயாக சொல்லப்பட்டிருந்தாலும், தந்தையாக வசு தேவனை சொல்லினாலும், அவர் கடவுளுடைய அம்சத்தால் பிறந்தவரானதினால் அவருக்கு தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தை இல்லை. அதன் போலவே தெய்வ தர்மங்கள் பிரகாரம் கிருஷ்ணருக்கு ஆத்ம சம்பந்தமான தாய் தந்தைகளும் இல்லை. தர்மத்தை அனுசரித்து பார்த்தால் அவரே எல்லோருக்கும் தந்தை ஆகுவார். பிரவக்தாவுக்கும், பகவானுக்கும், ஆதர்ணகர்த்தாவுக்கும் மேல் பார்வையில் தேகம் தாய் தந்தை இருந்தாலும் வாஸ்தவமாக அவர்கள் தாய் தந்தை அல்லவென்று சொல்லலாம். அதன் போலவே தெய்வ ஞானம் பிரகாரம் நம் எல்லோருக்கும் தந்தை பரலோகத்தில் இருக்கிறார் என்று பிரவக்தாவும், பகவானும், ஆதர்ணகர்த்தாவும் மேல் பார்வையில் பேசினாலும் அந்த வார்த்தை நமக்கு பொருந்தும், அவர்களுக்கு பொருந்தாது. வாஸ்தவமாக சூத்திரம் பிரகாரம் அவரே ஜெகத்திற்கு தந்தையாகும் போது, அவருக்கு தந்தை இருக்கிறார் என்பது அசத்தியமாகும். ஒருவேளை பிரவக்தா என்னுடைய தந்தை பரலோகத்தில் இருக்கிறார் என்று சொல்லினாலும் அது நமக்கு மார்க்கத்திற்கு தான் தவிர வேறு அல்ல. அதனால் உன்னுடைய தந்தை பரலோகத்தில் இருக்கிறார் என்னும் ஒரு சந்தர்ப்பத்தில் அவரே தெரிவித்தார். மொத்தம் மீது **கடவுளுக்கும், கடவுளின் அம்சத்திற்கும், தேகம் தாய் தந்தையும், ஆத்மா தாய் தந்தையும் இருக்க மாட்டார்.** பூமி மீது மனிதர்களுக்கு இரண்டு ரகமான தாய் தந்தைகள் இருக்கின்றார் என்ற விஷயமே தெரியாது. இரண்டு ரகமான தாய் தந்தை

சமாச்சாரம் ஐந்தாயிரம் வருடம் பூர்வம் பகவானாக வந்த கிருஷ்ணர் பகவத்கீதாவில் கூறினார். பிறகு 2000 வருடம் பூர்வம் பிரவக்தாவாக வந்தவர் பைபிளில் கூறினார். தற்போது காலத்தில் நாங்கள் கூட பல தடவை இரண்டு ரகமான தாய் தந்தைகளைப் பற்றி சொல்லுவது மட்டுமல்லாமல் இப்போது சிறிய கிரந்தமாக **"தாய் தந்தை"** என்ற பெயர் வைத்து எழுதுகின்றோம். நாங்கள் சொல்லுவது மட்டுமல்லாமல் வரும் ஆதர்ணகர்த்தாவும் கூட இந்த விஷயத்தை சொல்லுவார் என்று நினைத்துக் கொள்கின்றோம். தாய் தந்தை யார் என்ற விஷயம் ஒவ்வொரு மனிதனுக்கும் சம்பந்தப்பட்ட விஷயம். ஒவ்வொரு மனிதனும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். ஒவ்வொரு மனிதனும் தன் தேகத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் தந்தையை, தன்னுடைய தாய் தந்தையாக தவறாக நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் தனக்கு முதலில் இருந்த தாய் தந்தை பற்றி முழுமையாக மறந்து போனார்கள். தன்னுடைய நிரந்தரமான தாய் தந்தை விஷயம் தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்தால், அதுவே ஆன்மீகமாகும். ஆன்மீகம் என்று சொல்லினாலும், ஞான மார்க்கம் என்று சொல்லினாலும் அது தன்னுடைய தாய் தந்தையை பற்றி தெரிந்து கொள்வது தான் தவிர வேறு அல்ல. தெரிகின்ற தாய் தந்தைகள் எல்லோருக்கும் தெரியும், மற்றும் தெரியாத தாய் தந்தைகள் யாருக்கும் தெரியாது. **தெரியாத தாய் தந்தைகளை தெரிந்து கொள்வது ஜீவித சாதனை.**

தாய் என்றால் காரியம் ஆனது, தந்தை என்றால் காரணமானவர் என்று அர்த்தம் சொல்லிக் கொண்டோம். அதன் போலவே ஜெனனி என்றால் பிறக்க வைப்பது, ஜெனகா என்றால் பிறக்கும்படி செய்பவர். **மாதா** என்றால் உன்னை வளர்த்துவது, **பிதா** என்றால் எல்லோரையும் வளர்த்துபவர் என்று கூறப்படுகிறது. இந்த விதமாக தாய் தந்தை என்னும் சொல்லினாலும், ஜெனனி ஜெனகன் என்னும் சொல்லினாலும், மாதா பிதா என்று சொல்லினாலும் ஆத்ம சம்பந்தமான அர்த்தம் கொடுக்கின்றது. தேகம் சம்பந்தமான அர்த்தம் இப்போது சொல்லிக் கொண்ட எந்த சொல்லிலும் இல்லை. ஆனால் இதுவரை நம் புராணத்திலும், சில சுவாமிஜிகள் சொல்லுவதிலும், தேவதைகள் கதையிலும், அதிகமாக தேகம் தாய் தந்தையைப் பற்றி தான் வந்தது. ஒரு மனிதன் ஜென்மம் எடுப்பதற்கு காரிய காரணமான தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாவை பற்றி யாரும் எங்கும்

சொல்லவில்லை. அதனால் எல்லோருக்கும் தேகம் தாய் தந்தை தவிர, ஆத்ம சம்பந்தப்பட்ட தாய் தந்தை தெரியாது. **நம்முடைய புராணங்கள், தேகம் தாய் தந்தை மீது பக்தி வளர்த்தது தவிர, தெரியாத தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாவின் மீது பக்தியை வளர்க்கவில்லை. இப்போது புராணங்களுக்கு வேதங்களுக்கு அதீதமாக இருக்கின்ற ஞானத்தால் நிரந்தரமான தாய் தந்தையை பற்றி தெரிந்து கொள்வதற்கு முயற்சி செய்வோம்.** சர்வ ஜெகத்துக்கு உருவத்தை கொடுத்த பிரக்ருதி மாதாவை, சர்வ ஜெகத்துக்கு சிருஷ்டிக்கு காரணமான தந்தை பரமாத்மாவை பற்றி தெரிந்து கொள்வதினால் நமக்கு வருகின்ற லாபம் என்ன? வென்று யோசனை செய்தால், அவர்களினால் வருகின்ற லாபம் மிகப்பெரிய லாபம் என்று சொல்லலாம். அதன் போலவே தேகம் தாய் தந்தையினால் என்ன வருகின்றதோ சிறிது விவரித்துக் கொள்ளலாம்.

தேகத்தை அணிந்து பிறந்த போது முதல் ஆகாரத்தை பால் வடிவத்தில் கொடுத்து வளர்த்துவது தாய் தான். அதனால் ஒவ்வொரு குழந்தைக்கு தாய் முதலில் தெரியப்படுகின்றது. குழந்தை பருவத்தில் தந்தை விஷயம் குழந்தைக்கு தெரியாது. அந்த திசையில் குழந்தைக்கு மிக நெருக்கமானவள் தாய் மட்டும் தான். தாய் தவிர யாரும் தெரியாத நிலையில் இருந்து சிறிது வளர்ந்த பிறகு மற்ற சிலர் அறிமுகம் ஏற்பட்டு அப்போது கூட பலானவர் என்னுடைய தந்தை என்று தெரியாது. சிசு பருவத்திலிருந்து குழந்தை பருவம் சென்ற பிறகு இவர்தான் தந்தை என்று தெரியும். இந்த விதமாக சிறிய வயதிலேயே தாய் முதல், தந்தை பின்பு தான் தெரியப்படுகின்றார். சிறிய வயதில் தாய்க்கு அதிக நெருக்கமாக இருந்த மனிதன், இளம் வயதில் இருந்து தந்தைக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்து வருவான். 30 அல்லது 40 வருடத்திலிருந்து தாயை விட தந்தைக்கு முழுமை நெருக்கமாக மாறி போகுவான். சிறிய வயதில் தாய் எல்லாவிதமாக வளர்த்தினாலும், தந்தை தூரமாக இருந்தாலும், பெரிய வயதில் மட்டும் தாயை தூரம் செய்து தந்தைக்கு நெருக்கமாகுவது சகஜமாக நடக்கின்றது. மனிதன் ஜீவிதத்தில் முதல் தாய்க்கு, பிறகு தந்தைக்கு முக்கியத்துவம் இருந்தாலும், சிலர் மட்டும் தன் ஜீவிதத்தில் தந்தை விட தாய்க்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களும் கூட இருக்கின்றார்கள். யார் எப்படி இருந்தாலும் அவர் தேகம் தாய் தந்தைக்கு நெருக்கமாக

இருக்கின்றார் என்னும், அவர்கள் பற்றி தெரிந்து கொண்டிருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. தேகம் தாய் தந்தையை கௌரவமாக பார்த்து அவரை வளர்த்தால், அதனினால் வரும் பலன் புண்ணியம். அதன் போலவே அவர்களை அகௌரவமாக பார்த்து தூசித்தால் அதனினால் தவறாமல் பாவம் வந்து தீரும். இந்த விதமாக பௌதிக தாய் தந்தை மீது மனிதன் நடவடிக்கையை பொருத்து பாவம் புண்ணியங்கள் வருகின்றது. பாவ புண்ணியங்களை கலந்து கர்மம் என்று சொல்கின்றோம். மனிதனுக்கு சம்பந்தப்பட்ட எந்த கர்மமாக இருந்தாலும் மனிதன் அனுபவிக்க வேண்டியது தான். அதன் போல ஒரு ஜென்மத்தில் செய்து கொண்ட கர்மத்தை பிறகு ஜென்மத்தில் அனுபவிக்க வேண்டியது இருக்கும். கர்மத்தை அனுபவிப்பதற்கு ஜென்மங்கள் எடுக்க வேண்டியது இருக்கும். மொத்தம் மீது பௌதிக தாய் தந்தையினால் பாவ புண்ணியங்கள் சம்பாதிப்பது அவற்றை அனுபவிப்பதற்கு ஜென்மம் எடுப்பது நடக்கிறது. தேகம் தாய் தந்தையினால் ஜென்மத்திலிருந்து வெளிப்படாமல் ஜென்மத்திலேயே மனிதன் சிக்கிக் கொண்டு போகின்றான். **பௌதிக சம்பந்தமான தாய் தந்தையினால் ஜென்மம் வருகின்றது மற்றும் ஜென்மமே இல்லாத லாபம் வருவதில்லை.**

ஆத்ம சம்பந்தம் உள்ள தாய் தந்தையான பிரக்ருதி பரமாத்மாவை மனிதன் ஜீவிதத்தில் எதுவரை தெரிந்து கொண்டான் என்று யோசனை செய்தால், மனிதன் பிறந்ததிலிருந்து மரணிக்கும் வரை பிரக்ருதி ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி என்று பஞ்சபூதங்களாக எல்லோருக்கும் தெரிகின்றது. பஞ்சபூதங்களான ஆகாசம், காற்று, அக்னி, நீர், பூமி நம் தேகத்தில் இருக்கிறது என்னும், அவற்றினால் நம் தேகம் நிர்மாணமாக இருக்கிறது என்று பல பேருக்கு தெரியாது. பஞ்சபூதங்களான பிரக்ருதியினால் தேகம் தயாராகி ஒரு உருவம் அடைந்தது என்னும், ஒரு உருவமுள்ள தேகம் தயார் செய்து வைத்தது தாய் தான் என்னும், அந்த விதமாக பிரக்ருதி சர்வ மனிதர்களுக்கு தாய் என்று தெரிகின்றது. சிறிய வயதில் பௌதிக தாய்க்கு மனிதன் நெருக்கமாக இருப்பது போல், ஒவ்வொரு மனிதன் அவருக்கு தெரியாமலேயே பிரக்ருதிக்கு நெருக்கமாக இருக்கின்றான். தெரிகின்றது, கேட்கின்றது ஐந்து இந்திரியங்களுக்கு தெரிகின்றது எல்லாம் பிரக்ருதி தான், ஒவ்வொரு மனிதன் பிரக்ருதிக்கு நெருக்கமாகவே இருக்கின்றான் என்று சொல்லலாம். ஆனால் பிரக்ருதி தனக்கு தேகம்

கொடுத்தாலும் தாய் தான் என்று யாருக்கும் தெரியாது. ஒரு மனிதன் வளர்ந்து பெரியதாகிய பிறகு பௌதிக தாய் விட தந்தைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது போல், மனிதன் தன்னுடைய ஜீவிதத்தில் பெரிய வயது வந்த பிறகு, தன்னுடைய தந்தை பரமாத்மா தான் என்று தெரியாமல் போனதினால், பரமாத்மாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பிரக்ருதி தாய் என்னும், பரமாத்மா தந்தை என்னும் எவ்வளவு வயது வந்தாலும் தெரியாமல் போகின்றான். இந்த விதமாக பூமி மீது 90 சதவீதம் மக்கள் ஜீவாத்மாவான தனக்கு தாய் யார் என்னும், தந்தை யார் என்று தெரியாத நிலையில் இருக்கின்றார்கள். நிரந்தரமான, சத்தியமான தாய் தந்தை தெரிய வேண்டும் என்றால், அவருக்கு சம்பந்தப்பட்ட சமாச்சாரம் மனிதனுக்கு தெரிந்து இருக்க வேணடும். அந்த சமாச்சாரத்தை தெய்வ ஞானம் என்று சொல்கின்றோம். **பூமி மீது தெய்வ ஞானம் தெரியாத மனிதன் யாராக இருந்தாலும், அவனுக்கு நிரந்தரமான தாய் தந்தை தெரியாது.** இன்று சமூகத்தில் தெய்வ ஞானம் என்றாலே சிறிய பார்வை கொண்ட மனிதர்கள் இருக்கின்றார்கள். தெய்வ ஞானி என்றால் அவனை திறமையற்றவராக நினைக்கின்றார்கள். அப்படிப்பட்ட சமூகத்தில் யாருக்கும் தெய்வ ஞானம் மீது ஆர்வம் இல்லாமல் போனது. அதனால் யாருக்கும் கடவுளுடைய ஞானம் என்றால் என்ன, மாயா விளைவு என்றால் என்ன என்னவென்று தெரியாமல் போனது. பூமி மீது எத்தனை மதங்கள் இருந்தாலும், அந்த மதத்தில் சுவாமிகள், போதிப்பவர்கள், குருக்கள் இருந்தாலும் அவர்கள் மதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். குண்டா சாம்பாரில் சிறிய கரண்டியால் தாளித்தது போல் அவர்களுடைய போதனையில் பெயருக்கு மட்டும் தெய்வ ஞானம் இருக்கும். சிலர்கள் அந்த சிறிய ஞானம் கூட கிரகிக்காமல், மத விதானத்திற்கு அதிகம் மதிப்பு கொடுப்பதினால் கடவுளுடைய விதானம் என்னவென்று தெரியாமல் போனது. சிறிது கடவுளுடைய ஞானம் தெரிந்தவர்கள் குறைவாக இருக்கின்றார்கள். அவர்கள் கடவுளை தந்தையாக ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் பிரக்ருதி என்றால் என்ன, பிரக்ருதியில் இருந்து பிறந்த மாயா என்றால் என்ன, மாயா மனிதன் தேகத்தில் எங்கு இருக்கின்றதோ எந்த உருவத்தில் இருக்கின்றதோ மனிதனில் இருக்கின்ற மாயா மனிதனை எப்படி மறைமுகப்படுத்துகின்றதோ சிறிதளவு கூட தெரியாமல் இருக்கின்றார்கள். நாங்கள் கடவுளை நம்புகின்றோம் என்று சொல்பவர்கள், கடவுளை தந்தை என்று சொல்பவர், எங்கள்

மதத்தில் தவிர வேறு மதத்தில் கடவுளை நம்புகின்றவர்கள் குறைவாக இருக்கின்றார் என்று நினைப்பவர் பல பேர் இருந்தாலும், அவர்களுடைய தந்தையை மட்டும் சொல்லுகின்றார்கள் தவிர, தாயைப் பற்றி தெரியாதவர்கள் என்றே சொல்லலாம். தாயைப் பற்றி தெரியாதது தந்தையைப் பற்றி தெரியாது. எதற்கு என்றால் தந்தை யார் என்பது தாய்க்கு மட்டும் தெரியும். கடவுள் யார் என்பது மாய வடிவத்தில் இருக்கின்ற பிரக்ருதிக்கு மட்டும் தெரியும். அதனால் பிரக்ருதியால் தயாரான தேகம் உள்ளே குணரூபமான மாயாவை தெரிந்து, தேகத்தில் தன் யாரோ, எங்கு இருக்கிறேனோ, என்ன செய்கின்றேனோ என்பது தெரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல் தேகத்தில் நடக்கின்ற வேலை யார் செய்கின்றாரோ, தேகம் வெளியில் தேகத்தினால் நடக்கின்ற வேலை யார் செய்கின்றாரோ, மொத்தம் ஞான வடிவமாக தெரிந்து கொள்ள வேண்டும். தேகம் பொறிமுறை எல்லாம் தெரிந்த போது, தாயாக இருக்கின்ற பிரக்ருதி எப்படி இருக்கின்றதோ தெரியும். பிறகு தந்தையான பரமாத்மா எப்படி இருப்பார் என்று தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். உலகத்தில் பௌதிக தந்தையை, தாய் இல்லாமல் எப்படி தெரியப்படாதோ அதன் போலவே **அபௌதிகமான பரமாத்மாவை, மாயாவை பற்றி தெரிந்து கொண்டால் தான் தெரியும். அபௌதிகமான தாய் தந்தை தெரிந்த போது பிறகு பௌதிக தாய் தந்தைக்கு பிறக்க மாட்டான். பிறகு தேகம் அணிந்து ஜென்மிப்பது இருக்காது.** யார் தாயைப் பற்றி தெரிந்து கொள்வானோ அவன் தாயினால் தந்தையிடம் சேர்ந்து போவான். பரலோகத்தில் இருக்கின்ற தந்தையிடம் சேர்வதற்கு தாய்னால் மட்டுமே சாத்தியமாகும். தாயை தெரிந்து கொள்ளாதவன் தந்தையை பார்க்க மாட்டான். தாய் தந்தையை தெரிந்து கொண்டவன் இனி எங்கும் ஜென்மிக்க மாட்டான். அதோடு ஜென்மம் இல்லாமல் போகின்றது. அதுதான் மோக்ஷம் அல்லது முக்தி. எல்லா மதத்தினோர்கள் இந்த விதானத்தில் தந்தையான கடவுளிடம் சேருங்கள் என்று தெரிவிக்கிறோம். **ஓம் மாதா பிதாய நமஹ.**

*********

ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்வதற்கு சாஸ்திரம்
எவ்வளவு தேவையோ, அதன் போலவே
ஒரு விஷயத்தை கண்டிப்பதற்கு சாஸ்திரம்
அவ்வளவு தேவையாகும்.

அசத்தியத்தை ஆயிரம் பேர் சொல்லினாலும்
அது சத்தியம் அல்ல, சத்தியத்தை ஆயிரம் பேர்
அல்லவென்று சொல்லினாலும் அது அசத்தியம் ஆகாது.

உன்னுடைய தாய் யார் என்று உனக்கு தெரிந்தால்
உன்னுடைய தந்தை தெரிவார். உன்னுடைய
தந்தை யார் என்று உனக்கு தெரிந்தால்
உன்னுடைய கம்யம் தெரியும்.